

**மரணம் துரத்தும் வாழ்வு**




**ஒளிந்து கிடக்கும் நாக்குகள்**

மே 15 - மே 21, 2011 May 15 - May 21, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்



# கிடைக்கட்டும் நியாயம்

# இரண்டாவது முள்ளிவாய்க்கால்

## இது சுற்றுலா தேசம் தான்!

நீங்கள் இப்போது
நடந்துகொண்டிருக்கும் வீதியில்தான்
குழந்தையொன்று பின்னந்தலையும்
தாயுமில்லாமல் அழுதே இறந்தது.

நீங்கள் நடவுங்கள்!

நீங்கள் இப்போது பார்க்கும் வீட்டில்தான்
போராளி ஒருத்தியை
நான்கைந்து பேர்
மொழிக் கலப்பற்றுப் புணர்ந்தார்கள்.

நீங்கள் நடவுங்கள்!

நீங்கள் இப்போது
கால் நனைக்கும் கடற்கரையில்தான்
படகில் தப்பியோட முயன்ற
நிறைசூல் பெண் ஒருத்தி
சுடப்பட்டு இறந்துபோனாள்

நீங்கள் நடவுங்கள்!

நீங்கள் இப்போது நிற்கும்
பதுங்கு குழியில்தான்
மேலே செல்லடியில் இறந்த
ஆறு மாதக் குழந்தையைத்
தூக்க இயலாமல்
கையில் துவக்கோடும்
தவிப்போடும் நின்றிருந்தான்
போராளி ஒருவன்.

நீங்கள் நடவுங்கள்!

நீங்கள் இப்போது ஓய்வெடுக்கும் இடம்
அகதி முகாமாய் இருந்தபோது
நீர் பிடிக்கவும் மகனுக்காகவும்
வரிசையில் காத்திருந்த
முதியவர் ஒருவர்
சுருண்டு விழுந்து இறந்தார்

நீங்கள் ஓய்வெடுங்கள்!
நாளை வேறொரு பகுதிக்குச் செல்லலாம்

ஆமாம்
இப்போது இந்நாட்டின்
எல்லாப் பகுதிகளுக்கும் செல்லலாம்
சுற்றுலா தேசம் இது
ஆயினும்
சுற்றிக் காட்டவும் சொல்லிக் காட்டவும்
இக்கதைகள் மாத்திரமே உலவுவதற்கு
நான் ஏதும் செய்வதற்கில்லை!

■ விஷ்ணுபுரம் சரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முள்' வாய்க்கால்

## முள்ளிவாய்க்கால் - ஓர் அறிமுகம்

**1990** களுக்கு முன் இது ஆட்கள் அற்ற வெளி. ஆழ் கடலை மறித்து நிற்கும் நீள் மணற்பரப்பு இதன் எல்லை. அடுத்ததாகப் பரந்து கிடக்கும் வெளியில் அதனை நிரப்பும் பனைகளும், வடலிகளும், பறட்டைத் தலை நாவல்களும் முள்ளிவாய்க்காலின் தேசியக் கொடைகள்.

1995 இற்குப் பின்னரான தமிழரின் அவலப் பெயர்வுகள் மனிதர்களின் நடமாட்டத்தை இந்நிலத்தில் அனுமதித்தது. 2000 களோடு புது வீரியம் பெற்ற வன்னி வாழ்வியல், முள்ளிவாய்க்காலுக்குப் பெரும் பாய்ச்சலைக் கொடுத்தது. கல் வீடுகளும், காணி பிரிப்பு வேலிகளும், குறுக்குத் தெருக்களும் முளைத்தன. பனங்கூடல்களைப் போராளிக் குடில்கள் கைப்பற்றிக் கொண்டன. அந்த மணல் நிலத்துச் சுவாரஸ்யங்களை அள்ளிப் பூசியது அரசியல்.

இறுதிப் போர் சுதந்திர வயல்களையும், காடுகளையும் மிதித்த பின்னர், எஞ்சிய உயிர்களுக்கான பாதுகாப்பு வலயமாக முள்ளிவாய்க்கால் அறிவிக்கப்பட்டது. அந்தப் பாதுகாப்பு வலயத்தில் அதனோடு அண்டிய மாத்தளன், புதுமாத்தளன், வலைஞர்மடம், பனையடி போன்றனவும் சடலங்களை விளைவிக்கும் இரத்த வயல்களாகின.

உயிர்கள் அற்ற மனித உடலங்களைப் பரப்பிப் படைத்ததால் இந் நிலம் பிரபல்யம் அடைந்தது. மே - 18, 2009 இல் இறுதியாய் மூண்ட பெரும் புகையோடு அந் நிலத்தில் இருந்து எல்லாமே மறைந்துபோனது. ஆட்கள் உட்புக அஞ்சும் பேய்களின் வெளியாகவும் மாறிப்போனது.

காலம் இரண்டாண்டு அவல நினைவுகளைக் கடந்து விட்டது. அறிக்கைகளிலும் அரசியல் வாதிகளின் பேச்சுகளிலும் இன்றும் பேசு பொருளாய் இந்நிலம் தன்னைத் தக்கவைத்திருக்கிறது. மரங்களும், பறட்டைக் காடுகளும், கட்டங்களும் ஷெல்களால் துளைக்கப்பட்ட பின்னரும் அங்கு இன்னும் துர்நாற்றம் வீசியபடி இருப்பது இறுதியாய் ஊனத்தோடு வாழ்வு திரும்பியவர்களின் தசைத் துண்டங்களும், மரண ஓலங்களும்தான்.✱

ஜெரா

## பண்புத் துறவறம்

முள்ளி வாய்க்கால் அவலங்கள் தந்த வடு அவ்வளவு இலகுவாக மறந்துவிடக் கூடியதில்லை. இப்போதிருக்கும் இளந்தலைமுறையிலிருந்து இனிவரப்போகும் மூன்றுக்கு மேற்பட்ட தலைமுறைகளுக்கு இதன் உளவியல் ரீதியிலான பாதிப்புக்கள் ஏற்படுமென உளவியலாளர்கள் எச்சத்திருக்கின்றனர்.

''யுத்தகால இரவின் பின்
நம் குழந்தைகள் பெரியவர்களாகி விடுகின்றனர்''

என்ற சிவரமணியின் கவிதை வரிகளை மெய்ப்பித்திருக்கிறது யுத்தம். பெரும்பாலான பாடசாலைப் பிள்ளைகள் தொழிலாளியாகிவிட்டனர். அப்பாக்களும், அம்மாக்களுமாகி தேடியலைகின்றனர் பாடசாலைச்சிறார்கள். முள்ளிவாய்க்காலும் அதற்குப் பின்னருமான நெருக்கமான வாழ்வு முறைகள் இவ்வாறான ஒழுக்க உடைப்புக்களுக்கு வித்திட்டுச் சென்றுள்ளன. வன்னிப் பண்பாடு என அடையாளப்படுத்துமளவுக்கு கட்டிக்காக்கப்பட்ட கலாசார விழுமியங்கள் மீது கல்லெறி விழுந்திருக்கிறது.

ஆண்துணையை இழந்த பெண்கள் தனிமரமாய் நின்று திண்டாடுகின்றனர். அவர்களது வாழ்வைத் தெருவரை இழுத்து வந்து போட்டிருக்கிறது. பிள்ளைகள் யாவரும் பிடுங்கியெறியப்பட்டு தனித்தீவாய் கிடக்கின்றனர் அநாதைப் பெற்றோர்கள். பெரும்பாலான ஆண்கள் புதுவகையான மதுபானங்களுக்கு அறிமுகமாகியிருக்கின்றனர்.

வன்னிக்காடுகள் மரங்களைக் களவு கொடுக்கின்றன. பல நூற்றாண்டு வைர மரங்களின் இருப்பு அடியோடு தறிக்கப்பட்டு, பாரிய ஊர்திகளில் தெற்கு நோக்கிப் பயணிக்கின்றன. வயல்களை அநாதையாக்கிய விவசாயிகள் வர்த்தகத்தை கைப்பற்றிக் கொண்டனர். மக்களைக் காணவில்லை. கடைத்தெருக்கள் நீண்டு கொண்டே போகின்றன. வீதிகள் மட்டும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அகலிக்கப்பட்டு தெற்கோடு இணைக்கப்படுகின்றன. சின்னதொரு புழு அளவிலான, ஆட்சிக்கு எதிரான எந்தவொரு அசைவையும் காட்டிக் கொடுக்குமளவுக்கு அதிகாரத்தின் விசுவாசிகளாக மக்கள் மாற்றப்பட்டு வருகின்றனர்.

முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற இறுதியுத்தத்தோடு வன்னி வாழ்வியலின் நல்ல பக்கங்களும் நிறைவுற்றுப்போன ஏக்கத்தை என் பழைய கிராமம் தருகிறது.✱

## புலவர்கள் அன்றும் - இன்றும்

தமிழ் அரசியல் மரபில் அவைக்களப் புலவர்களின் ஆதிக்கம் சங்ககாலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது. பாணர்கள், கூத்தர்கள் போன்றோர் இதனைத் தொடக்கி வைத்தார்கள். அகநானூறு, புற நானூறு என்பவற்றின் வழி நின்று மன்னரை வழிநடத்தும் ஆலோசகர்களாகவும் ஞானிகளாகவும் விளங்கியிருக்கின்றனர். அதனை ஆலோசனை என அவர்கள் கூறினாலும் சலுகைகளுக்கான புகழ் வாந்தி எனக் கூறுவதே பொருத்தம்.

இதே வகையான அவைக்களப் புலவர்கள் முள்ளிவாய்க்கால் வரைக்கும் அகத்தையும் புறத்தையும் பாடிக் கொண்டு ''அவர்களுக்குப்'' பின்னால் அலைந்து திரிந்தனர். தமது பிள்ளைகளை, உறவுகளை புறநானூற்று வீரம் பலியெடுக்கப் போகிறது என்று தெரிந்தவுடன் அவைக்கள அந்தஸ்தைக் கிழித்தெறிந்து விட்டு, தம் முன்னாள் எதிரியின் அவைக் களத்துப் புலவர்கள் ஆகிவிட்டனர். இந்த புலவர்களின் புழுகுப் பாடல்களுக்கு ஏமாந்து எத்தனையாயிரம் உயிர்கள் பலியாகின. அதெல்லாம் மறந்து விட்டு இப்போதும் பாடுகின்றனர் தமது முன்னைய கதாநாயகர் மீதான வசைபாடல்களை. அதனையும் கேட்டு உணர்ச்சிவசப்பட ஒரு தொகுதி உயிர்கள் தயாராகி விட்டன.✱

## சாவைச் சந்தர்ப்பமாக்கியவன்

2009 மே முதல் வாரம்

எனது உறவுகள் எவருடையதாவது மரணச்செய்தி எங்கிருந்தாவது வரும் என்ற எதிர்பார்ப்பில் அறைகளுக்குள் முடங்கியிருந்த ஒருநாள். ஏனெனில் எனது நண்பர்களின் ஒவ்வொரு அறையும் ஒன்றுக்கு மேற்பட்ட சாவுக் குறிப்புக்களை அந்நாட்களில் வைத்திருந்தது.

அப்போது என் கைத்தொலைபேசி எஸ்.எம்.எஸ் ஒலி அதிர்ந்து அடங்கியது.''My mother and father died. brother missing'' என்ற எஸ்.எம்.எஸ் நண்பன் ஒருவனால் எனக்குப் பகிரப்பட்டிருந்தது. அவனது அறைக்குச் சென்று ஆறுதல் படுத்தினேன். அவனது தொலைபேசிக்குரல்கள் அனுதாபங்களை அவிழ்த்தெறிந்தன.

மறுநாள் பல்கலைக்கழக வளாகம் எங்கும் நண்பனின் மரணத்துயருக்கான இரங்கல் பிரசுரங்கள் ஒட்டி மரணத்தை கொண்டாடினோம். அதில் ''நாம் வளர்த்த யுத்தம் நம் நண்பனின் குருதி குடிக்கையில் நமக்கு வலிக்கிறது'' என்ற வசனத்தை மட்டுமே எழுதியிருந்தேன்.

தேசிய விசுவாசிகளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. உடனடியாக அழைப்புக்கு மேல் அழைப்பு. ''நீ எப்படி அவ்விதம் எழுதுவாய்? உனக்கு என்ன உரிமை உள்ளது.'' அப்போது இருந்த மாணவர் ஒன்றியத் தலைவனின் கேள்வி சீனியர் பற்றிய பீதியை ஏற்படுத்தியது. உடனே ஒட்டிய பிரசுரங்கள் எல்லாவற்றிலும் இருந்த ''நாம் வளர்த்த'' என்ற சொற்களை அழித்தேன்.

இதற்கிடையில் அந்த நண்பன் தன் இழப்பைக் காட்டி பேராசிரியர்கள், தொண்டு நிறுவனங்களிடம் இருந்து நிறைய உழைத்திருந்தான். யுத்தம் ஓய்ந்த பின் ஒரு கதை வந்தது. மரண எஸ்.எம்.எஸ் அனுப்பியவனின் பெற்றோர் வவுனியாவில் நலமாக இருப்பதாகவும், நண்பன் அவர்களைச் சந்தித்து வருவதாகவும் கதைகள் அடிபட்டன. கொஞ்ச நாட்களில் அவன் சொல்லாமல் கொள்ளாமல் பிரான்ஸுக்கு ஓடிவிட்டான். இப்போது அவன் யாரோடும் கதைப்பதில்லை. அவனது தொலைந்த சகோதரன் பல்கலைக் கழகத்தில் படிக்கிறான்.✱




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.asiaassetfinance.com

# பல தசாப்தங்களுக்கு நிலைத்திடும் ப்ராஸ் ⁖பிடிங்ஸ் மற்றும் சொகுசு ஜப்பான் வாகனங்கள் குறைந்த விலைக்கு

## எல்.பீ பெரேரா மற்றும் குழுமம் மற்றும் எல்.பீ.ஏ மோட்டர் சேல்ஸ்



குடும்ப வியாபாரமான பித்தளை மற்றும் வீட்டுபகரணங்கள் (ப்ராஸ் ⁖பிடிங்ஸ்) வர்த்தகத்தினை நடாத்தி சென்ற பெரேரா அவர்கள் அவரின் வர்த்தகத்தினை மேலும் மேம்படுத்த விசேட கடன் ஒன்றை பெற்றுக் கொள்ள எம்மிடம் வந்தார்.

**பொதுவாக எமது வர்த்தக அனுபவத்திற்கு அமைய, எமது தாளத்திற்கு எமது வயதிற்கு பொருத்தமான வர்த்தகங்களுக்கே அதிக கவனம் செலுத்துவோம். வெறுமனே கடன் ஒன்றை வழங்கி பெரேரா அவர்களை திருப்பி அனுப்ப நாம் விரும்பவில்லை.**

அவரின் வர்த்தகத்தை உயர்தரத்தில் பேணுவதற்கு தேவையான நிதிவசதி-களை செய்யும் அதேவேளை, வெகுகாலம் மூடப்பட்டிருந்த எல்.பீ.ஏ. மோட்டர் சேல் வர்த்தகத்தை மீண்டும் செயற்படுத்த தேவையான இறக்குமதி கடன் ஒன்றை வழங்கி தேவையான ஆலோசனைகளையும் வழங்கினோம்.

தற்போது வீட்டுபகரணங்கள் (ப்ராஸ் ⁖பிடிங்ஸ்) வர்த்தகத்தின் பெயர் எல்.பீ.ஏ பெரேரா மற்றும் குழுமம் என்பதே. தரகர்கள் இன்றி நேரடியாக ஜப்பான் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்ய ஆடம்பர வாகனங்களை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்ய சிறந்த இடம் எல்.பீ.ஏ. மோட்டர் சேல் ஆகும்.

உங்களுக்கு புத்தம் புதிய ஜப்பான் வாகனம் ஒன்று தேவை எனின் 0777 900 889 இலக்கத்தினூடாக திருமதி பெரேரா அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். அவரின் வேலைப்பளு காரணமாக அவரை தொடர்பு கொள்ள முடியாது எனின்

**ஏசியா அசெட் ⁖பினான்ஸ் துரித இலக்கமான 0773 135 804 இற்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.**

ASIA ASSET FINANCE LIMITED

**ஏசியா அசெட் ⁖பினான்ஸ் லிமிறெற்**

நிகரில்லா நிதிக் கொடுக்கல் வாங்கல்

இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
தொ.பே: 0112 574 682-5  தொ.ந: 0112 577 477

*தமது வாடிக்கையாளர்களுக்கு ஏசியா அசெட் பைனான்ஸ் நிறுவனத்தின் பங்களிப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலையா நினைவுகள்

# கேமாவும் லில்லியும்



அந்த நாய்க்குட்டி எங்கள் வீட்டுக்கு வந்த நாட் தொடக்கம் அதன் அழகும், ஆர்ப்பாட்டமும், ஒய்யாரமும், ஓட்டமும் எமக்கு நன்றாகவே பிடித்திருந்தது. அந்த நாய்க்குட்டியை மிகவும் விருப்புடன் நானே வீட்டுக்குக் கொண்டு வந்தேன். வீட்டிலிருந்த எல்லோருமே அதன்மீது அளவுகடந்த அன்பை வைத்திருந்தனர். அது சுதந்திரமாக வீடு முழுவதையும் ஆட்சி செய்தது. அதன் வெண்பஞ்சு போன்ற மேனியில் எமது கைவிரல்களைப் புதைத்துத் தூக்கி அணைத்துக் கொள்ளும்போது, எமது உடல் சிலிர்க்கும். எனது மகள் கேமாவுக்கு நாய்க் குட்டியென்றால் அளவற்ற விருப்பம். அதற்கு லில்லி என்று பெயரிட்டுக் கூப்பிட்டுக் கொஞ்சுவதிலும், அதற்குப் பால் வைத்துப் பருகவிட்டுப் பார்த்து உணவூட்டுவதிலும் அவளின் கவனம் அதிகமாகவே இருந்தது. பள்ளிக் கூடம் போவதற்கு அவள் புறப்பட்டு விட்டால், அவளை அது வாசல் வரை சென்று வழி அனுப்பிவிட்டுத்தான் திரும்பும். பள்ளிக்கூடத்திலிருந்து அவள் திரும்பியதும் வாலை ஆட்டிக் கொண்டு ஓடிச்சென்று அவளைச் சுற்றிக் குழையும். பாய்ந்து பாய்ந்து அவள்மீது தாவிக் குதித்துத் தனது அன்பை வெளிப்படுத்தும். அதற்குச் உணவு வைப்பதும், அதனைப் பராமரிப்பதும் கேமா தான். இத்தனைக்கும் அது ஒரு பெரிய இன நாயல்ல, எங்கள் ஊரிலே காணப்படும் கிராமத்து நாய்களில் ஒன்றுதான் அது. நான் கொண்டு வந்தபோது இருந்ததைப் பார்க்கிலும் கொழு கொழுவென உருண்டு உற்சாகமாகக் கண்களை உருட்டிக்கொண்டு குரைக்கும். உறுமும்.

சில நாட்களில் அதன் வளர்ச்சியில், உயர்ச்சியில் மாற்றமும் காணப்பட்டது. கேமா, லில்லி மீது கொண்டிருந்த அன்பால் அதனுடன் ஒவ்வொரு நாளும் சிலபொழுதேனும் விளையாடாமல் ஓய்ந்ததில்லை.

திடீரென ஒருநாள் அது சோர்ந்து படுத்திருந்தது. அன்று கேமா பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் அத னருகே சென்றாள். அது உற்சாகம் எதுவுமின்றிப் படுத் திருந்தவாறே தனது வாலை ஆட்டியது. ''லில்லிக்குச் சுகமில்லைப் போல'' என்று அவள் என்னிடம் கேட்டாள். என்ன செய்யலாம்? அயலில் இருந்த மிருக வைத்தியரிடம் கேமாதான் லில்லியைத் தூக்கிச் சென்றாள்.

அவர் நாயைப் பரி சோதித் துப் பார்த்து மருந்துகள் கொடுத் திருந்தார். கேமாதான் லில்லிக்குத் தாதியாகிப் பணிவிடைகள் செய்தாள். ஆனால், அதன் உற்சாகம் சிறிது அதிகரித்தது போலத் தோன்றினாலும் அதன் நடத்தையில் செயலில் சோர்வும் உருவத்தில் மாற்றமும் காணப்பட்டது. அதன் அழகிய ரோமம் உதிர்ந்து மேலெல்லாம் குட்டை பிடித்தது. அதனை வீட்டுக்குள் விட நாங்கள் விரும்பவில்லை. ஆனால், கேமா லில்லியின் கோலம் மாறியதைப் பொருட்படுத்த வில்லை. எப்போதும் போல் அதனைக் குளிப்பாட்டித் துடைப்பதும் அதற்கு உணவூட்டுவதும் அணைத்துக் கொள்வதுமாகத் தனது செயற்பாட்டைத் தொடர்ந்தாள். அது எங்கள் வீட்டிலுள்ள எவருக்குமே பிடிக்கவில்லை. அவளை ஏசினார்கள். அவளது செய்கையைக் கண்டித்தார்கள் அவள் எப்போதும்போல் நாய்க்குட்டியுடன் பழகினாள் சில வேளைகளில் லில்லியின் இயலாமையைக் கண்டு மனம் வருந்தினாள். குட்டை நாயைத் தொடாதே! அதனை வீட்டுக்குள் கொண்டு வராதே! அதனை வெளியிலே மாமரத்தோடு கட்டிப் போடு! என்ற எமது எச்சரிக்கைகளும் தொடர்ந்தன. அவளோ அதன் உடலில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு அதன் மீது வெறுப்புக் கொண்டதாகத் தெரியவில்லை.

எனக்கோ அதனைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. இதற்கு என்ன செய்யலாம்?

அன்று கேமா பள்ளிக்கூடம் போன கையுடன் அந்த லில்லியைக் கொண்டு போய் வீட்டில் உள்ளவர்கள் எவரும் அறியாத அந்தத் தூரமான இடத்தில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வந்த கேமா லில்லியைத் தேடத் தொடங்கினாள். எங்கேயம்மா லில்லி என்று தாயிடமும் விசாரித்தாள். எல்லோருமே தெரியாது என்று சொல்லி விட்டோம். கேமா அழத் தொடங்கினாள். அதைத் தேடித் தருமாறு அடம் பிடித்தாள். நானோ, அது குட்டை நாய், அது போனால் போகட்டும் என்று பலவாறு கூறி அவளை ஆறுதல் படுத்த முயன்றேன். ஆனால் அவளோ எதற்கும் அடங்குவதாகத் தெரியவில்லை அவளின் மனம் லில்லியைக் காணாமையால் அமைதியடை யாமல் தவித்தது. இரவு அவள் நித்திரை செய்வதற்கும் சங்கடப்பட்டதாகத் தோன்றியது

அந்த நாயின் மீது எனக்கும் விருப்பம் இருந்தது உண்மைதான். ஒரு வீட்டில் அழகான நாய் இருப்பதும் பெருமை தானே? ஆனால் அதன் உடலெல்லாம் குட்டை பிடித்து கோலம் கெட்டு, அழகு குலைந்தபோது அதனை எப்படியாவது அகற்றிவிட வேண்டுமென்ற எண் ணமே வீட்டிலிருந்த பலருக்கும் ஏற்பட்டது. கேமா விடயத்தில் அது மாறுபட்டதாக இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்

அவள் அந்த லில்லி மீதில் கொண்டிருந்த விருப்பம், நாங்கள் அதன் மீது கொண்டிருந்த விருப்பிலும் மேலானதாக இருந்ததாகவே எனக்குத் தோன்றியது. நாம் அதன் அழகையும் அதன் கம்பீரத்தையும் நேசித்தோம். அவை தொலைந்தபோது அதன் தோற்றம் எமக்கு அருவருப்பாகி, அதனை அங்கிருந்து அகற்றும் கட்டாயத்துக்குள் எம்மைத் தள்ளிவிட்டது. ஆனால் அதன் அழகால் மாத்திரமல்ல, அதன் செய்கைகளால், அது அவள்மீது கொண்டிருந்த நேசத்தினால், அதன் இயலாமைக்கும் அழகின்மைக்கும் மேலாக எழுந்த உரிமையினால் லில்லியின் இழப்பை கேமாவால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவள் அழுதாள். சில தினங்கள் அந்த அழுகையும் லில்லி பற்றிய விமர்சனங்களும் தொடர்ந்தன

அன்பின் - பாசத்தின் வடிவங்கள் எத்தனை வித்தியாசமாக விளைகின்றன. அழகை இரசித்துத் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கும், அன்பின் ஆழத்தில் அனைத்து உணர்வுகளுக்குள்ளேயும் நேசத்தை விரித்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் தம்பதியருக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கேமா, லில்லி மீது கொண்டிருந்த பாசத்தைக் கண்டு புரிந்து கொண்டேன். இந்தவகை உறவுகளில் மனத்தால், உணர்வுகளால் நேசத்தை, பாசத்தை விளைத்துக் கொண்டவர்களின் அன்பே நிலைத்திருக்கும்.

எனவே உள்ளத்தால், உணர்வுகளால் அன்பை வளர்த்துக் கொள்வோம். ✱

நெடுந்தீவு மகேஷ்

# சாதிப்பிளவுகளைச் சாடும் கோசல்யா

இந்த மனித சாதிக்குள் இன்று அழிந்தகன்று விட்டதென நாம் எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு பேய், ஆங்காங்கே தொட்டுக் கொண்டும் தொங்கிக் கொண்டும் உருத்தெரியா வண்ணம் உலவுகின்ற உண்மை, நம் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். அதுதான், எமது ஐக்கியத்தைச் சிதைக்கும் இந்தக் கொடிய சாதிப்பேய். அது நீதியின் பிடிக்குள் சிக்காது, மனம் எனும் சத்தியத்தின் சாட்சிக்கு முன் தோன்றாமல், மௌனமாய் உறங்கும்; உலவும். தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற பேதங்களைச் சொல்லியே உயிர்வாழும். அதை வாழ வைப்பவர்களும் அவர்களே. தாழ்ந்தவன், அந்தப் பெயரை சொல்லிச் சொல்லியே தனது தேவைகளை ஊரெங்கும் உரக்கக் கூறி ஒடுக்கப்பட்டோம் உதவுங்கள்! என்கிறான். உயர்ந்தவனோ தனது நியாயங்களுக்கான நீதியைப் பெறச் சாதியைச் சொல்லி அயலவனைச் சாடத் தொடங்குகிறான்.

நீதியின் பலம் உயர்வானது. அந்த நீதியையே சட்டங்களுக்குள் சிக்கவைத்துப் பேசப்படும் நியாயங்கள், பலவேளைகளில் சாதியின் வலிமையால் நீதி குன்றும் வகையில் தர்க்கிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்நிலையில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற பலர் சாதியின் பெயரைச் சொல்லி அயலவனைத் தாழ்த்துவதும் தாமே உயர்ந்தோர் எனப் பறைசாற்றுவதும் நீதியற்றது எனச் சாடுகின்ற கவிஞரின் வரிகள் இவை.

**மேடை போட்டு மேதாவி பலர் கூடி**
**சாதி நீக்கம் பற்றிக் கூடை நிறையவே கொட்டிப்போனார்கள்**
**ஓடைவரும் நீரில் ஓர் அடைசல் உள்ளதுபோல்**
**சாடை யேனும் சாதி நீக்கம் அவியவில்லை**
**நாடையிலே கை வைத்து சாய்ந்துபோனோர் முன்னோர்.**

மேடையிலே ஏறி நின்று சாதியொழிப்புப் பற்றி கூடைகள் நிறைக்கும் வார்த்தைகளைக் கொட்டி செல்கிறார்கள். ஆனால் ஓடி வரும் தெளிந்த நீரின் ஓட்டத்தைத் தடுக்கும் ஓர் அடைப்பாய் சாதி மக்களின் அன்பு, பிணைப்பு, மகிழ்ச்சி என்பவற்றைத் தடுத்து நிற்கின்றது.

சாதியின் பேய்த்தாண்டவம் இப்போதும் குறையவில்லை என்பதே கவிஞரின் ஆதங்கம்.

அத்துடன் ஊர்விட்டு, தேசம் விட்டு ஓடோடி அல்லலுற்றுச் சோர்ந்தாலும் அங்கும் சாதிப்பிளவுகள் மனிதவாழ்க்கையைச் சங்கடப்படுத்துகின்றன என்கிறார்.

**ஓடிவந்தோம் தாய் மண் விட்டுவந்தோம்**
**இங்கும் தேடிப்பார்க்கிறார் சாதி எதுவென**
**அந்தரமானோம் அமைதியில்லை**
**மண்ணில் கூடிநாம் இருப்போமென்றால்**
**கூனுகிறார் கூசுகிறார் ஒன்றிருக்க ஒன்றிநிற்க.**

எங்கு சென்றாலும் சாதி எதுவெனத் தேடிப் பார்த்துப்பார்த்து கூடி இருக்கும் மகிழ்வைக் குறைக்கின்றனர். எமது மண்ணில் நாம் கூடியிருந்திருந்தால் எமது வலிமையும் எமது வளங்களும் எமக்கு நல்லதோர் வாழ்வைத் தந்திருக்கும். ஆனால் அதனைத் தொலைத்து இந்த அன்னிய மண்ணிலும் கூடி இருக்க, குதூகலிக்க வழி செய்யாது, சாதிப் பிளவுகளைக் கூறி கூடி இருக்க கூசுகிறார், கூனுகிறார் என்கின்றார் பெண் எழுத்தாளரும் கவிஞருமான கோசல்யா சொர்ணலிங்கம்.



கோசல்யாவின் கவிதைகள் எனும் தொகுப்பு நூலில் இருந்து பெறப்பட்ட கவிதை இது.

தனக்கென ஒரு நாடின்றித் தவிர்த்திருக்கும் தமிழர் மத்தியில் வாழும் சாதிப் பிளவுகளைச் சாடுகிறார் கவிஞர்.

அவரது எழுத்துத் துறைக்கு ஊக்கம் தந்த அவரது தந்தையும் சகோதரனும் 1987 இல் நிகழ்ந்த அசம்பா விதத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பாதுகாப்புத் தேடி ஒதுங்கிய வேளை, வீழ்ந்து வெடித்த ஷெல்லில் சிக்குண்டு காலமாயினர். மனதை வருத்தும் அந்நிகழ்வையும் தமிழர் தம் துயர வாழ்வையும் வெளிப்படுத்தும் அவருடைய எழுத்துக்கள் என்றும் நிலைத்து வாழும் வலிமை உடையனவாகும். ✱

மைதிலி.தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக அழும் உரிமைகூட எமக்கு மறுப்பு

இப்படியான பேரிழப்புக்களுக்கு நியாயம் கேட்கும் உரிமை எமது மக்களுக்கு உண்டு. ஆனால் நாம் வாய் திறக்க முடியாதபடி எமது தலைக்கு மேல் துப்பாக்கிகள் நீண்டிருக்கின்றன. எமக்காக அழும் உரிமை கூட எமக்கு மறுக்கப்பட்டு விட்டது.

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் வன்னியில் ஒரு படப்பிடிப்புக் கலையக உரிமையாளரைச் சந்திக்க நேர்ந்த போது அவர் ஒரு பெருமூச்சுடன் 'உப்பில்லாட்டில் தான் உப்பின் அருமை தெரியும், அப்பன் இல்லாட்டில் தான் அப்பன் அருமை தெரியும்' என்றார்.

விபரமாக விசாரித்த போது, தான் வெளிப்புறப் படப்பிடிப்புக்கு, திருமணவீடு, பூப்புனித விழா போன்றவற்றுக்கு மருதங்கேணி, ஆழியவளை போன்ற பகுதிகளுக்குச் செல்வதனால் அதற்கு முன்பு படையினரின் அனுமதி பெற்றிருக்க வேண்டுமாம்.

அது மட்டுமன்றி, சில நாட்கள் முன்பு வரை படப்பிடிப்பு தொடங்கி முடியும் வரை ஒரு இராணுவ வீரன் அருகில் நிற்பானாம். இப்போதும் கூட குறிப்பிட்ட விழா நடக்கும் வீட்டுக்கு வெளியே எந்தப் படப்பிடிப்பும் நடத்த முடியாதாம் எனச் சில விபரங்களைக் கூறிவிட்டு இங்கு மூச்சு விடக் கூடப் படையினரின் அனுமதி பெறவேண்டிய நிலை நிலவுகிறது என்றார்.

### இன்றைய வன்னி திறந்த வெளிச் சிறைச்சாலை

நாமும் கூட ஏ-9 வீதியை விட்டு இறங்கி எந்த ஒரு கிராமத்திற்கு செல்வதானாலும் இராணுவத் தடையரண்களில் விபரம் தெரிவித்தே செல்ல வேண்டும். வன்னி ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை போலவும் அங்கு நடமாடும் மக்கள் அனைவருமே சந்தேக நபர்கள் போலவும் நடத்தப்படுவதையும் எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

தமிழ் மக்கள் இப்போது சமாதானமாக வாழ்வதாகவும், சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதாகவும் மேடைகளில் முழங்கப்படும் வார்த்தைகளின் அர்த்தத்தைத் தான் எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டின் அடிமைகளாக மாற்றப்பட்ட எமது மக்களின் நடமாட்டச் சுதந்திரம் மட்டுமன்றி ஒவ்வொரு அசைவுகளும் ஒரு இராணுவ வலைப்பின்னலுக்குள் முடக்கப்பட்டு விட்டன. பொதுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பன கூட இராணுவக் கண்காணிப்பிலே நடத்தப்பட வேண்டும். பத்திரிகைகள் கூட ஒருவிதமான சுயதணிக்கைக்கு உட்பட்டே செய்திகளை வெளியிட வேண்டியுள்ளது.

### கருத்துச் சுதந்திரம் பறிப்பு

இங்கு ஒவ்வொருவரும் தனி மனிதனாக தனது உணர்வுகளை வெளியிடும் உரிமை மறுக்கப்பட்ட அதே நேரத்தில் தான் வெறுக்கின்ற, தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயங்களுக்குக் கூட ஆதரவு தெரிவிக்க வேண்டிய நெருக்கடிக்குள் எமது மக்கள் அமுக்கப்படும் கொடுமையும் இங்கே அரங்கேற்றப்படுகிறது.

வன்னியில் பல பகுதிகளிலும் தனியார் போக்குவரத்து அமைச்சர் தலைமையிலான குழுவினர், தமிழ் மக்களை நிர்ப்பந்தப்படுத்தி ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகக் கையெழுத்து வேட்டையை நடத்தியுள்ளனர்.

இப்படி வேட்டை நடப்பதை ஏற்கனவே தெரிந்து கொண்டவர்கள் தங்கள் பயணப்பாதையை மாற்றித் தப்பித்துக் கொண்டனர். விஷயம் விளங்காமல் அகப்பட்டவர் கள் வெகு சிரமப்பட்டு வெறுப்பை மறைத்துக் கொண்டு கையெழுத்திட்டனர்.

ஒரு நண்பர், தான் பயத்தில் கையெழுத்துவிட்டு வீட்டில் போய் மூன்று வாளி நீர் தலையில் ஊற்றி துயரத்தைக் கழுவியதாகக் கூறினார். ஆனால் தான் செய்தது சமூக விரோதச்செயல் எனவும் அந்தப் பாவம் என்ன செய்தாலும் கழுவுப்படப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இப்படி இப்போர்க்காலத்தில் போர்க் குற்றங்களாலும், மனித உரிமை மீறல்களாலும் அளவற்ற பாதிப்புக்களை எதிர்கொண்ட வன்னிமக்கள் தமக்கு ஆதரவாக வெளியிடப்பட்ட அறிக்கைக்கு எதிராகக் கையெழுத்து வைக்க நிர்ப்பந்திக்கப்படுமளவுக்கு இங்கு ஜனநாயகமும், சுதந்திரமும் புதைகுழிக்குள் அமுக்கப்பட்டு விட்டன.

இன்று இவ்வறிக்கைக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமை அமைப்புகள் என்பன கருத்து வெளியிட்டு வருவதுடன் சர்வதேசத் தரத்திலான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் கோரி வருகின்றன.

இவ் விஷயத்தில் இலங்கைக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டு வந்த ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும் கூட இலங்கை தொடர்ந்து ஐ.நா சபைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டால் தமது ஆதரவை விலக்கப் போவதாக எச்சரித்துள்ளன.

இப்படியான நிலையில் இலங்கை போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றிலிருந்து தப்ப பல்வேறு கவசங்களைத் தேட வேண்டியுள்ளது.

### ஐ.நா நிபுணர் குழு அறிக்கையின் எதிரொலி

அதில் ஐ.நா நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இரண்டு இலட்சம் கையெழுத்து பெறும் இயக்கத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கையெழுத்துக்களையும் சேர்க்க முனைகிறது.

இவ்வடிப்படையிலேயே வன்னியில் தமிழ் மக்களிடம் கையெழுத்து வேட்டை கட்டவிழ்த்து விடப்ப ட்டுள்ளது. அதாவது எங்கள் கையாலேயே எங்கள் கண்களைக் குத்த நாம் நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

இதன் இன்னொரு பகுதியாக ஐ.நா நிபுணர் குழுவுக்கு எதிராக ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாகக் கூறப்படும் முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவர்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மற்றும் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் ஆகியோர் பிரதான பங்கு வகிக்கின்றனர்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையைத் தமிழ் தேசியக் கூட் டமைப்பு வரவேற்று அறிக்கை விட்ட காரணத்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச்சு நடந்தும் அரசாங்கக் குழுவிலிருந்து முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரத்தினசிறி விக்கிரமநாயக்கா வெளியேறியுள்ளார்.

அதன் அர்த்தம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சுட்டிக் காட்டும் உரிமை தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட இல்லை என அவர் கருதுவது தான். அதை மனமாரத் தலை குனிந்து ஏற்றுக் கொண்டே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பிரதியமைச்சர் முரளிதரனும் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

போரின் இறுதி நாட்களில் நாற்பதினாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் அபயங்களை இழந்தனர். ஏராளமான பெண்கள் விதவைகளாயினர். ஆயிரக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.இப்படியான பேரிழப்புக்களுக்கு நியாயம் கேட் கும் உரிமை எமது மக்களுக்கு உண்டு. ஆனால் நாம் வாய் திறக்க முடியாதபடி எமது தலைக்கு மேல் துப்பாக்கிகள் நீண்டிருக்கின்றன. எமக்காக அழும் உரிமை கூட எமக்கு மறுக்கப்பட்டு விட்டது.

ஆனால் இம்மனித குலவிரோத நடவடிக்கைக்கு எதிராக ஐ.நா நிபுணர் குழு குரல் கொடுத்திருக்கிறது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் உரிமை கூட எமக்கு மறுக்கப்படுவதுடன், எதிர்த்து கையெழுத்திடவும் நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

இது இங்கு நாம் சுவாசிக்கும் சுதந்திரக் காற்றின் வண்டவாளம். இப்படியானவர்கள் நியாயமான பேச்சு வார்த்தைகள் மூலம் எமது உரிமைகளை வழங்குவார்கள் என்பதை நம்பமுடியுமா? எனவே சர்வதேசம் இலங்கை மீது தமிழ் மக்கள் தொடர்பாகக் கொடுக்கும் அழுத்தங்களுக்கு நாமும் ஆதரவு தெரிவிக்க வேண்டியவர்களாயுள்ளோம்.✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

15, மே - 21, மே, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## கிடைக்கட்டும் நியாயம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே காலப் பகுதியில் முள்ளிவாய்க்காலில் இரத்தமும் சதையுமாகத் தமிழர்கள் எறிகணைகளால் சிதறடிக்கப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மரண ஓலம் இந்த உலகின் காதுகளில் எட்டாமலேயே போய்விட்டது.

ஆயுதப் படைகளின் ஊழிக் கூத்து நடைபெற்று முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர், இப்போதுதான் உலகம் விழித்தெழுந்து அன்று முள்ளிவாய்க்காலில் கேட்டது அப்பாவித் தமிழ் மக்களின் மரண ஓலம்தான் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதன் மூலம் தமிழர்களின் மரண ஓலத்துக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. ஆனால் இன்னும் நீதி, நியாயம் கிடைக்கவில்லை.

நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் மேற்கொண்டு சர்வதேச விசாரணைகளோ, போர்க் குற்றவாளிகளை அடையாளப்படுத்துவதற்கான நட வடிக்கைகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ளவை என்று அனைத்து நாடுகளும் நிபுணர் குழு அறிக்கையை வைத்து தமது நலன்களை எப்படி முன்னெடுப்பது என்றே சிந்திக்கின்றன. அதற்காகப் பொறுத்திருந்து பார்க்கும் கொள்கையை அவை கடைப்பிடிக்கப் போகின்றன.

போர்க் குற்றத்துக்குப் பொறுப்புக்கூறும் பொறிமுறையை சரியான வகையில் உள்ளூரிலேயே உருவாக்காவிட்டால் சர்வதேச விசாரணையைத் தான் கோரப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்தியாவோ, தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டால் மீண்டும் ஒரு தடவை சர்வதேச அரங்கில் இலங்கையைக் காப்பாற்றத் தான் தயார் என்பது போன்று நடந்து கொள்கிறது.

நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும் இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்பதாகவே இங்கு காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது; எனவே இருப்பவர்களின் வாழ்க்கையையாவது நல்ல விதமாக அமைத்துக் கொள்ளலாமே என்பது ஒரு சாராரின் சிந்தனை.

அடிபட்டவனுக்குத்தான் வலி தெரியும் என்பது போன்று இந்த வாதத்தை வைப்பவர்கள் அனேகமாக போர் நடந்த போது களத்துக்கு வெளியே இருந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் வழங்கப்படுவது என்பது, வெறுமனே போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பது மட்டுமாகாது. சர்வதேச மட்டத்தில் நீதியான நியாயமான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படும் போது மட்டும்தான், இறுதிப் போரில் எத்தனை பேர் உயிரிழந்தனர், காணாமல் போனவர் கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா, தாய் தகப்பன் மனைவி சகோதரர்களுக்கு முன்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பன போன்ற விடயங்கள் வெளிச்சத்துக்கு வரும் வாய்ப்பு உண்டு.

அந்த விவரங்கள் வெளிவந்தால் மட்டுமே இறந்தவர்களுக்கான மரணச் சான்றிதழோ, இழப்பீடுகளோ வழங்கப்பட நடவடிக்கையும் எடுக்கப்படும். இல்லையேல் 1996இல் யாழ்ப்பாணத்தில் காணாமல் போன 600க்கும் மேற்பட்டவர்களுக்கு நேர்ந்த கதிதான் இங்கும் தொடரும்.

யாழ்ப்பாணத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களில், இறந்து போனார்கள் என்று செம்மணிப் புதைகுழி வழக்கில் உறுதிப்படுத்தியவர்கள் தவிர ஏனைய அனைவரும் இன்னமும் காணாமல்போனோர் பட்டியலிலேயே உயிர்வாழ்கிறார்கள். அவர்களுக்காக நட்டஈடுகளோ கொடுப்பனவுகளோ இதுவரை வழங்கப்படவில்லை.

ஆனால், இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக ஆள் ஒருவர் காணாமல்போனால் அவருக்கு அரசு குறித்த அளவு (ஒன்றரை லட்சம் ரூபா வரைக்கும்) இழப்பீடு வழங்குகிறது. இருப்பினும் காணாமல் போனோர் இறந்துபோனார்கள் என்றோ இனித் திரும்பி வரமாட்டார்கள் என்றோ எந்த ஒரு தரப்பும் உறுதிப்படுத்தாத நிலையில் 14 வருடங்கள் கடந்த போதும், யாழ்ப்பாணத்தில் காணாமல்போனோரின் உறவினர்களில் எவரும் அந்த இழப்பீட்டைப் பெற்றதில்லை.

இந்த அவலம் தொடர்கதையாகாமல் தடுக்க வேண்டுமானால், போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட்டு உண்மை விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அதை இந்த அரசு செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. சர்வதேச பொறிமுறை ஒன்றில்லாம் முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கு நியாயம் கிடைக்க முடியாது.

எனவே, நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையிலாவது அவர்களுக்கு நியாயம் கிடைக்க இந்த அதிகார பலம் பொருந்திய சக்திகள் ஆவன செய்யட்டும்!

## ஏன்... தெற்கு?



**1985 மே 15ந் திகதி**

அந்தத் தீவு மிக அமைதியாகத் தன் கடமைகளில் சுறுசுறுப்பாய் இயங்கியது. காலை தொடங்கும் உற்சாகம், கண்களைத் தூக்கம் தொடும் இரவு வரை தொடர்வது வழக்கம். அன்றும் மக்கள் என்றும் போல் இன்பமாக இயங்கினர். தீவை நகரத்தோடிணைக்கும் கடற்பயணம் அன்று காலையில் துயர்தோய இடை நடுவில் கடல் அலையில் அறுந்து தொங்கியது. கரையிரண்டும் காத்துக் கிடந்த உறவுகள் கலங்கினர்.

வேலிகளே பயிரை மேய்ந்த விபரீதம் - விசித்திரம் இங்கேதான் நிலைத்துள்ளது. அன்று பயணித்த அத்தனை பயணிகளும் பச்சிளம் பாலகர் தொடக்கம் வயோதிபர் வரை எந்தப் பாவமும் அறியாத அப்பாவிகள், வெட்டியும் கொத்தியும் சுட்டும் கொன்று குவிக்கப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் சிதைக்கப்பட்டனர். தாமுண்டு தம் வேலையுண்டு எனப் புறப்பட்டவர்களின் உயிரைக் குடித்தும் உடலைச் சிதைத்தும் கடல் நடுவே பேயாட்டம் ஆடியதன் பொருள் என்ன? இன்றும் எதுவும் புரியாமல் புலம்புகின்றனர் மக்கள். நீதி தேவதையைத் தேடிப் பயன் என்ன? நீறாகிப் போன அந்த மக்களின் மரணத்தில் நிம்மதி தேடியவர்கள் யார்? ஏன்? இன்னமும் பொருள் விளங்காப் புயலுக்குள் வீழ்ந்து தவிக்கும் மக்கள். பிணந்தின்னும் வேலிகளுக்குப் பயந்து மௌனமாய் ஓடிக் கொண்டிருக்கும் உள்ளங்கள் இன்றும் கலங்கியபடி காவலின்றித் துடிக்கின்றன.



யோ.அந்தோ[illegible]

## விடை தாரும்

கோபிநாத், நெடுந்தீவு



ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்து மே. பதினைந்து
பாயைச் சுருட்டிப் பல்துலக்கி முகம்கழுவி
நல்லநாள் புதன்என்று நம்பிக்கை கொண்டேறி
செல்லக் குமுதினியின் சிறகுக்குள் குஞ்சுகளாய்
சின்னப் பயணத்தில் சிறகடிக்கும் கனவுலகை
எண்ணத்தில் கொண்டு எழுபத்தி ரண்டுயிர்கள்
ஏழுமணிக் குமுதினியில் ஏறிக்குறி கட்டுவான்
ஏகிடலாம் என்றவொரு ஏகாந்தப் புன்னகையில்!

நீரைக் கிழித்தன்னை நிலம்தொட்டு முத்தமிட்டு
பாரச்சுமை எண்ணாது பயணிகளை மகிழ்விக்க
வந்தவர்கள் வழியனுப்பும் வாஞ்சையுடன் கையசைக்க
உத்தமியாள் புறப்பட்டாள் உள்ளம் குளிர்ந்ததப்போ
அந்தநிமிடத்தின் ஆனந்தம் கொள்ளை என்போம்
இந்த மணித்துளியோ டிழந்துவிட்ட எம்உறவின்
ஈடுசெய்ய ஏதுமிலா இருட்குகைபோல் எம்பயணம்
தேடுகிறோம் நாடுகிறோம் தேடலுக்குள் யாதுமில்லை!

சின்னக் குழந்தை சிறுகர்ப்பத் தாய்,தந்தை
வண்ண மொழிபேசும் ஆசிரியர் பெரியவர்கள்
என்றெந்தப் பேதமையும் இல்லாதே கொன்றொழித்துத்
தங்கக் கிரீடம் தாங்கியோர் சொன்னமொழி
செய்திட்டார் கச்சிதமாய் சிந்தையிலார் செய்கையன்றோ
என்ன விடிவெமக்கு இன்றுவரை காணவிட்டார்?
கூடிமரம் நட்டும் கும்பிட்டும் கூட்டமிட்டும்
காட்டி உறவு சொன்ன கதையெல்லாம் பொய்யாச்சே!

எங்கள் இருப்புக்கள் இல்லையென ஆனபின்னே
சொந்தம் கடமைகளும் தொலைதூரம் குமுதினியாள்
சுமந்தஉயிர் நூலெட்டும் வேக விதிசுமந்த
வீரர்களும் வீட்டுக்குள் வேதனையுள் வீழ்ந்தவிந்தார்
ஏதுநிலைக்கும் வாழ்வில் எல்லாம் பழங்கதையா?
புதுயுகத்தில் குமுதினியைப் போட்டுடைக்கும் வலி சிறிதா?
அலைகின்றோம் அவளோடு அனாதைகளாய் இன்றும்நாம்
விலைஎன்ன எம்முயிர்க்கு? விடைதாரும் உறவுகளே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பஸ் கலாட்டா; முற்றுப்புள்ளி எப்போது?



செந்தில்குமார்

“நாளைக்கு 'வெல்கம் பார்ட்டி.' நல்லாத் தண்ணி அடிச்சிட்டு ஆடவேணும். இந்த வருசம் தப்பினா இனிமேல் இப்பிடி ஒரு வாழ்க்கை கிடைக்காதடா"' நிறைவெறியுடன் தள்ளாடியபடி வந்தவர் மற்ற நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட வார்த்தைகள் இவை.

யாழ். பல்கலைக்கழகத்தில் வழமையைப் போலவே இந்த வருடமும் புகுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வுதான் அது. அந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வந்து அரையாண்டுப் பரீட்சைக்குத் தயாராகும் காலத்தில் காலம் பிந்தியே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எல்லோருக்கும் தெரிந்ததும், சிலருக்குத் தெரியாததுமான நிகழ்வுகளை இந்த வைபவம் உள்ளடக்கியிருந்தது. இந்த ரகசியம் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை அம்பலத்துக்கு வந்தது. எல்லோரும் அறிந்து கொண்டனர்.

முதலாம் வருட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு என்ற பெயரில் நடத்தப்படும் இந்தக் களியாட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் இரண்டாம் வருட மாணவர்கள். நிகழ்வுக்கான சிறப்பு விருந்தினர்கள் 3 ஆம் வருட மாணவர்கள் தான்.

நிகழ்வுக்காக இரண்டாம் வருட மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடப்படும். அந்தப்பணம் மூத்த அண்ணைமாருக்கு (இறுதியாண்டு மாணவர்களுக்கு) அதிகமாகவும், சின்னண்ணைமாருக்கு (மூன்றாம் வருட மாணவர்களுக்கு) குறைவாகவும் பகிரப்படுவதுண்டு. குடிப்பதற்கும் கும்மாளம் போடுவதற்கும் என்றே சேர்க்கப்படுகிறது இந்தத்தொகை. இதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி கொடுப்பதில்லை. ஆனால் இரகசியமான முறையில் (வெளிப்படையாக) இளைய சகோதரர்கள் (இரண்டாம் வருட மாணவர்கள்) மிரட்டப்பட்டே இந்தப் பணம் கறக்கப்படுகின்றது. நிகழ்வுக்கு முதல் நாள் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் அதைப் பங்கிட்டுக் கொண்டு, அருகில் இருக்கும் மதுக்கடைகளுக்கு ஓடிச் செல்வார்கள்.

அன்றைக்கும் அப்படித்தான். சேர்ந்த பணம், தமது பொக்கற்றில் இருந்த பணம் என எல்லாவற்றையும் சேர்த்து நன்றாக 'ரத்தம் ஏத்திவிட்டு' வெளியே வந்தார்கள் மூத்த, சின்ன அண்ணைமார்கள்.

வெறியுடன் வந்தவர்களுக்கு சுழன்றடித்த காற்றுப் பட்டதும் அது இன்னும் தலைக்கேறிவிட்டது. ஒருவாறாக அவர்கள் கீழே விழாமல் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வந்து சேர்ந்ததே அதிசயம்தான்.

உள்ளே போனது சமிபாடடையும் வரை எதாவது செய்யத்தானே வேண்டும். பழைய சில முரண்பாடுகளை மனதில் வைத்து, சின்னண்ணைமாரும் பெரியண்ணைமாரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட ஆரம்பித்தனர்.

வாத-விவாதம் கைகலப்பாக, அகப்பட்டதைக் கையில் எடுத்து முதலில் ஓரிரண்டு பேரின் தலைகள் பதம் பார்க்கப்பட்டன.

அடுத்தகணம் “மச்சான் இங்க பைனல் காரரோட 'கேமாகி' விட்டது உடனே வாங்கடா" என்று பல அழைப்புக்கள் கிளம்பின உடனே மோட்டார் சைக்கிள்களில் பலர் வந்திறங்கிய வேளையில் நடத்தப்பட்டிருந்த தடிகள், இரும்புகள், கொட்டன்கள், கல்லுகள் என்று ஆளுக்கு ஒரு ஆயுதம் ஏந்திவிட்டனர். அவர்கள் எந்திய ஆயுதத்தால் அடிப்பதற்கு அப்போது ஆள்கள் இருக்கவில்லை. காரணம் அதுவரை எதிர்த்துப் போராடிய பலர் (இறுதி வருட மாணவர்கள்) மதிலால் பாய்ந்து ஓடிவிட்டனர்.

எஞ்சிய ஓரிரண்டு பேருக்குப் பதம் பார்க்கப்பட்டதுடன் மிஞ்சியதெல்லாம் தளபாடங்கள் யன்னல், கண்ணாடிகள் கல்லிருக்கைகள் என்று அடித்து நொருக்கப்பட்டன.

தகவல் பல்கலைக்ககழக நிர்வாகத்தினரைச் சென்று சேர்வதற்கு முன் வளாகம் யுத்த காலமாக மாறியிருந்தது. மோட்டார் சைக்கிளின் வேகம் இராமநாதன் வீதியில் பயங்கரமாக இருந்தது. கூடவே உரத்த தொனியில் சத்தங்களும். தகவல் அறிந்த நிர்வாகத்தினர் உடனடியாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தனர். இப்போது கலகமடக்கும் பொலிஸ் பிரிவு வந்து உள்ளே இறங்க, நின்றவர்கள் அனைவருக்கும் வேர்த்துக்கொட்டியது. மதுபோதைக் கோலத்தை பொலிஸாரால் கூட மீட்டெடுக்க முடியவில்லை.

பொலிஸார் வளாகத்துக்குள் நின்றவர்களை அடித்துக் கலைத்ததுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

மறுநாள் நடக்க இருந்த கொண்டாட்டம் ரத்தாகியது. போதையில் மேடையில் ஆடி மகிழும் கனவும் கலைந்து போனதுதான் மிச்சம். பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டதுடன் பொலிஸாரை வலிந்து இழுத்து எங்களுடன் இருங்கள் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2009 இல் அமைதிச் சூழல் ஏற்படுத்தப்பட்டதின் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தைக் கூர்ந்து கவனிப்போரும் அதற்குள் அநாவசியமாக உள்நுழைய முற்படுவோரும் அதிகமாகவே இருக்கின்றனர். இதில் முரண் அரசியல்வாதிகள் உட்பட இராணுவ பாதுகாப்புப் பிரிவினரும் உள்ளடங்குவர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில்மாணவர்கள்பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வது இவர்களுக்குச் சாதகமாகவே அமைந்து விடும் என்பதை பல்கலைக்கழக சமூகத்தவர்கள் எவரும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை என்பதுதான் கவலைதரும் விடயம்.

புதிதாகப் பதவிக்கு வந்த துணைவேந்தர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், தான் பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் கல்விசார் செயற்பாடு களுக்கும் முன்னுரிமை கொடுப்பதுடன், மாணவர்களின் பிறழ் நடத்தை தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் எனவும் தெரிவித்திருந்தார்.

அவர் பதவியேற்ற சில நாள்களிலேயே அவருக்குச் சோதனை தொடங்கிவிட்டது. அபிவிருத்திக்கும், கல்வி வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணிப்பேன் என்றவர் பிணக்குத் தீர்ப்பதற்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டியதாயிற்று.

சமூகத்தை வழிநடத்துபவர்கள், சமூக சேவையாளர்கள், ஒழுக்க சீலர்கள் என்று தம்மைக் காட்டிக் கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் நீதி, நியாயம் நிர்வாகத்தால் மீறப்பட்டுள்ளது என குற்றம் சாட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டதை அனைவரும் அறிவர்.

அப்போது அனைத்து பீடங்களினதும் மாணவர் ஒன்றியங்கள் சேர்ந்து விடுத்திருந்த அறிக்கை ஒன்றில் “எமது பல்கலைக்கழகம், மாணவர்களை மட்டுமன்றி தமிழ்ச் சமூகத்தையும் வழிநடத்திச் செல்லும் சமூக அமைப்பு என்பதைத் தாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். யாழ். பல்கலைக் கழகத்தை தமிழ் மக்களின் சமூக நிறுவனம் என்ற அந்தஸ்திலிருந்தும் எமது இனத்தின் மீதுள்ள பொறுப்பிலிருந்தும் இல்லாதொழித்து, எமது சமூகத்துக்கும், பல்கலைக்கழக சமூகத்துக்கும் இடையிலான தொடர்பினை இல்லாமற் செய்வதற்கும் சிலர் முயற்சிக்கின்றனர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மாணவர்கள் தமக்குள் ஒரு நிலைப்பாட்டுடனும், சமூகத்தின்மீது பொறுப்புணர்வுடனும் சிந்திக்க வேண்டும். “ஊருக்கு உபதேசம் உனக்கில்லை" என்ற நினைப்புடன் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வது, வடபகுதியில் தமிழ் மக்களது அறிவுப் பசியைப் போக்கும் கல்வி நிறுவனத்தின் மீது இருக்கும் மதிப்பையும் இல்லாமல் செய்யும் நிலையையே ஏற்படுத்த வல்லது.

சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பு எங்களிடம் இருக்கிறது என்ற பேச்சைக் கொண்டு பிழைப்பு நடத்துவதைவிடுத்து, மக்கள் மத்தியில் உண்மையான நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது போன்ற முயற்சியில் ஈடுபடுவதே தேவையாக உள்ளது.

வருடவேறுபாடுகள், பகிடி வதைகள், உட்பூசல்களைக் காரணமாக்கி தமக்கிடையே மோதல்களில் ஈடுபடுவதும் இதனால் நட்பிற்கிடையேயும், சகோதரத்துவத்துக்கு இடையேயும் நீண்டகாலப் பகையை வளர்த்துக் கொள்வதை விடுத்து பல்கலைக்கழகத்தைத் தம் கோயிலாக மதிக்கும் மாண்புடன் மாணவர்கள் செயற்பட்டாக வேண்டும்.

இதுவே சமூகத்துக்கு இவர்கள் செய்யும் தொண்டாகும். ✱

## பல்கலை மாணவர்களின் குழந்தைத்தனம்

கடந்த மாதம் மூன்று மாணவர்களுக்கு பல்கலைக்கழக செயற்பாடுகளில் ஈடுபட இடைக்காலத் தடைவிதிக்கப்பட்ட போது மறுநாளே பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டதில் குதித்தனர். இதனால் அவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளையே பின்தள்ளினர். இறுதியில் ஆக்கபூர்வமான - அவர்களால் கோரப்பட்ட - நியாயம் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆனால் கடந்த 7 திகதி நடைபெற்ற மாணவர்களுக்கிடையிலான மோதல்களில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸார் நுழைந்து, மாணவர்களைத்தாக்கியது, மாணவர்களை சிறைப்பிடித்த சம்பவத்துக்கு எந்த மாணவர் ஒன்றியங்களும் குரல்கொடுக்காது ஒதுங்கிவிட்டன.

உண்மையில் அண்மைய சம்பவத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் தனது மோட்டார் சைக்கிள் வளாகத்துக்குள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டதால் அதைப் பெறுவதற்கு பொலிஸ் நிலையம் போனபோது கைதுசெய்யப்பட்டார்.

இதேபோன்ற சம்பவங்கள் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் போது உரிமைக்காகப் போராட மாணவர் ஒன்றியங்கள் பின்நிற்க வேண்டிய நிலையே உருவாகியுள்ளது.

எதற்கு ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும், எதை நிர்வாகத்தினருடன் பேசித் தீர்க்கவேண்டும் என்ற விவஸ்தை அற்ற நிலையிலேயே மாணவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிசுமந்த நாள்களில்....

## பிண நீர்

ஆதங்கன்

இந்தப் படம் ஆபிரிக்காவில் எடுத்ததாம். உது மாதிரி நிறையத் தரம் குட்டையில நானும் தண்ணி குடிக்கவேண்டி வந்தது. இம்மை மறுமை இல்லாத சண்டை. எங்க ஒடுறதெண்டு ஒருத்தருக்கும் தெரியயேல்லை. ஆரும் ஒராள் முன்னுக்கு ஓட பின்னால இழுபடுகிறதுதான் எங்களுக்கு இருந்த ஒரு வழி. எல்லா இடமும் ஓடிக் களைச்சு கடைசியா மாத்தளனுக்கு வந்திட்டம். எல்லாப் பக்கத்தாலையும் இருந்து 'ரவுண்ஸ்' இருந்தாப்போல கூவிக்கொண்டு வரும். பக்கத்தில கதைச்சுக்கொண்ட நிண்டவை படார் எண்டு கீழ சாயேக்கதான் ஆள் முடிஞ்சுபோச்செண்டு தெரியும். மாத்தளனில தண்ணியும் பெரிசா இல்லை. நந்திக்கடலுக்குக் கிட்ட இருக்கிற கிடங்குகள், பங்கர்கள் வழியில மழைத்தண்ணி இருக்கும். அதைத்தான் குடிக்கவேணும். அப்பிடித் தண்ணி குடிக்கேக்க ரவுண்ஸ் பட்டு செத்தவ கனபேர்.

ஒருக்கா எனக்கு சரியான தண்ணிவிடாய். ஒரு இடமும் தண்ணி இல்லை. ஒரு பத்தைக்குக் கிட்ட பாசி பிடிச்சுக் கிடந்துது. அதில தண்ணி இருக்கும் எண்டு நினைச்சன். பாசியை ரண்டு கையாலையும் வழிக்க தண்ணி தெரிஞ்சுது. அவ்வளவுதான். மளமளவெண்டு அள்ளிக் குடிச்சன். பத்து மணித்தியால விடாய் ஒரு மாதிரித் தீர்ந்துது. ஆனால் குடிச்ச தண்ணி ஒரு மாதிரி மணத்தது. எட்டிப்பார்த்தன் பத்தையின்ரை மற்றப் பக்கமா தண்ணியிலை வீங்கிப் போய் கிடந்துது எப்பவோ தண்ணி குடிக்க வந்த ஒரு ஆளின்ர 'பொடி'. ஆனாலும் பிறகும் அங்கதான் நாலு நாள் தண்ணி குடிச்சன். வேற வழியில்லை.



## வேதனையில் சாதனை

வன்னி மீதான யுத்தம் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்தபோது அங்கு மருத்துவ வசதிகள் பற்றாக்குறையாக இருந்தன. ஆளணி, மருந்து வகைகள் என்பன மிக மிகக் குறைவு. இருப்பினும் இருந்த வளத்தைக் கொண்டு தினமும் காயப்படும் நூற்றுக்கணக்கானோருக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டே வந்திருக்கிறது. ஒரு முறை படையினர் முன்னேறிய போது ஏவப்பட்ட ஆர்.பி.ஜி. ஒன்று குடும்பப் பெண் ஒருவரின் தொடைப் பகுதியைத் துளைத்து அசைவற்று நின்றுவிட்டது. நல்ல காலம் அது வெடிக்கவில்லை. ஆனால் அந்த ஆர்.பி.ஜியை வெளியே எடுக்க எந்த ஒரு நவீன மருத்துவ வசதியும் அப்போது இருக்கவில்லை. இணையங்களில் எல்லாம் அந்தப் பெண்ணின் படம் வெளிவந்து அவளுக்காகப் பிரார்த்தனை செய்யத் தூண்டியது.

ஆனாலும் பல நாள்களின் பின்னர் வன்னியில் இருந்து நலன்புரி நிலையத்துக்கு வந்தவர்களிடம் அந்தப் பெண்ணின் கதி பற்றிக் கேட்டேன். "கடைசி மட்டும் அதை ஆர்.பி.ஜி.யை எடுக்க ஏலாமல் போட்டுது. கடைசியா தொடையோட வெட்டி அந்தப் பிள்ளையைக் காப்பாத்திப் போட்டினம்." அவர்களின் பதில் நீண்டநாள் மனஉளைச்சலுக்கு ஒரு தீர்வைத் தந்திருந்தது.



# ஏதுமற்ற வரிகள்...



*செழிப்புத் தோய்ந்த நாகரீகம் ஒன்று காடுகளுக்கிடையில் பரந்து கிடந்தது.*
*நடுநிசி கழியும் பொழுதுகளிலும் இளம் பெண்ணொருத்தி காட்டுக்குள்*
*திசைமாறிய தன் காதலனை எந்தத் தீங்குமின்றிக் தேடிக் கண்டு பிடிக்கும்*
*அளவிற்கு நீதி தத்ரூபமாய் மக்கள் பக்கம் இருந்தது.*
*குறுநிலத்தை பெருநிலமாக்குவதற்கான போராட்டமொன்றை வளர்த்து*
*அம்மக்கள் வந்ததால் தம்மினத்தின் எல்லாப் பலவீனங்களையும்*
*துப்பாக்கிகளுக்கிடையில் மறைத்து வந்தனர்.*
*சாதி, மத, இன பேதமிருக்கவில்லை.*
*பெண்களின் தசைகள் விற்கப்படவில்லை.*
*களவொழுக்கத்தை மறந்தேயிருந்தனர் மக்கள்.*
*மொத்தத்தில் மனித விழுமிய வாழ்வின் உதாரணம் அத்தேசம்.*
*நவீன திருக்குறள் எழுதப்பட்டிருக்குமாயின் புலவர்களுக்கு ஆதார சுருதிகளை*
*அத்தேசம் வழங்கியிருக்கும்.*
*யார் கண்பட்டதோ தெரியவில்லை.*
*ஓரிரவு என கூறும் காலப்பரப்பில் பேரூழி செழிப்புத் தோய்ந்த நாகரீகத்தை*
*விழுங்கியது.*
*கி.பி.1300களுக்குப் பின் அந்த இனம் இருந்த இடம் தொலைவுற்றது.*
*கடல் மூடும் கிராமம் ஒன்றை இரத்தம் கழுவியது.*
*ஆயுதம் ஏந்திய ஆண்கள் நிர்வாணமாக்கப்பட்டு கொலையுண்டனர்.*
*பெண்கள் ஆண்களற்றனர்.*
*குழந்தைகள் தந்தையற்றனர்.*
*அவ்வினக் குழு எல்லாம் அற்று கூண்டுகளுக்குள் முடக்கப்பட்டது.*
*தம் பழைய தெருக்களில் நிர்வாணமாய் அலைந்தனர் ஏதிலிகள்.*
*போராட்ட வீரர்கள் காணாமல் போனதால் பயங்களைப் போர்த்திக் கொண்டு*
*முடங்கினர்.*
*புதிதாக முளைத்த பாதுகாப்பு வீரர்கள் எல்லாவற்றையும் புதிதாக்கினர்.*
*தெருக்களுக்கெல்லாம் மண்டையோட்டுக் குறிகளை வைத்து வழிபட்டனர்*
*படையினர்.*
*பள்ளிக் கூடங்கள் அவர்களினதும், கைவிடப்பட்ட மந்தைகளினதும்*
*தங்குமிடங்களாயின.*
*கடைகளின் பெயர்கூட புரியாத மொழிக்கு மொழிமாறிப் போனது.*
*கோயில்களின் கோபுரங்கள் அரைவட்டமாகின.*
*அரசமரங்கள் ஆணிவேர் கொண்டன.*
*பெருந்தெருக்களை நிறைக்கும் ஊர்திகள்.*
*நூற்றாண்டு வயது கொண்ட மண்ணையும் கல்லையும், மரங்களையும்*
*எங்கோ அள்ளிப்போனது.*
*காடுகளை ஊடறுக்கும் காட்டு வழிப்பாதைகளின் முகவாயில்களை*
*தடைப்பலகைகளும், காவலரண்களும் வழி மறித்தன.*
*தம் சொந்த நிலங்களும், குடிசைகளும் உட்பக்கமாக தாழிடப்பட்டதைக்*
*கண்டும் அவைகள் விலங்குகளால் அழிக்கப்பட்டதைக் கண்டும் அழக்கூட*
*முடியாத பிரமைக்குள் மூழ்கினர் பூர்வீகக் குடிகள்.*
*பெண்கள் முகம் தெரியாதவர்களோடெல்லாம் தம் உடலை விலை பேசினார்கள்*
*குழந்தைகள் அப்பாக்களின்றி உற்பத்தியாகினர்.*
*விபச்சாரிகளை வரவேற்கத் தயாராகியது பெருநிலம்*
*மிஞ்சிய ஆண்களுக்கு மனைவிகள் போதாமலிருந்தனர்*
*புதியவகை கவலை மறப்புப்பானங்கள்*
*பூப்பெய்தாத ஆண்களையும் பூப்பெய்த வைத்தது.*
*உலகின் எல்லாச் சீரழிவு மழைகளும் செழிப்புத் தோய்ந்தவர்களின் தலைகளில்*
*கொட்டும் போது அவர்கள் என்னதான் செய்வார்கள்;*
*குடி மூழ்கிப் போயினர்.*
*தாம் ஒரு செழிப்புத் தோய்ந்த நாகரீகத்தவர் என்பதை மறந்து*
*அந்த மறதியில் ஒரு பெரும் பேய் தன் நினைவுத் தூபிகளை மனங்களிலெல்லாம்*
*மிக வேகமாக நிறுவி வருகிறது*
*மீளமுடியாத கலாசாரம் வட்டியுடன் கூடிய கடனுக்குள் அடைபட்டுப் போனது.*

★★★

பரதேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வகுக்கும் புதுவியூகம்

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு கலைக்கப்பட்ட போதும், இலங்கை இன்னமும் கண்டம் தாண்டவில்லை.

அந்த நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிறது. சர்வதேச மட்டத்தில், அந்த அறிக்கைக்கு இலங்கை பதில் கூறவேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இந்த அறிக்கை சம்பந்தமாக இலங்கைக்கு ஆதரவு வழங்கப்போவதாகக் கூறிக் கொண்டு வந்த ரஷ்யாவும் சீனாவும், இப்போது அதில் இருந்து பின்வாங்குவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

ஐ.நா. சபையையோ, அந்தச் சபையின் செயலாளர் நாயகத்தையோ பகைத்துக்கொள்ளக்கூடாது. ஐ.நாவுக்கு எதிராகக் கோஷம் எழுப்பக்கூடாது. இலங்கை ஐ.நாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்குமாயின் இலங்கைக்கான எமது ஆதரவு கேள்விக்குறியாகிவிடும் என்று ரஷ்யாவும், சீனாவும் கூறியுள்ளன.

இந்த நிலையில், இலங்கை மீதான போர்க்குற்றத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதைவிட்டு, ஐ.நா.அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்று இந்தியா இலங்கையிடம் வலியுறுத்தப் போகின்றது.

ஐ.நா.மனித உரிமைச் சபையில், நிபுணர்குழு அறிக்கை விவாதத்துக்கு வருமாயின், அந்த நேரத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நிற்க வேண்டுமானால், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க இலங்கை முன்வரவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தப் போகிறது.

போர் முடிவடைந்தபின் மனிதாபிமான உதவிகள் குறித்த விவகாரங்களைக் கையாள்வதற்காக இரு நாடுகளும் அமைத்த மூவர்கொண்ட குழு விரைவில் சந்திக்கப் போகிறது.

இந்தச் சந்திப்பை இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ நடத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் இச் சந்திப்பு இடம்பெறும்.

இலங்கைத் தரப்பில் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் -

இந்தியத் தரப்பில் வெளி விவகாரச் செயலர் நிருபமாராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன், பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் ஆகியோரும் இக் குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர்.

இரு தரப்பினரின் சந்திப்பின் போது, இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டு தொடர்பாக அவ்வளவு கவனம் செலுத்தப்படமாட்டாது என்றும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தும் என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.



போர்க்குற்ற விவகாரம் சர்வதேச மட்டத்தில் முக்கிய விடயமாகப் பேசப்படுவதால், அதில் மாட்டிக்கொள்ள இந்தியா விரும்பவில்லைப் போலத் தெரிகிறது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஐ.நாவின் அறிக்கையின் பரிந்துரைப்படி இலங்கையில் நல்லிணக்கம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கிறது.

இலங்கை இதற்குச் சம்மதித்து உடன் செயற்பட்டால், ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை ஐ.நா.மனித உரிமைச் சபைக்கு வரும்போது இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நிற்கும். இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு முன்வைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்கின்றனர் விமர்சகர்கள்.

அதேவேளை-

இலங்கைக்குப் பெருமளவு உதவிகளை வழங்கி வரும் நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவும் ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை ஆராயப் போகின்றது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் காரணமாக இலங்கைக்கு வழங்கிவந்த ஜி.எஸ்.பி.+ வரிச் சலுகையையே நிறுத்திய ஐரோப்பிய நாடாளுமன்றம், இப்போது போர்க் குற்றம் குறித்து ஆராயப் போகிறது.

அந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளும் இலங்கை மனித உரிமை மீறல் விடயத்தில் கரிசனை காட்டிவருகின்றன.

போர்க் குற்றம் குறித்தும் அந்த நாடுகள் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டைத் தான் எடுக்கப்போகின்றன. இலங்கைக்கு மற்றுமொரு தலையிடி வரத்தான் போகின்றது.

போர்க்குற்ற விசாரணை அறிக்கை ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு வரும்போது, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவை இலங்கைக்கு எதிராகத்தான் நிற்கப் போகின்றன.

ஐ.நா.மனித உரிமைச் சபையில் முன்னர் இலங்கைக்கு எதிராக வந்த பிரேரணையை தோற்கடித்தது போன்று போர்க்குற்றம் தொடர்பாக வரும் பிரேரணையைத் தோற்கடிக்க இலங்கையால் முடியுமா என்பது கேள்விக்குரிய விடயம். மொத்தத்தில் இலங்கைமீது வீழ்ந்துள்ள கண்டத்தில் இருந்து இலங்கை வெளியே வருவது என்பது உடனடிச் சாத்தியமான விடயமாக இருக்கப்போவதில்லை.

இதுவே யதார்த்த நிலை. ✱

# வலி. வடக்கின் அவசர மீள்குடியமர்வு; பின்னணி என்ன?

யாழவன்

**1990**ஆம் ஆண்டு ஜூன் மாதம் உடுத்த உடுப்புடன் வெளியேற்றப்பட்ட மாவிட்டபுரம், தெல்லிப்பழைப் பிரதேச மக்கள் 21 வருடங்களின் பின் தடபுடலான வரவேற்புடன் மீளக்குடி யமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மக்கள் மீளத்திரும்பும் வரை ஆலயத்தில் பூசைகள் மட்டுமே நடைபெறும். வருடாந்த உற்சவம் ஏதும் நடை பெறாது என்று மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் நிர்வாகம் அறிவித்த நிலையில், அந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்வு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றவேண்டும் என்ற காரணத்தைக் காட்டி மீள்குடியமர்வை இழுத் தடித்து வந்த அரச தரப்பு, இப்போது புதுக் காரணம் கூறுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் எப்போதோ மீள் குடியமர்வு இடம்பெற்றிருக்கும். சிலரின் சதி காரணமாக மீள் குடியமர்வு தாமதமானதாகப் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மீள்குடியமர்வு ஆரம்ப நிகழ்வில் கூறியுள்ளார். காரணம் எதுவாக இருந்தாலும் அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 3511 குடும்பங்களைச் சேர்ந்த 12,274 பேர் உடனடியாக மீளக் குடியமரப் போகிறார்கள். பதிவுகளை மேற்கொள்ளாத மேலும் ஒரு தொகுதியினர் தமது பதிவுகளை முறைப்படி பதிந்து மீளக் குடியமரப் போகிறார்கள்.

பதிவு செய்தவர்கள் உடனடியாகவே மீளக்குடியமரலாம் எனக் கருதிச் சென்றனர். அவர்கள் தமது வீடுகளையும் வளவுகளையும் பார்த்துவிட்டு கண்ணீர் மல்கினார்கள்.



அவர்களின் வளவுகள் எல்லாம் பெரும் மரங்கள் மண்டிக்கிடந்தன. கூரைகள் இன்றியும் சுவர்கள் இன்றியும் காட்சியளித்தன. இவை தான் எங்கள் வீடா? எப்படி அழகாகப் பேணிய வீடுகளின் நிலை இதுதானா? என்று கண்ணீர் மல்க அழுதனர்.

எமக்கு என்று வீட்டை அமைக்க எங்கே போவது பணத்துக்கு? நிரந்தர வீடமைக்க எவ்வளவு காலம் செல்லுமோ? என்ற கேள்விகளை அந்த மக்கள் எழுப்பினர்.

[illegible]ாக அந்த வீடுகள் காட்சியளித்தன. பாரிய இயந்திரங்களைக் கொண்டு மரங்களை வெட்டித் துப்புரவு செய்து ஒருவாரத்தில் காணிகளைத் தருவதாக மக்களிடம் அரச அதிகாரிகள் கூறினார்கள்.

அந்த ஆறுதல் வார்த்தைகளுடன் அந்த மக்கள் மீண்டும் தமது தற்காலிக இருப்பிடங்களுக்கு கண்ணீரும் கம்பலையுமாக, மனச் சோர்ந்த நிலையில் திரும்பினார்கள். பெரும் எடுப்பில் பெரும் பிரசாரங்களுடன் மீள்குடியமர்வு நிகழ்வு இடம் பெற்றபோதும் அந்த மக்களின் வாழ்வு இன்னமும் விடியவில்லை என்பதை அந்த மக்களின் சோகம் வெளிப்படுத்திநின்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமிழ்மக் களுக்கு ஜனாதிபதியின் விசேட செய்தி ஒன்றையும் அறிவித்தார்.

நாட்டில் எங்கும் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இல்லை. அமைதி வலயங்களே இனி இருக்கும் என்ற ஜனாதிபதியின் அந்த விசேட செய்தியை அவர் விடுத்தார். அத்துடன் வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்காத ஏனைய பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்ற இனிப்பான செய்தியையும் அவர் விடுத்தார். பாதுகாப்பு வலயங்கள் இல்லை என்றால் மக்கள் எங்கும் குடியமரலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலைக்கு உடனடிக் காரணம் என்ன, பின்புலம் என்ன என மக்கள் அங்கலாய்ப்பதைக் காணமுடிகிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இயக்குநர்களின் செல்லப்பிள்ளை



அக்ஷன், காதல் என்ற இரட்டைக் குதிரைச் சவாரியில் ஜெயம் ரவி சாமர்த்தியமாக பயணம் செய்து கொண்டிருக்கிறார். இப்போது எங்கேயும் காதல் படத்துக்காக ஹன்சிகாவோடு வெளிநாட்டில் கலர்புல்லாகக் காதலித்து திரும்பியிருக்கிறார்.

கே:ஹன்சிகாவுடன் காதல் எப்படி?

ப: படத்தின் தலைப்பு மாதிரியே எங்கெங்கோ சுற்றித் திரிந்து காதல் செய்திருக்கிறோம். வெளிநாட்டு பனி மலைகள், அழகான சாலைகள், பூங்காக்கள் என அத்தனை காட்சியும் வீட்டில் பிரேம் போட்டு மாட்டி வைக்கிற மாதிரி இருக்கும். லைட்டுக்கே லைட் போட்ட மாதிரி இருக்கிறார் ஹன்சிகா. அவர் பக்கத்துல நிற்கும் போது என்னோட நிறம் குறைவாகத்தான் தெரியும். வெயிலுக்கும் கறுக்காத வெண்சங்கு அவர்.

கே: மற்றக் காதல் படங்களுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?


ப: மற்ற படங்களில் நான் காதலிக்குப் பின்னால் ஓடிக்கொண்டே இருப்பேன். இதில் காதலி என் பின்னால் ஓடிக்கொண்டே இருப்பார். ஒரு காட்சியில் கூட தொட்டு நடிக்கவில்லை. பார்க்காத காதல் மாதிரி இதைத் தொடாத காதல் என்று சொல்லலாம். ஆனா, அதுக்கெல்லாம் சேர்த்து பாடல் காட்சியில் வித்தியாசம் இருக்கிறது.

கே: பிரபுதேவா மேனரிசத்தை பின்பற்றுகிறீர்களாமே?

ப: நான் எந்தப் படத்தில் நடித்தாலும் என் பாத்திரத்தை உற்றுப் பாருங்கள். அந்த பாத்திரத்தில் படத்தின் இயக்குனர் தெரிவார். அது மாதிரிதான் இதில் பிரபுதேவா. இப்படி நடித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்வார். அப்படியே நடிப்பேன். அது அவர் மாதிரியே இருக்கும். நிறைய விடயங்களை அவரிடமிருந்து கற்றிருக்கிறேன். இந்தப் பாத்திரத்தில் ஜெயம் ரவி நடித்தால்தான் நன்றாக இருக்கும் என்று இயக்குனர்கள் என்னை நம்பி வருகிறார்கள். அதைச் சரியாகச் செய்து கொடுக்கிறேன். நான் எப்போதும் இயக்குனர்களின் கதாநாயகனாகவே இருக்கிறேன்.

கே: நடனத்தில் பிரபுதேவா கஷ்டப்படுத்தியிருப்பாரே?

ப: அப்படித்தான் நானும் முதலில் நினைத்தேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. தோளில் கைபோட்டு அவர் பழகிய விதமே அவர் எதிர்பார்ப்பதை விடச் சிறப்பாக செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தைக் கொடுத்தது. அதனால் அவர் கஷ்டப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. நடனத்திலும் பிரபுதேவாவையே பார்க்கலாம்.



கே: காதல், அக்ஷன் என்று மாறி மாறி பயணம் செய்கிறீர்களே?

ப: இரண்டு கார் இருப்பது எப்படி வசதியானதோ அதுமாதிரிதான் இதுவும். ஒன்று பழுதானால் இன்னொன்றில் ஏறிப் போகலாம். ஒரே மாதிரி நடித்தால் ஒரு கட்டத்தில் ரசிகர்களுக்குப் போரடிக்கும். பேராண்மை, ஆதிபகவன் என்று ஒரு பக்கம் போனால், தில்லாலங்கடி, எங்கேயும் காதல் என்று இன்னொரு பக்கமும் செல்வதுதான் நல்லது. ரசிகர்களுக்கும் வித்தியாசம் தெரியும். எனக்கும் மாறுதல் இருக்கும்.★

# திருமண வைத்தியம்



வறுமையில் வாடும் பெண்ணுக்கு வரதட்சணை கொடுத்து திருமணம் செய்து கொள்ளும் மணமகன் வீட்டாரைப் பார்த்துள்ளோம். இங்கு, ஒரு பெண்ணுக்கு 8 முறை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்து அழகியாக மாற்றிக் கொண்டு அவரையே திருமணம் செய்து கொண்ட ஒரு மருத்துவரைப் பற்றிப் பார்க்கலாம்

ஜெர்மனி நாட்டை சேர்ந்த பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர் ரெசா வோசவ் (வயது 48). ஒரு பெண்ணை சமீபத்தில் சந்தித்தார். அப்பெண்ணின் பெயர் கேனி. 33 வயதான கேனி ஒரு ஹோட்டலில் பணியாற்றி வந்தார்.

கேனியைப் பார்த்ததுமே ரெசா வோசவ்வுக்குப் பிடித்து விட்டது. ஆனால் அவரது அழகில் ஒரு சில குறைபாடுகள் இருப்பதாக நினைத்த ரெசா வோச்வ் அவரை முழு அழகியாக மாற்ற பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிட்டார்.

ஒரு முறை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்ய, அதுவே தொடர்ந்து அங்கங்கே சில டச் அப்கள் போல சுமார் 8 முறை பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியதாகிவிட்டார்.

அதாவது கேனியின் மார்பகத்தையும், தொடைகளையும், கண்களையும், முகத்தையும் மாற்றி அமைக்க அவர் அறுவைச் சிகிச்சை செய்தார்.

இது குறித்து வோசவ் கூறுகையில், நான் முதல் முறையாகக் கேனியை சந்தித்தபோது, அவர் உடல் அமைப்பில் சில குறைபாடுகள் இருப்பதைக் கவனித்தேன். இருந்தபோதிலும் அவரிடம் இருந்த அழகு என்னைக் கவர்ந்தது. அவர் இடுப்பும் தொடைகளும் பெரிதாக இருந்தன. அதனால் சில திருத்தங்கள் செய்தேன். பிறகு மேலும் சில திருத்தங்கள் என 8 முறை அறுவை சிகிச்சை செய்தேன் என்று கூறினார்.

கேனியின் மார்பகத்தையும், உதடுகளையும் பெரிதாக மாற்றினார். கண்ணிமைகளை கொஞ்சம் உயர்த்தினார். நெற்றியைச் சமப்படுத்தினார். இதன் மூலம் கேனி இன்னும் அழகான பெண்ணாக மாறினார். இந்த அறுவைச் சிகிச்சைக்கு 12 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவு ஆனது.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு பிறகு முழு அழகியான கேனியை வோசவ் திருமணம் செய்து கொண்டார். ★★★

# புகைப்படத்திற்காக நீதிமன்றம்



தாலி தோஷம், அதனால் இரண்டு தாலி கட்டுவது, இரண்டாவது திருமணம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம்... ஆனால் இங்கே ஒரு ஜோடி புகைப்படத்திற்காக மீண்டும் திருமணம் செய்து கொண்டுள்ளார்கள்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் மார்க். இவரது காதலி சில்வியா டே. இவர்கள் மேற்கு யார்க்‌ஷைர் மாநிலம், வேக்பீல்டு நகரில் வசித்து வருகிறார்கள். சமீபத்தில் இந்த ஜோடி வெகு விமரிசையாகத் திருமணம் செய்து கொண்டனர். இந்தத் திருமணத்தைப் போட்டோ எடுக்கவும், வீடியோ படம் எடுக்கவும் ஒரு புகைப்பட நிபுணரை நியமித்து இருந்தனர்.

திருமணம் முடிந்து போட்டோவைப் பார்த்தால் தம்பதிகளுக்கு ஒரே அதிர்ச்சி. எந்தப் புகைப்படத்திலும் தம்பதிகளின் தலையையே காணவில்லை. இதனால் மிகவும் கோபம் கொண்டனர் புதிய தம்பதியினர்.

நம்மூர் புகைப்படக்காரராக இருந்தால் காசைத் திருப்பிக் கொடு என்று சண்டை பிடித்திருப்போம். ஆனால் இவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்தோடு மட்டுமல்லாமல் மீண்டும் திருமணத்தை நடத்தி புகைப்படங்களை எடுத்துக் கொடுக்கவும் உத்தரவிட்டது நீதிமன்றம்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சுழியன்ஸ்ஸினால் தான் அடைத்து வைக்கப்பட்ட பண்ணை வீட்டிலிருந்து தப்பித்துக் கொண்ட கரோல் ஒரு வாறு பத்திரிகையாளன் ஜோர்ஜைக் கண்டு பிடித்து டானியலைப் பற்றி விசாரிக்கிறாள். டானியல் தனது பாதுகாப்பிலேயே இருப்பதாக ஜோர்ஜ் கூறியதும் கரோல் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறாள்.**



# வெள்ளை ரோஜா முள்

மு.சிவநேசன்
sivanesan@usa.com

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 13**

இரவு மணி ஒன்றிற்கு கடமையை முடித்துக் கொண்டு அறைக்குத் திரும்பினான் ஜோர்ஜ். இருவரும் நடந்ததெல்லாம் பரிமாறிக் கொண்டனர். இது சுழியன்ஸுக்கு எதிரான இறுதி யுத்தம் என்பதை ஜோர்ஜ் உணர்ந்து கொண்டார்.

விடியலுக்கு முன் காரைக் கிளப்பினான் ஜோர்ஜ். கரோல் ஏறிக் கொண்டாள். இருவரும் புறநகர் பங்களாவுக்கு வந்தனர். எமிலி ஓடிவந்தாள். அவன் அவளை அறிமுகம் செய்து வைத்தான். மூவரும் மேலே ஏறி டானியல் இருந்த அறைக்கு வந்தனர்.

டானியல் நிம்மதியாக உறங்கினான். அவனது மார்பு மிதந்து பதிவதைக் கண்ட கரோலுக்கு நிம்மதி பிறந்தது. 'எனது டானியல் சாகவில்லை' என நினைத்தாள். ஜோர்ஜும் எமிலியும் நழுவி விட்டனர்.

கரோல் அவன் அருகில் அமர்ந்தாள். அவன் முகத்தையே பார்த்தபடி இருந்தாள். அவளால் தன்னையே நம்ப முடியவில்லை.

அவன் மார்பிலே கைவைத்தாள். அவன் மெல்ல விழிகளைத் திறந்தான். "நான் தான் உங்கள் கரோல்" என்றாள்.

அவன் விழிகளை அகலத் திறந்தான். எழுந்தான். அவளை ஆசை தீரக் கட்டித்தழுவினான். இருவரையும் காதல் மயக்கம் சூழ்ந்து கொண்டது. அருகே படுத்தாள் கரோல். அவனை ஆறுதல் படுத்தினாள். இருவரது சூடான மூச்சுக் காற்றுகளும் கலந்தன.

அதேவேளை கீழே ஜோர்ஜும் எமிலியும் அதே மயக்கத்தில் புரண்டு கொண்டிருந்தனர். பொழுது விடியத் தொடங்கியது. இன்று ஒரு நல்ல விடியல்.

கரோல் டானியலிடம் கதைகதையாச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் அதிகம் பேசக் கூடாது என்பதால் கேட்டுக் கொண்டிருந்தான். தனது தேவைகளுக்கு மட்டும் எழுந்து நடமாட டானியலால் முடிந்தது.

'ஜோர்ஜ்' என்ற சொல் காதில் விழுந்ததும் சுழியன்ஸ் சரியான தகவல் கிடைத்ததாக உணர்ந்து கொண்டனர். மைக்கின் விரல்களின் அழுத்தம் குறைந்தன.

பங்களாவின் பாதுகாப்பை கரோல் ஆராய்ந்தாள். பெரிய வளவு. துப்புரவாக இருந்தது. நாற்புறமும் பங்களாவைச் சூழ சுமார் 400 அடி வெளி இருந்தது. உயரமான சுற்றுமதில் வளவை வலம் வந்தது. பின்புறமும் சிறிய கதவு ஒன்று ஒழுங்கையுள் இருந்தது. ஒழுங்கையின் இருபுறமும் நகரத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் தென்பட்டன.

கறுப்புக்கண்ணாடி போடப்பட்ட மாடி யன்னல்கள் வெளியிலிருந்து பார்த்தால் உள்ளே நடப்பது தெரியாது. வீட்டினதும் வளவினதும் கீழ் தளத்தில் நடப்பவை வெளியே தெரியாது. பாதுகாப்பு கரோலுக்கு திருப்தியைத் தந்தது.

சில நாட்கள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் கழிந்தன. மீண்டும் பத்திரிகைகள் கரோலைத் தேடின. அவளது மனநிலை பாதிப்பு மீண்டும் உறுதி செய்யப்பட வேண்டிய திகதி கடந்துவிட்டது. இனி அவளைத் தேடிப்பிடித்து - அவளது மனநோயை மீண்டும் உறுதி செய்யத் தவறினால் அவள் தனது சொத்துக்களைக் கோரலாம். அதற்கான ஏற்பாடுகளை சட்டத்தரணிகள் மூலமாகச் செய்ய ஜோர்ஜ் திட்டமிட்டு இருந்தான்.

என்றாலும் அவசரப்பட முடியாது. சுழியன்ஸ் என்ற இரு தனிமனிதர்கள் பெரிய சவாலாக நிற்கிறார்கள். எனவே இவர்கள் வெளிப்பட முடியாது.

"ஏன்? அந்த இருவருக்கும் இப்படி அகிலமே நடுங்க வேண்டும்? அவர்கள் சாதாரண மனிதர்கள் தானே?" என்றாள் கரோல்.

"நோ, நோ, பட்டுப்பார்த்தால் புரியும். அதுவும் அடிபட்ட நாகம் போல அவர்கள் திரிகிறார்கள். அவர்கள் முந்துவதற்கு முதல் நாங்கள் முந்தி விட வேண்டும். அவர்களைக் கூண்டில் ஏற்ற வேண்டும்" என்றான் ஜோர்ஜ்.

இப்போது அவர்களைத் தெளிவாக அடையாளம் காட்ட கரோல் ஒருத்தியால் தான் முடியும். அவள் அவர்களைக் கூண்டில் ஏற்றி - சட்டத்தின் முன் கொண்டு வருவதை விரும்பவில்லை. காரணம் சட்டமோர் இருட்டறை.

ஜோர்ஜ் சொன்னான். "அவதானமாக இருங்கள். உங்களைக் கொல்ல ஒருவன் தேடினால், அவனால் அதைச் சாதிக்க இயலும். உயிர் என்பது ஒரு மெல்லிய இழை தான். அதை நிறுத்த அவனுக்கு ஒரு செக்கன் போதும். இந்த மாபெரும் உலகிலுள்ள பொலீஸ் முழுவதையும் காவல் போட்டாலும் உயிரைக் காப்பாற்றுவது கடினம். இன்று தப்பினால் நாளை அகப்பட வேண்டும். இங்கே தப்பினால் அங்கே அகப்பட வேண்டும். இதில் தப்பினால் அதில் பிடிபட வேண்டும். நீ அரசனாகலாம், ஆண்டியாகலாம், ஜனாதிபதியாகலாம், சுழியனாகலாம், கரோல், டானியலாகலாம். யாரென்றாலும் என்றோ ஒருநாள் எதிரியின் கையில் சிக்கத்தான் வேண்டி வரும்."

வாழ்வா சாவா என்ற நிலை சுழியன்ஸிற்கு. இனியும் காலத்தை இழுபட விடக்கூடாது. எப்படியும் டானியலை தீர்த்துக்கட்ட வேண்டும். காசுக்கு ஆசைப்பட்டு கரோலுக்கு வெடி வைக்காமல் விட்டது பிழைத்து விட்டது. அன்று டானியலின் பண்ணையிலிருந்து காரைக் கிளப்பிக் கொண்டு பறந்தபோது அவளுக்காக இரங்காமல் வெடிவைத்திருந்தால் இப்படி ஏங்க வேண்டி வந்திருக்காது.

டொக்டர் ஜேம்ஸின் கண்ணை கரோல் தோண்டிய சேதி பத்திரிகையில் பிரசுரமாயிருந்தமை சுழியன்ஸின் மூளையில் உறைத்தது. கரோல் டானியலுடன் அங்கே தான் போயிருக்க வேண்டும்.

ஜேம்ஸிடம் இருவரும் வந்தனர். மனுஷன் எதுவும் தெரியாது என்று கூறி விட்டான். அடுத்த கண்ணையும் பீடுங்கப்போவதாக மிரட்டினான் மைக். கண்மடல் மீது விரலை வைத்து அழுத்தினான்.

"கண்ணைக் கெடுக்காதே. என்னிடம் அவள் இடத்தைச் சொல்லவில்லை. இ[illegible]நற்குப் பத்திரிகைக்காரன் ஜோர்ஜ்தான் சாட்சி. அவனையே கேட்டுப்பாருங்கள்."

'ஜோர்ஜ்' என்ற சொல் காதில் விழுந்ததும் சுழியன்ஸ் சரியான தகவல் கிடைத்ததாக உணர்ந்து கொண்டனர். மைக்கின் விரல்களின் அழுத்தம் குறைந்தன.

"வேறு சேதி ஏதாவது தெரியுமா?"

"தெரியாது" என்றார் டாக்டர்.

"நாங்கள் வந்தது பற்றி யாருக்கும் வாயைத் திறந்தாய் - நீ அணு அணுவாய் சாவாய். உயிர் மட்டும் போகவிடாமல் வாட்டுவே[illegible]ம். தெரிகிறதா?"

"நீங்கள் வந்ததையே மறந்திடுகிறேன். போயிடுங்க."

"முடிச்சிட்டுப் போயிட்டா சிக்கல் எழாது" என்றான் றொப்.

பதறி நடுங்கினர் டாக்டரும் மனைவியும்.

"தேவைப்பட்டால் பிறகு பார்க்கலாம் இருக்கட்டும்" என்றான் மைக்.

ஒரு சத்தவெடி வைத்துவிட்டு இருவரும் கிளம்பினர். தன் உடம்பில் எங்காவது சன்னம் பட்டு இரத்தம் வழிகிறதா எனத் தடவிப் பார்த்தார் டாக்டர்.

'அப்பாடா' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு.

"ஜோர்ஜ்ஜா? அவன் ஆபத்தான பேர்வழி. நெருங்கினால் தொலைந்தோம். படத்தைப் பத்திரிகையில் போட்டுவிட்டால் உலாவவும் முடியாது" என்றான் மைக்.

இருவரும் கறுப்பு உடைகளை மறந்துவிட்டனர். ஒருவர் தடித்த நீலநிறமும் அடுத்தவர் தடித்த பிறவுண் நிறமுமாக மாறிமாறி அணியத் தொடங்கினர். இருவருக்கும் இரண்டு புதிய கார்கள். பழையதைக் காட்டில் விட்டுக் கொழுத்திவிட்டார்கள். இப்போது புதிய பிறவி. கடைசிக்கேஸ் முடிந்ததும் வாழ்க்கை உல்லாசத்துக்குத் திரும்பிவிடும்.

இப்போது சுழியன்ஸை புது கேஸ் விடயமாக தொடர்பு கொள்ள நினைப்பவர்களுக்கு ஏமாற்றம் தான். அவர்கள் எங்கே என எவருக்கும் தெரியவில்லை.

(இனியும் முள்ளுக் குத்தும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாம் முள்ளிவாய்க்கால்

## இளைய அப்துல்லாஹ்

இப்பொழுதெல்லாம் மே மாதம் தமிழர்களுக்கு ஒரு துர்ச்சகுனமான மாதமாகவே இருக்கிறது.பிரபாகரனின் 30 வருட ஆயுதப் போராட்டத்தை மகிந்த ராஜபக்ஷ மிகவும் மூர்க்கத்தனமாக அழித்து விட்டார்.

அதனோடு தமிழர்களின் வாழ்வும் கிட்டத்தட்ட அழிந்த வாழ்வாகவே தெரிகிறது. பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் மக்கள் எல்லோரும் வெறுக்கத்தக்கவர்களாகவே மகிந்த ராஜபக்ஷவால் பார்க்கப்படுகிறார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் நடுவே இருக்கும் பொழுது எல்லாம் ஆயுதம் சொன்னபடி தான் கேட்க வேண்டும் என்ற அடிப்படையைக் கூட அவர் யோசிக்கிறார் இல்லை.ஆமியின் கட்டுப்பாட்டுக்குள் எப்படி இப்பொழுது மக்கள் இருக்கிறனரோ அதே மாதிரித்தானே பிரபாகரனுடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் மக்கள் இருந்தார்கள்.

இப்பொழுது யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் ஆன பின்பும், அங்கிங்கு அசைய முடியாதபடி அபிவிருத்தியை எட்ட முடியாத இக்கட்டான நிலைக்குள் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். வன்னிக்குள் மக்கள் வாழுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரையும் தினமும் இராணுவத் தின் கண்கள் நோட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

இரண்டு வருடமாகியும் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. இரண்டு வருடமாகியும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இரண்டு வருடமாகியும் நிவாரணப்பணம் கொடுக்கப்படவில்லை. இரண்டு வருடமாகியும் அவர்களின் காணிகள் கொடுக்கப்படவில்லை. இரண்டு வருடமாகியும் இன்னும் முகாம் வாழ்க்கை முடிந்தபாடாக இல்லை.

துவக்குகளின் கீழே வாழ்ந்த மக்கள் இன்னும் துவக்குகளின் கீழே தான் வாழவைக்கப்பட்டிருக்கிறார்கள். 32 வருடங்களாகியும் இப்பொழுதும் அவர்களுக்கு இதுதான் வாழ்க்கை.

பிரேதங்களுக்கு நடுவே வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியாமல் இன்னும் எத்தனையோ தமிழர்கள் நித்திரை இல்லாமல் கிடக்கிறார்கள். ''இனிமேலும் எங்கடை ஊரிலை போய்வாழ முடியுமா?'' என்று இங்கு ஒரு முதியவர் என்னிடம் கேட்டார், பலரது குரலாகவே அவரின் குரல் இருந்தது.

செல்வச் செழிப்போடு வாழ்ந்த வன்னி மக்களுக்கு, அரைவாசிக்கும் மேற்பட்டவர்களை பிணமாக்கி ஓய்ந்து போன யுத்தத்திற்குப் பிறகும் நிம்மதி இழந்த வாழ்வு தான்.

மனம் திறந்த பேச்சுவார்த்தைக்கோ, மக்களின் தீர்வுக் கான கோரிக்கைகளுக்கோ அசையாமல் இருக்கிறார் மகிந்த ராஜபக்ஷ. தமிழ் மக்களை இப்பொழுது சிறுபான்மை இனமாக்கி வைத்து அழகு பார்த்துக் கொண்டி ருப்பது ஒரு தேசிய இனத் துக்கு செய்யும் பெரும் துன்பமாகக் கூட அவர் கருதுகிறார் இல்லை.

என்னதான் பாவம் செய்தார்கள் இந்தத் தமிழ் மக்கள்? 'புலிகளோடு பேச முடியாது; அவர்களின் ஆயு தம் வைத்திருக்கிறார்கள்' என்றார்கள் சிங்கள ஆட்சியாளர்கள்.சரி புலிகளை அழித்தவுடன் அரசியல் தீர்வு கொடுக்கிறோம் என்றார்கள். இரண்டு வருடமாகியும் அசைகிறார்களில்லை.

பேரம் பேசும் சக்தி இல்லாவிடில் கொடுக்க வேண் டிய தேவை இல்லையென்றுதான் நினைக்கிறார் கள்.உயிரைக் கொடுத்த, உடமைகள், வாழ்வு, இளமை எல்லாவற்றையும் கொடுத்த மக்கள் இன்று போக்கிடம் இல்லாமல் இருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து வருகிறார்கள். புலனாய்வுப் பிரிவு என்கின்றனர். கைது செய்து அழைத்துப் போகின்றனர். பின்னர் கைது செய்யப்பட்டோர் காணமல் போய் விடுகின்றனர். யாழ்ப்பாணத்தின் நிலை இது தான்.பேசினால், எழுதினால், மூச்சுவிட்டால், கையைக் காட்டினால் மரணம் என்ற நிலையில் என்ன செய்வது? வாழ்க்கையை இவ்வளவு கஷ்டப்பட்டு வாழ வேண்டுமா? என்ற கேள்வியை யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு எழுத்தாள நண்பர் கேட்கிறார்.

சிதைத்து அழிக்கப்பட்ட வீடுகள், வயல் நிலங்கள், எங்கள் தோட்டம் துரவுகள், வாழ்விடங்கள் கருகிப்போன உடல்கள், முண்டங்கள், பங்கருக்குள் எரிந்துபோன பிஞ்சுகள், அழிந்து சிதைந்து போனஅகதிக் குடியிருப்புகள் எல்லாவற்றுக்கும் யாரிடம் போய் நஷ்டத்தை தாருங்கள் என்று கையேந்துவது?கண்ணீர் கொண்ட முகங்களும் ஏந்திய கைகளுமாகத்தான் இந்த இரண்டு வருடங்களாக தமிழர்கள் அலைந்து கொண்டிருக்கின்றனர்.

**வடக்கு கிழக்கில் இப்பொழுது இராணுவத்தினரின் பார்வை படாத இடமே இல்லை. சிங்கள மயப் படுத்தல் என்பது ஒரு சாதாரணமான விடயம் அல்ல. எல்லாவற்றையும் பௌத்தம் என்ற குடைக்கு கீழ் கொண்டு வர அரசு யோசிக்கிறது.**

இலங்கையில் இருந்தால் யுத்தத்தால், ஆமியால் கொல்லப்படுவோம் என்று வெளிநாடுகளுக்கு ஓடிய தமிழர்களை இனிமேல் நாட்டுக்கு வராதீர்கள் எனத் தடுப்பதே இரட்டை குடியுரிமை சட்டம் இல்லாமல் ஆக்கப்பட்டதற்கும், வெளிநாட்டு தூதுவராலயங்களில் இனிமேல் அகதிகள் இலங்கை பாஸ்போட்டை எடுக்க முடியாது என்ற சட்டத்திற்கும் பிரதான காரணம்.

தமிழர் பகுதிகளில் அவசர அவசரமாக அரச மரம் நடும் வேலைகளும் புத்தர் சிலைகள் வைக்கும் வேலைகளும் நடைபெறுவது ஏன்?

வாழ்விழந்த மக்களின் வாழ்வை திருப்பிக் கொடுக்காமல் இழுத்தடித்து, மிச்சமாக இருக்கும் அவர்களின் உணர்வுகளையும் சாகடிக்க ஏன் அரசாங்கம் முனைகிறது.

வடக்கு கிழக்கில் இப்பொழுது இராணுவத்தினரின் பார்வைபடாத இடமே இல்லை. சிங்களமயப்படுத்தல் என்பது ஒரு சாதாரணமான விடயம் அல்ல. எல்லாவற்றையும் பௌத்தம் என்ற குடைக்கு கீழ் கொண்டு வர அரசு யோசிக்கிறது.

சம்பூருக்கு நான் யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் போன போது அங்கு மாடுகளையும் நாய்களையும் தவிர வேறு எதனையும் காணவில்லை.மாவிலாறு யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இராணுவத்தினரிடம் விழுந்தது சம்பூர். புலிகள் திருகோணமலை துறைமுகத்தை இலக்கு வைத்துத் தாக்கியது சம்பூரில் இருந்து தான்.

புலிகள் இல்லாமல் ஆன பின்பும், சம்பூர் மக்களுக்கு அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலம் கொடுக்கப்படவில்லை. மூட்டை மூடிச்சுகளுடன் போனவர்கள் இன்னும் அகதி முகாம்களில் தான் இருக்கின்றனர். கல்வீடு, வாகனங்கள், காணி, பூமி எல்லாச் சொத்துக்களையும் இராணுவம், அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது.

சம்பூரில் 10 ஆயிரம் ஏக்கர் தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டு விட்டன. முள்ளிக்குளம், கோப்பாபிலவு, திருமுறிகண்டி, முள்ளிவாய்க்கால், அம்பலவன் பொக்கனை என்று மக்கள் வாழ்ந்த இடங்கள் எல்லாவற்றையும் இராணுவம் சுவீகரித்துக் கொண்டு மக்களை விரட்டி விட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொங்கனை பிரதேசம், 20 சதுரகிலோ மீற்றர் பரப்பு கொண்டது.இங்கு 5300 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இந்த குடும்பங்கள் இப்பொழுது அகதி முகாம் களில் இருக்கின்றன, அல்லது நடுத் தெருவில் கைவிடப்பட்டிருக்கின்றன.

இந்த நிலமைகள் தொடர்பாக இலங்கை அரசு, ஜனாதிபதி எந்தக் கரிசனையும் கொள்ளாத நிலையில் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுக்கான உரிமை வேண்டிய போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.இலங்கையில் தமிழர்களுக்கான வாழ்வுரிமை என்பது எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் மத்தியில் இப்பொழுது வந்துவிட்டது.

கொழும்பில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவோம் என்று பயத்தோடு எத்தனையோ தமிழர்கள் தங்களது இலங்கைக்கான பயணத்தைப் பிற்போட்டு வருகின்றனர். இலங் கைக்குப் போனால் தாம் கொல்லப்படலாம் அல்லது கடத்தப்படலாம் என்ற பயம் வெளிநாட்டுத் தமிழர் மத்தியில் இருக்கிறது.

வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் கோரியவர்களுக்கு இனிமேல் இலங்கை தூதுவராலயங் களில் இலங்கை கடவுச்சீட்டு கொடுப்பதில்லை என்ற நடைமுறைக்குப் பிறகு, இப்பொழுது வெளி நாடுகளில் ''ட்றவல் டொக்கியூமன்ட்''டுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.அதுவும் உடனடியாக கிடைக்குமோ என்ற கவலை அகதிகளுக்கு இருக்கிறது.

உலகம் முழுவதும் தமிழர்களின் வாழ்வு தொடர்பான கேள்விகள் தொங்கி நிற்கின்றன. 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கு ஒரு செய்தியை விடுத்தார் அதில்''ஓர் அமைப்பு (புலிகள்) தமது குறுகிய நோக்கங்களை அடைய உங்கள் (தமிழர்கள்) மீது அதிகமான கஷ்டங்கள் (யுத்தம்) திணிக்கப்பட்டன.உபாயங்கள் (புலிகளின்) தோல்வியுற ஆரம்பித்ததும், நீங்கள் இடத்துக்கு இடம் (அகதிகளாக) அலைந்து திரிய வேண்டியதாயிற்று. உணவு, மருந்து வசதிகள் மறுக்கப்பட்டன.இருள் சூழ்ந்த காலம் மறைந்து, நீங்கள் எதிர்நோக்கிய தற்காலிக கஷ்டங்களும் முடிவுக்கு வந்துள்ளன.

உங்களின் புதிய வாழ்க்கைக்கு இலங்கை (மகிந்த) அரசாங்கமே அதிகமாக உதவி செய்திருக்கிறது.

இனியும் போலி தூதுவர்களாலும் ரட்சகர்களாலும் (புலிகள் என்று சொல்லும் போலியானவர்கள்) பிழையாக நீங்கள் வழிநடத்தப்படுவதை அனுமதிக்கக் கூடாது'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி அவர்களே! உங்கள் பிரார்த்தனை இன்னும் பலிக்கவில்லையே. சொன்னதை இனியாவது செய்யுங்கள். தமிழர்களுக்கு வாழ்வைத் தாருங்கள். ✱




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூந்தல் அழகுக்கு



* கூந்தலில் எக்காரணம் கொண்டும் சிக்கு பிடிக்கக்கூடாது.
* தூங்கும்போது முடியை நன்கு சீவி பின்னல் போட்டுக் கொள்ள வேண்டும். விரித்துப் போட்டுக்கொண்டு படுக்கக்கூடாது.
* காலையில் தூங்கி எழுந்ததும், முதல் வேலையாக கூந்தலில் சிக்கு இருந்தால் அதை எடுத்து, பின்னல் போட்டுக்கொள்ள வேண்டும் அல்லது, கட்டிக்கொள்ள வேண்டும்.
* பின்னல் போட்டு ஹேர்பன் போடுவதைவிட ரிபன் கொண்டு கூந்தலைக் கட்டுவது தான் கூந்தலுக்குப் பாதுகாப்பானது.
* கூந்தலை அடிக்கடி விரித்துப் போட்டுக் கொண்டால் கூந்தலின் வளர்ச்சி குறைவாக இருக்கும்.
* அடிக்கடி எண்ணெயை மாற்றித் தேய்த்தால் முடி உதிர ஆரம்பித்துவிடும். ஒரே எண்ணெய் தான் தேய்த்துவர வேண்டும். அதுவும் சுத்தமான எண்ணெயாக இருக்க வேண்டும். இதில் முதல் சொய்ஸ் தேங்காய் எண்ணெய்க்குத் தான்.
* கூந்தலுக்கான அற்புத எண்ணெயை வீட்டிலேயே நாம் தயாரித்துக்கொள்ளலாம். தேங்காய் எண்ணெய்க்குள் தேவையான அளவு சோற்றுக் கற்றாழையின் உள்ளீட்டினை சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் போடுங்கள். வாணலியில் அது நன்கு கொதித்து வந்ததும் இறக்கிவிடவும். அதைப் போத்தல்களில் சேகரித்து வைத்துக் கூந்தலுக்கு உபயோகியுங்கள்.

# இளமைக்கு



இன்றைக்குப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் பல்வேறு துறைகளில் எவ்வளவோ முன்னேறி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு இளமையிலிருந்தே அழகு மற்றும் உடல் நலம் பேணும் வழிமுறைகள் சரியாகக் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை என்பது ஒரு குறைதான். வாழ்க்கையில் முன்னேறுவது மட்டுமல்லாது, உடல் அழகிலும், தோற்றத்திலும் தன்னை மேம்படுத்திக் கொள்வது, அவர்களின் முன்னேற்றத்திற்குக் கூடுதலாகத் துணை புரியும் என்பதே உண்மை. அப்படி தோற்றம் மற்றும் அழகை மேலும் அழகுபடுத்திக் கொள்ள அரோமா தெரப்பி பலவகைகளில் நமக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. பழங்காலத் தில் இலைகளையும், பூக்களையும் கொண்டே மருத்துவம் பார்த்தார்கள். அதற்கு ஆயுர்வேதம் என்று பெயர் வைத்தனர். அதை அடிப்படையாகக் கொண்டது அரோமா தெரப்பி. இயற்கை கொடுத்த வரமான இலைகளும், பூக்களும் மருத்துவத்திற்கு மட்டுமன்றி, பெண்களின் அழகுக்கும் அழகு சேர்ப்பதைப் பழங்கால மக் களும் அறிந்து வைத்திருந்தனர். இந்த அரோமா தெரப்பி மூலம் அழகை அதிகப் படுத்தும் சிகிச் சைகளை மேற்கொள்ளலாம். இந்தச் சிகிச்சைக்குப் பலவித தைலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ★

# தாய்மைக் காலத்தில்...

காலையில் எழுந்திருக்கவே முடியவில்லை, ஒரே தலைச் சுற்றல், வாந்தி, மயக்கம் என 'மோர்னிங் சிக்னெஸ்' குறித்துப் புலம்பும் தாய்மை நிலையில் இருக்கும் பெண்களுக்கு ஒரு புதிய ஆராய்ச்சித் தகவல். தாய்மைக் காலத்தின் முதல் பாகத்தில் இத்தகைய அசௌகரியங்களைச் சந்திக்கும் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அதிக அறிவாற்றல் உடையவர்களாக இருப்பார்கள் என அறிவிக்கிறது இந்த ஆராய்ச்சி. தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் எல்லாமே ஆரோக்கியமான தாய்மையின் அடையாளங்கள் எனவும், இத்தகைய அறிகுறிகள் காணப்படும் பெண்களின் குழந்தைகள் இதயம் தொடர்பான நோய்கள் வருவதிலிருந்து தப்புகிறார்கள் எனவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கூடவே இப்படிப்பட்ட சிக்கல்கள் அன்னைக்கு இருந்தால் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பும் பெருமளவில் குறைவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. 121 தாய்மார்களை வைத்து நிகழ்த்தப்பட்ட இந்த ஆய்வு குழந்தைகளுடைய மூன்றாவது வயது மற்றும் ஏழாவது வயதில் சோதனைகளை நடத்தியது.



இதில் தாய்மைக்காலத்தில் எந்தச் சிக்கலும் இல்லாமல் இருந்த தாய்மார்களின் குழந்தைகளைவிட, தாய்மைக் காலத்தில்கஷ்டப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் படு சுட்டிகளாக இருந்தார்களாம்.

பல்வேறு ஆய்வுகளின் முடிவாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தாய்மைக் காலத்தில் நிகழும் ஹோர்மோன் வெளியேற்றமே இந்த மோர்னிங் சிக்னெஸ் எனப்படும் சிக்கல்களுக்குக் காரணம் எனவும், இது கருவையும், கருப்பையையும் பாதுகாக்கும் நிகழ்வு எனவும் மருத்துவ விளக்கம் அளிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ★

# தொலைக்காட்சியால் துரத்தப்பட்டவள்

'கேரி' என்ற பிரிட்டிஷ்காரர் நாள் முழுதும் டிவி பார்த்து தொல்லை தரும் தனது மனைவியை விற்கப் போவதாக அறிவித்து விளம்பரம் செய் துள்ளார். இவரது மனைவி டோனா. இருவருக்கும் திருமணமாகி ஓராண்டாகிறது.

தேவையில்லாத டிவி நிகழ்ச்சிகளை டோனா பார்ப்பது கேரிக்கு பிடிக்கவில்லை. இதையடுத்து தொல்லை தரும் மனைவி, சிறப்பாக பராமரிக்கப்பட்டவர், வரி கிடையாது என்ற குறிப்புகளுடன் வீட்டு உபயோக பொருட் கள் வர்த்தக பகுதியில் தனது மனைவியை விற்கப்போவதாக கேரி விளம்பரம் வெளியிட்டார்.

தேவையில்லாத டிவி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை அவள் நிறுத்தவேண்டும் என்பதற்காக விளையாட்டாகவே இந்த விளம்பரத்தை வெளியிட்டேன். யாரும் விலை பேச வர மாட்டார்கள் என நினைத்தேன். ஆனால் 10க்கும் மேற்பட்டவர்கள் என்னைத் தொடர்பு கொண்டனர் என்று தெரிவித்துள்ளார். ★



# ஆள் பாதி... ஆடை பாதி...



ஆள் பாதி... ஆடை பாதி என்பது பழமொழி. இப்போதெல்லாம் ஆடைதான் அனைத்தையுமே தீர்மானிக்கிறது. ஒருவரைப் பார்க்கும்போது அவர் அணிந்திருக்கும் ஆடையை வைத்தே நாம் அவரை மதிப்பிடுகிறோம். சில பெண்கள் அணிந்துள்ள ஆடைகளைப் பார்க்கும் போது சம்பந்தமே இல்லாமல் இருக்கும். அது புடைவையாக இருந்தாலும்... அல்லது சுடிதார், ஜீன்ஸ் போன்ற நவீன உடை களாக இருந் தாலும் உடலமைப்பு சரியாக இல்லாத போது அது பொருத்தமாக இருக் காது. அவரவருக்குப் பொருத்தமான ஆடைகளைப் பொருத்தமான முறையில் அணிந்தால் கண்டிப்பாக எல்லோரையும் கவரலாம்.

அதாவது கந்தையான ஆடையாக இருந்தாலும் அதைத் துவைத்து, அயர்ன் செய்து அணிந்தால் அழகாகவே இருக்கும். நிறத்திற்கும், தோற்றத்திற்கும், உயரத்திற்கும் பருமனுக்கும் மற்றும் பருவத்திற்கும் தகுந்தபடி ஆடைகளை அணிந்தால் கண்டிப்பாக நாம் அழகாகத் தெரிவோம். ஒல்லியும் உயரமுமாக இருக்கும் பெண்கள் கோடு அல்லது கட்டம் போட்ட உடைகளை அணியக்கூடாது. முடியை கழுத்துக்கு மேல் தூக்கி முடி அலங்காரம் செய்யவும் கூடாது. சிறிய கரை போட்ட புடைவை அல்லது நீள வாக்கில் பூவேலை செய்த சுடிதார் அணிய வேண்டாம். சற்று பெரிய பூக்கள் போட்ட பளிச் சென்ற புடைவைகள் அல்லது சுடிதாரும் போட்டமும், பூப்போட்ட சுடிதாரும் அணியலாம். நீளமான அகலமான டிசைன் எதுவும் இல்லாத துப்பட்டாவை பொருத்தமான கலரில் அல்லது வெள்ளை, கறுப்பு நிறங்களில் அணியலாம். உயரமான ஒல்லியான பெண்கள், கறுப்பு அல்லது மாநிறமாக உள்ளவர்கள் அழுத்தமான நிறங்களில் ஆடைகளைத் தேர்ந் தெடுக்கக் கூடாது. அப்படியே தேர்ந்தெடுத்தாலும் அடர்த்தி மற்றும் வெளிர் நிறங்கள் மாறிமாறி வருவது போல் இருந்தால் நன்றாக இருக்கும். அதில் ஏதாவது ஒரு நிறத்தில் முடிந்தால் ஆடையில் உள்ள லைட் நிறப் ப்ளவுசோ அல்லது துப்பட்டாவோ அணிய வேண்டும். உயரமான வர்கள் கழுத்தில் நீள மாகத் தொங்கும் ஆபர ணங்கள் அணியாமல் கழுத்தை ஒட்டி இருக்கும் சிறிய நெக்லஸ் அணியலாம். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரை விமர்சனம்

**வெ**வ்வேறு விதமான லட்சியங்கள், தேவைகள், அபிலாஷைகளுடன் ஒரு சுபயோக சுப தினத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருந்து கிளம்பி வந்து சென்னையில் சங்கமிக்கும் எஸ்.டி..ஆர். ( சிம்பு), பரத், பிரகாஷ் ராஜ், அனுஷ்கா, சரண்யா, வேகா உள்ளிட்டவர்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் தங்களது லட்சியங்களை காற்றில் பறக்க விட்டு, பலரது உயிர்களைக் காக்க காரணமாவது தான் 'வானம்' படத்தின் மொத்தக் கதையும்,

அதில் சென்னை நகர் பகுதியில் குப்பம் ஒன்றில் கேபிள் கனெக்ஷன் ஊழியனாக வசிக்கும் சிம்பு எஸ்.டி..ஆருக்கு அதே பகுதியில் உள்ள பணக்கார வீட்டுப் பெண் ஒருவர் மீது காதல். அதைக் காதல் என்பதை விட அந்த பெண் மீது சிம்புவுக்கு ஒரு கண் என்பதே பொருந்தும். காரணம், அந்தப் பெண்ணை பல்வேறு பொய்கள் கூறி அடைய நினைக்கிறார் சிம்பு. அவர் மூலம் நிஜமாகவே பணக்காரர் ஜாதிப் பட்டியலில் இடம் பிடிக்கத் துடியாய், துடிக்கிறார். அதற்காக சிம்புவுக்கு நாற்பதாயிரம் ரூபாய் தேவை எனும் நிலையில் நண்பர் சந்தானத்துடன் சேர்ந்துகொண்டு வழிப்பறியில் எல்லாம் ஈடுபடும் அவரிடம், சென்னையில் கிட்னியை விற்று ஊரில் தன் மகன் படிப்பைத் தொடரச் செய்யும் முயற்சியில் இறங்கும் சரண்யாவும், அவரது வயதான அப்பாவும் வகையாகச் சிக்குகின்றனர். சரண்யா கிட்னி விற்ற காசை சிம்பு தட்டிப் பறித்தாரா, பணக்கார காதலியின் கை பிடித்தாரா என்பது ஒருபக்கம் என்றால், மற்றொரு பக்கம் இராணுவத்தில் சேர வேண்டும் என்ற தாயின் ஆசையை நிராகரித்து தனியாக இசைக்குழு நடத்த வேண்டும் என்னும் லட்சியத்துடன் சுயநலம் மட்டுமே கருத்தில் கொண்டு காதலி மற்றும் நண்பர்களுடன் சென்னைக்கு வரும் பரத் படும் பாடுகளையும், அனுஷ்கா உள்ளிட்ட அழகிகளை வைத்து அந்த மாதிரி தொழில் பண்ணும் ராணி அம்மாள் மற்றும் சென்னைக்கு அரவாணி அக்காவுடன் ரயிலேறும் அனுஷ்கா படும் பாடுகளையும், ஊரில் விநாயகர் ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் வாழ்க்கையைத் தொலைத்த தம்பியைத் தேடி நகருக்கு கர்ப்பணி மனைவி சோனியா அகர்வாலுடன் வந்து இஸ்லாமியர் பிரகாஷ் ராஜ் படும் பாட்டையும், கலந்து கட்டி, கலக்கலாக கதை சொல்லியிருக்கும் காரணத்திற்காகவே இயக்குனர் கிரிஷை பாராட்டலாம். என்ன வாழ்க்கைடா இது என்னும் பஞ்டயலாக்குடன், கேபிள் ராஜா எஸ்.டி..ஆரும், அவரது லோ கிளாஸ் நண்பர் சந்தானமும் அடிக்கும் நகைச்சுவைகள் சிரிப்பு. படம் முழுக்க இப்படி சிரிப்பாய் சிரிக்க வைத்து விட்டு, கடைசியில் உருக வைக்கிறது. பரத், வேகாவுடன் செய்யும் கார் பயணத்தில் தொடங்கி, காதல் பயணம் வரை சகலத்திலும் இன்றைய சுயநல இளைஞர்களைப் பிரதிபலித்து, கடைசியில் அவர்களுக்கு சரியான சவுக்கடி தந்திருக்கிறார்.

அந்த மாதிரி பெண் சரோஜாவாக அனுஷ்கா அசத்தியிருக்கிறார். பிரகாஷ் ராஜ் தலைக்கு குல்லா, கண்களில் மை என ஒரு இஸ்லாமிய தோழராகவே பிரமாதப்படுத்தியிருக்கிறார். சந்தானம், சரண்யா, சோனியா அகர்வால், வேகா, பஜனை கணேஷாக வரும் தயாரிப்பாளர் வி.டி.வி.கணேஷ் உள்ளிட்ட எல்லோரும் வானம் வசப்படும் அளவு நடித்திருக்கிறார்கள் என்றால், இசையமைப்பாளர் யுவனும், ஒளிப்பதிவாளர்கள் ஞானசேகர், நீரவ்ஷா ஆகியோர் வானம் வளப்படும் அளவு தங்கள் பங்கைச் சரியாகச் செய்திருக்கிறார்கள். வெற்றி பெற வேண்டும் என்று யார் சொன்னது? பிற உயிர்களுக்காகவும், அவர்களது லட்சியங்களுக்காகவும் உயிர்த்தியாகம் செய்யலாம் எனப் புதிய இலக்கணம் வகுத்திருக்கிறது வானம்! ★






## கைகழுவினார்

நடிகை தமன்னாவைக் காதலித்து ஏமாற்றிய
பிரபல வாரிசு நடிகர் கார்த்தி. முதல் படத்தி
முன்னணி நடிகர் அந்தஸ்த்தைப் பெற்றுவிட்
தமன்னா இரண்டு படங்களில் நடித்திரு
படப்பிடிப்பின்போது இருவருக்குள்ள
விட்டதாகக் கிசுகிசுக்கள் கிளம்பின.
அகர்வாலுடன் இணைத்துக் கிசுகிசுக்
கிசுகிசுக்களையும் ஒட்டுமொத்தமாக
தமன்னாவை நேசித்ததாகவே தகவல்
காரணம் கார்த்தியின் சகோதரனான
நடிகையைத்தான் காதலித்து திருமண
செய்து கொண்டார். ஆரம்பத்தில் அந்த
பெற்றோர் சம்மதிக்காவிட்டாலும், ஒரு
பெற்று திருமணம் முடித்துவிட்டார். அத
பெற்றோர் பச்சைக் கொடி காட்டுவ
கார்த்தி. தமன்னாவிடமோ என
(பெற்றோரிடம்) சொல்ல
பையா பட பாட்டை பா
கொண்டிருந்தார் அவர்.
இதற்கிடையில் விஷயம்
நடிகர் சிவகுமார், கார்த்தி
கண்டித்ததுடன் இனிமே
பெண்ணுடன் எந்தப் பட
என்று கடுமையான உத்த
கிறார். இந்த ஜோடியை
நினைத்த முக்கிய புள்ளிக
யும் வைத்துப் படம் தயாரி
வேண்டுகோள் விடுத்திரு
தடுத்து சினிமாவில் ஜோடி
போனது இந்த காதல்
நிஜத்திலும் ஜோடி சேர மு
கார்த்திக்குத் திருமணத்தை
அதனால்தான் தமன்னா இ
எதிலும் நடிப்பதில்லை என
வந்திருக்கிறார்.
தமிழ்நாட்டுப் பக்கம் தலை
மாட்டேன் என்று கூ
தெலுங்குப்
ஐக்க

## சீனாவிலும் காவலன்



**ம**லையாளத்தில்
வெளியாகி சூப்பர் ஹிட்டான
'பொடிகார்ட்' படம் தமிழில் காவல
என்ற பெயரில் வெளியானது.
இப்படத்தில் விஜய், அசின், மித்ர
வடிவேலு, ராஜ்கிரண், ரோஜா உள்ள
நடித்திருந்தனர். இயக்குநர் சித்திக்
பல்வேறு பிரச்சினைகள் கடந்து காவ
வெளியாகி சூப்பர் ஹிட்டாகியுள்ளது.
இப்படம் சீனாவின் ஷாங்காய்
உலகப்பட விழாவில் திரையிடப்ப
சீனாவின், ஷாங்காய் நகரில் 14வது
விழா நடக்கிறது. உலகின் 80க்கும்
இருந்து 2500க்கும் மேற்பட்ட பட
திரையிடப்பட உள்ளன. இதில் மு
தென்னிந்தியாவிலிருந்து காவலன்
யுள்ளது. காவலன் படம் பனோர
ளது. வருகின்ற ஜூன் 11 ஆம் திக
நடைபெற இருக்கும் இவ்விழா
கொள்ளுமாறு அழைப்பு விடுத்து

## ரசிகர்கள் தான் எல்லாமே

ரசிகர்கள்தான் எங்களுக்கு எல்லாமே... எங்களை வாழ வைப்பதே ரசிகர்கள்தான் என்று நடிகர் ஜீவா நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். தஞ்சாவூரில் கோ படம் திரையிடப்பட்டிருக்கும் தியேட்டருக்கு படத்தின் நாயகன் நடிகர் ஜீவா விஜயம் செய்தார். அப்போது ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்துடன் பேசிய ஜீவா, தஞ்சையில் இவ்வளவு பெரிய வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. தற்போது புதிய படங்கள் திரைக்கு வந்தால் 2 வாரத்திற்கு பின்பு தியேட்டருக்கு கூட்டம் வருவதில்லை. ஆனால் 'கோ' படம் திரையிட்டு 16 நாட்கள் ஆகியும் இவ்வளவு கூட்டம் வந்து இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. திருட்டு வி.சி.டி.யில் படம் பார்க்காமல் தியேட்டருக்கு நேரில் வந்து பார்த்து இருக்கிறீர்கள். நல்ல படம் எடுத்தால் மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும் என்பதை தெரிந்து கொண்டேன். ஒரு திரைப் படம் எடுக்கிறோம் என்றால் 200 குடும் பங் கள் அதனால் வாழ்கின்றனர். அவர்களை எல்லாம் நீங்கள் தான் வாழ வைக்கிறீர்கள். நீங்க இல்லைன்னா நாங்க இல்லை, எங்களுக்கு எல் லாமே நீங்கள்தான், என்றார். ★



நினை
தான் என
கிலோ மீற்ற
நான் பிறந்த ஊ
கிராமம். அப்பா ப
யாளர். இருவருமே
அறியும், அவர்களின்
அவர்கள் நன்கு அறிவ
வேன். வீட்டுக்கருகில் ஒ
வார். ஆனால், அவர் தோள்
படி நானாக ஆற்றங்கரையில்
லேயே இன்றுவரை நீச்சல் கற்
டுக்கு நல்ல நடிகையை கொடுக்
நல்ல டாக்டர், நல்ல விளையாட்
கேரளா இழந்துவிட்டது! ஆனால்,
சென்றாலும் இந்த மூவரும் எங்கிரு
விடுவார்கள், எனத் தன் நினைவுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ார் கார்த்தி

ரமாற்றியிருக்கிறார்
படத்திலேயே
பற்றுவிட்ட கார்த்தியுடன்
நடித்திருக்கிறார். அந்தப்
ருக்குள்ளும் காதல் அரும்பி
ாம்பின. இடையில் கார்த்தி காஜல்
கிசுகிசுக்கப்பட்டார். இரண்டு
ாத்தமாக மறுத்த அவர்,
தகவல்கள் வெளியாகின.
ரனான சூர்யாவும் ஒரு
திருமணம்
தில் அந்த திருமணத்திற்குப்
வும், ஒருவழியாகச் சம்மதம்
ார். அதனால் தம் காதலுக்கும்
காட்டுவர் என எதிர்பார்த்திருந்தார்
மோ என் காதலை
சொல்ல நேரமில்லை... என்று
டை பாடிக்
அவர்.
விஷயம் கேள்விப்பட்ட
, கார்த்தியைக்
இனிமேல் அந்தப்
ந்தப் படத்திலும் நடிக்கக் கூடாது
ன உத்தரவையும் போட்டிருக்
டியை வைத்துப் படம் எடுக்க
புள்ளிகளிடமும் இவ்விருவரை
ம் தயாரிக்க வேண்டாம் என
டுத்திருக்கிறார். அதனால் அடுத்
ல் ஜோடி சேர வாய்ப்பில்லாமல்
ாதல் ஜோடிக்கு. இப்போது
சேர முடியாத அளவுக்கு
ணத்தை நிச்சயித்து விட்டனர்.
ன்னா இனித் தமிழ்ப்படங்கள்
லை என்கிற முடிவுக்கு

கம் தலைவைத்துப் படுக்க
என்று கூறி
லுங்குப் பக்கம்
ஐக்கியமாகும் முடிவில்
இருக்கிறாராம்
தமன்னா.★

டான
ல் காவலன்
னது.
ன், மித்ரா,
ஜா உள்ளிட்ட பலர்
சித்திக் இயக்கி இருந்தார்.
ந்து காவலன் படம் தமிழில்
யுள்ளது. இந்நிலையில்
காய் ...ில் நடக்கும்
ரயிடப்பட இருக்கிறது.
ல் 14வது உலகத் திரைப்பட
80க்கும் மேற்பட்ட நாடுகளில்
ட்ட படங்கள் இவ்விழாவில்
இதில் முதன்முறையாக
காவலன் படம் மட்டுமே தேர்வாகி
பனோரமா பிரிவில் தேர்வாகியுள்
ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை
வ்விழாவிற்கு, விஜய்யையும் கலந்து
விடுத்துள்ளனர் விழாக்குழுவினர். ★



# பழைய ஷம்மு

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த கதையாக உருவாகிறது 'பாலை'. 'கற்றது தமிழ்' ராமின் உதவியாளர் செந்தமிழன் இயக்குகிறார். கதாநாயகனாக புதுமுகம் சுனில் நடிக்கிறார். முற்றிலும் புதிய கலைஞர்கள் பணியாற்றும் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் ஷம்மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடக்கும் கதை என்பதால் அதற்கேற்ப ஷம்முவின் பாத்திரம் உடல்மொழி வித்தியாசமாக இருக்கும் என்கிறது பட வட்டாரம். பெரும்பாலான காட்சிகளுக்காக காடுகளில் இதன் படப்பிடிப்பு நடக்கிறது. தஞ்சை அருகே உள்ள பகுதிகளிலும் சத்தியமங்கலம், தொடைக்கானல், மைசூர் காட்டுப் பகுதிகளில் படப்பிடிப்பு நடத்த உள்ளனர். 'காஞ்சிவரம்' படத்தில் எனது நடிப்பு பேசப்பட்டது. 'மயிலு' வெளியானால் மீண்டும் எனது திறமை வெளிப்படும் என காத் திருந்தேன். அப்படம் தள்ளிப்போயுள்ளது. இப்போது 'பாலை'படத்தில் சவாலான வேடம் கிடைத்திருக்கிறது. ★




ஙப்போதும் உங்களை யாரோ பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சாலையில் நடந்தால் சகல கண்களும் உங்களையே பார்க்கின்றன. விட்டுக்குள் இருப்போம் என்றால் மூட்டை மூட்டையாக பூங்கொத்துக்களும் காதல் ரசம் சொட்டும் கடிதங்களும் குவிகின்றன. காரணம் அழகு.

இதே பிரச்சினைதான் தென்கொரிய பெண் ஒருத்திக்கும். ஆண்களின் கண்கள் அவள் விருப்பமில்லாமல் அவள் மீது மேய்ந்தால், பெண்களின் கண்களோ பொறாமையால் மேய்கின்றன. நெருங்கிய தோழியின் காதலனோ அவளை வேறுவிதமாக பார்க்கத் தொடங்குகிறான். இதனால் தோழி விரோதியாகிறாள். ஆரம்பத்தில் பெருமிதமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்த அழகுதான் இப்போது அவளுக்குச் சாபம்.

இதையெல்லாம் தாண்டிய கொடூரமும் நடந்து விடுகிறது. அவளது அழகை அளவுக்கு அதிகமாக நேசிக்கும் இளைஞன் ஒருவன் அதீத உணர்வினால் அவளைப் பலாத்காரம் செய்து விடுகிறான். உன் அழகுதான் என்னை இப்படிச் செய்ய வைத்தது என்று அழுகிறான். அடுத்த நொடியே அவளது விருப்பமில்லாமல் செயற்பட்டதற்காக மனம் உடைந்து பொலிஸில் சரணடைகிறான் அவன்.

ஆழகாக இருப்பது அவ்வளவு குற்றமா? தன் அழகே ஆபத்து என்று நினைக்கிறாள் அவள். அவலட்சணமாக மாற முடிவெடுக்கிறாள். கண்டதையும் தின்றால் குண்டாகலாம் என பாலும் வெண்ணெயும் ரொட்டியுமாகத் தின்கிறாள். வாந்தி எடுக்கிறாள். இருந்தாலும் தளரவில்லை. அவ்வளவு பொருட்கள் வாங்கவும் பணமில்லாமல் போகவே கடையிலிருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு ஓடுகிறாள். எப்படியாவது விடுபடத் தவிக்கிறாள். குண்டாகும் முயற்சிக்கு அவளது உடல் ஒத்துழைக்க மறுக்கவே, மிக மோசமாக தோற்றமளிக்கும் வகையில் படு ஒல்லியாக முயற்சிக்கிறாள். மாத்திரைகள் விழுங்குகிறாள். தன் இழிநிலைக்குக் காரணம் பலாத்காரம் செய்த இளைஞன் தான் என நினைக்கிறாள். பிரமையில் யார் யாரையோ அவன் என நினைத்துக் கொலை செய்யத் திரிகிறாள்.

இதற்கிடையே விசாரணைக்கு வரும் பொலிஸ்கார இளைஞனும் அவளது அழகில் மயங்குகிறான்.அவளது செயற்பாடுகளை வருத்தத்தோடும் அனுதாபத்தோடும் பார்க்கிறான். பல விதங்களில் உதவுகிறான். இருந்தாலும் பலனில்லை.

ஒருகட்டத்தில் அளப்பரிய அந்த அழகும் மங்கத் தொடங்குகிறது. அந்தப் பொலிவின் தன்மையை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இழந்தது இழந்தது தானே?தாங்க முடியாமல்போன அவளது மனநிலை மேலும் அதிக பாதிப்புக்கு உள்ளாகிறது. உடை கிழித்து, ஓட்டம் எடுத்து, துப்பாக்கியால் சுட்டு அந்தக்குழப்பதில் அவளது உயிரே போகிறது. சவச்சாலையில் கிடக்கும் அவளது உடலைக்கூட வைத்தியரால் வெறும் உடலமாக அணுக முடியவில்லை. ஏனென்றால் அவள் அத்தனை அழகு.


எடை கூடி விடும். உடலமைப்பு மாறிவிடும். அழகு குறைந்து விடும் என்ற பயத்தினால் சாப்பிடுவதையே கூடியவரை தவிர்க்கிற பல பெண்கள் கொரியாவில் உள்ளனர். மிக நுட்பமாகத் தன் ஒல்லியழகைப் பேணும் பெண் ஒருத்தியின் வாழ்வின் சிக்கல்களை விவரிக்கிறது 'பியூற்றிபுல்' என்ற இப்படம்.

ஆண்-பெண் மனச்சிக்கல்களை அற்புதமாக அணுகும் கொரிய இயக்குநர் கிம்-டுக் எழுதிய கதை. இயக்கியவர் ஜியான் ஜே-ஹோங்.★

# படமாகிறது வாழ்க்கை

இந்திய சூப்பர் ஸ்டார் என்ற பெருமைக்குரிய ரஜினியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது, தமிழில் அல்ல ஹிந்தியில்!.

இந்தியாவில் நடிகர் ஒருவரின் முழு வாழ்க்கை வரலாறு சினிமாவாக எடுக்கப்படுவது இதுவே முதல்முறை. ரஜினியின் அனுமதியுடன் ரஜினி வாழ்க்கையை சினிமாவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் பாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர் அதுல் அக்னி ஹோத்ரி. இந்தப் படத்தில் நடிப்பவர்கள் குறித்து இன்னும் முடிவு செய்யவில்லையாம். ரஜினியின் முக அமைப்பையொத்த சில புதுமுகங்களைத் தேர்வு



செய்துள்ளார்களாம். ரஜினியின் உடல்மொழி, மேனரிஸங்கள் யாருக்கு சரியாக வருகிறதோ அவரை ரஜினியாக நடிக்க வைக்கப் போகிறார்களாம். படத்துக்கு ரஜினியின் முன்னுரையைப் பெறவும் திட்டமுள்ளதாம். இந்தியாவில் இதுவரை எந்த சினிமா கலைஞரின் வாழ்க்கை வரலாறும் முழுமையாகப் படமாக்கப்பட்டதில்லை. ★


# ...மமே

இயற்கை தவழ்ந்து கொஞ்சி விளையாடும் கேரளாவில் பிறந்த ஒவ்வொருவரது ஞாபகங்களும் அந்த இயற்கையைப் போன்றே பசுமையாக இருக்கும் என்பார்கள். எனது நினைவுகளை மீட்டும்போது அது உண்மை
தான் என்று தெரிகிறது. கொச்சியிலிருந்து 40
லா மீற்றர் தொலைவில் உள்ள பெரும்பாவூர்தான்
பிறந்த ஊர். மலைகளின் நடுவில் இருக்கும் அழகான
அப்பா பத்திர எழுத்தாளர், அம்மா ஸ்டாம் விற்பனை
வருமே ஒரே துறையில் இருப்பதால் ஊரே அவர்களை
ர்களின் பிள்ளை நான் என்பதால் என்னையும்
கு அறிவர். தண்ணீரைக் கண்டாலே பயந்து நடுங்கு
நகில் ஓடும் ஆற்றுக்கு அப்பா அழைத்துச் செல்
ர் தோள் களில் அமர்ந்துதான் குளிப்பேன். மற்றப்
ரையில் கூட தனியாகக் கால் வைத்த தில்லை. இதனா
ச்சல் கற்றுக் கொள்ளவில்லை. தங்கத் தமிழ் நாட்
கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நல்ல டீச்சர்,
ளையாட்டு வீராங்கனை ஆகிய மூன்றையும்
ஆனால், பெரும்பாவூருக்கு எப் போது நான்
எங்கிருந்தோ ஓடிவந்து என்னுள் ஐக்கியமாகி
னைவுகளைப் பகிர்ந்துகொண்டார் அனன்யா.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 469



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### மேலிருந்து கீழ்

01. கணவன்- மனைவி.
02. சாதகமானது அல்ல.
03. நாள்.
04. நிலுவை அளவை.
05. ரூபாயின் நூறு.
06. சாப்பிடு.
09. சாவி.
12. காலைக்குப் பின் வருவது.
13. தாய், தகப்பன், பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து உருவாவது.
14. அடுப்படியில் காணப்படும் கருவி.
15. நடந்து செல்லுமாறு விடுக்கப்படும் பணிப்பு.
16. இந்த மாவும் உணவுக்கு அவசியம்.
17. சோறுக்கு சுவையூட்டுவது.
18. தங்குமிடம்.
20. ஈரலிப்பான இடத்தில் வளரும்.

### இடமிருந்து வலம்

01. உழைத்துப் பெறு.
04. அலுப்பால் வருவது.
07. செல்வந்தன்.
08. பத்துப் பாடல்களைக் கொண்டது.
10. தங்களது, தமது என்பதனைக் கொண்டது.
11. உயர்வானது
12. நெஞ்சுப்பகுதி.
14. இது ஓய்வதில்லை.
15. மத்தி.
16. உயர்வானது (பைசா, ஈபிள் எல்லாம் இதனுள் அடக்கம்)
18. நஞ்சு
19. சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன் மூலம்
21. நடுப்புள்ளி
22. சேதமுற்றபின் எஞ்சுவது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 469

*சொற்சிலம்பம் 469 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு மே 29 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 05 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார் கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 466 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **திருமதி.எஸ்.என்.மணி,** 106, மஹிந்த மாவத்தை, ஹவஎலிய, நுவரெலியா.

**2 ஆம் பரிசு** — **சூ.வாலாம்பிகை,** 136, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு** — **க.பரமானந்தராஜா,** 155, விஷ்ணு கோவில் வீதி, கல்குடா.

## சொற்சிலம்பம் போட்டி இல.466 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.மதுரகவி 02.கதி. 03.துவாரம் 04.வடிவு. 05.மதி. 08.பால். 09.படம். 10.தடிமன். 12.பதற்றம் 13.தன்னலம். 15.அகன்ற. 16.மனது. 17.உகு. 18.கற

### இடமிருந்து வலம்

01.மகத்துவம். 06.துதி. 07.வாடி. 08.பாதி. 09.பரவுதல். 11.கபடம். 14.விதம். 15.அமரன். 17.உறவினன். 18.கல 19.கும். 20.துறவறம்.

## பாராட்டுப் பெறுவோர்

(1) **செல்வி.தி.நாகவி,** இல.16, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13

(2) **எஸ்.றியாஸ்முஹம்மத்,** இல.680, புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03.

(3) **வே.கார்த்திகேசு,** விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

(4) **A.P.செல்வி,** இல.187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(5) **ஞா.இம்மனுவல்,** 85/4 மவுன் கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(6) **தர்மிக்கா தர்மதாஸ்,** புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.

(7) **தாமோதரம் வடிவேல்,** இல.5, ஏறாவூர், செங்கலடி.

(8) **திருமதி.கோமளா சுசீலன்,** பூவத்தோட்டம், இமையாணன் கிழக்கு.

(9) **சி.குகராஜா,** இல.36/35 கண்டி வீதி, சுமேதகம, திருகோணமலை.

(10) **செ.மகேந்திரன்,** சின்னப்பா வீதி, நவாலி.




**கோ.ராகவன்,**
**மட்டக்களப்பு.**

கேள்வி: துறவறம் பூண வேண்டிய நிலை ஒரு ஆணுக்கு ஏன் ஏற்படுகிறது?

பதில்: சிலருக்கு மனைவி அமையாததால் துறவறம் பூண நேர்கிறது. வேறு சிலருக்கு அமைந்த மனைவியால் துறவறம் பூண நேர்கிறது.

**தே.ரஜிதன்,**
**தோணிக்கல், வவுனியா.**

கேள்வி: சுயநலவாதி, பொது நலவாதி. இவர்களில் யாரால் வெற்றி பெறமுடிகிறது.

பதில்: இவர்களை விட சந்தர்ப்பவாதி இலேசாக வெற்றியைத் தட்டிச் சென்று விடுகிறான்.

**அ.அன்பழகன்,**
**மாதகல்.**

கேள்வி: மனித வாழ்க்கையில் பெண் சுகம் அவசியம் தானா?

பதில்: விரக்தியால் தோன்றும் சிந்தனை இது. நானும், நீரும், எமக்கு அடுத்த சந்ததியும் தோன்றுவதற்கு அது அவசியம் அல்லவா?

**பா.பாமதி,**
**திருகோணமலை.**

கேள்வி: நைன்றிகளை நம்பி ருவன்றிகளுக்கு பாதுகாப்புக்கு அனுப்பலாமா?

பதில்: சில சமயம் நண்டைச் சுட்டு வைத்துவிட்டு நரியைக் காவலுக்கு வைத்த கதையாகி விடக்கூடும். எதற்கும் கவனம் அவசியம்.

**த.கண்ணன்,**
**நல்லூர்.**

கேள்வி: பெண் அழகாய்த் தெரிவாளா? இனிமையாய் இருப்பாளா? சுமையாய் தோன்றுவாளா?

பதில்: அது பருவத்தைப் பொறுத்தது. முதலில் காணும் போது அழகாய்த் தோன்றுவாள். பழகும் போது இனிமையாய் இருப்பாள். தாலி கட்டிக் கொஞ்ச நாள் சென்றால் சுமையாகத் தோன்றுவாள்.

**இ.இளையதம்பி. வவுனியா.**

கேள்வி: கல்யாணமான பெண்கள் தங்களது பெயருக்குப் பின்னாலேயே தமது கணவர்மாரின் பெயரைப் போட் டுக் கொள்வதேன்?

பதில்: தமது கணவன்மார் எப்போதுமே தமக்குப் பின்னால் வரவேண்டியவர்கள் தான் என்பதைக் குறிப்பிடுவதற்கான நோக்கமாக இருக்குமோ?.

**வே.ராசநாயகம்,**
**கிளிநொச்சி.**

கேள்வி: எனக்குத் தற்போது வயது 32. எனது கிரகப்படி எதிர்வரும் மூன்று வருடங்கள் வரை நான் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்கிறாரே சோதிடர்.

பதில்: "நாக்கை வறட்டுகிற தாகத்துக்கு நாள் பார்த்தானாம் கிணறு வெட்ட' என்ற கதை போலல்லவா இருக்கிறது இது.

**ம.ஆனந்தமூர்த்தி,**
**சாவகச்சேரி.**

கேள்வி: கொழுத்த சீதனம் வாங்கித் திருமணம் செய்து கொண்டேன். 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்' என்ற விதத்தில் எடுத்ததற்கெல்லாம் பிடிவாதம் பிடிக்கிறாளே என் மனைவி?

பதில்: என்ன செய்வது, ஆழமறியாமல் காலை விட்டுவிட்டதால் இனிச் சாண் போனாலென்ன முழம் போனாலென்ன என்று மனதைத் தேற்றிக் கொண்டு வாங்கிய சீதனத்துக் காக ஆமாம் சாமி போட வேண்டியது தான்.

**அ.தமிழரசி,**
**கொட்டாஞ்சேனை.**

கேள்வி: மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என் றால் கணவன் அமைவதெல்லாம்...

பதில்: பெரும்பாலும் சீதனம் கொடுத்த வரம்.

**கா.காளிதாசன்,**
**வவுனியா.**

கேள்வி: முள்ளி வாய்க்கால் 'ஜோக்ஸ்' ஒன்று சொல்லுமேன்?

பதில்: பயங்கரவாதிகளிடமிருந்து அப்பாவிப் பொதுமக்களை மீட்டெ டுக்கும் தமது மனிதாபிமானப் பணியை பொது மக்களின் உயிருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மேற்கொண்டதாக திரும்பத் திரும்ப காதில் பூச் சுற்றுகிறதே அரசு. முழுப் பூசணிக் காயைச் சோற்றுக்குள் மறைக்க முயலும் வகையிலான இது பொருத்தமான ஜோக் இல்லையா?

**க.சரவணமுத்து,**
**சாவகச்சேரி.**

கேள்வி: பெண்களின் உள்ளம் கரும்பா, இரும்பா?

பதில்: இரண்டும் கலந்த கூட்டு: கரும்பு போன்ற உடலுக்குள் இரும்பு போன்ற உள்ளம்;

**வே.பத்மநாதன், கிளிநொச்சி.**

கேள்வி: எனது நண்பரொருவர் 45 வயதிலும் கட்டைப் பிரம்மச்சாரி. ஆனால் எப்போதும் சந்தோஷமாக இருக்கிறாரே?

பதில்: அதுதான், உமது கேள்வியிலேயே அதற்கு விடையையும் கூறி விட்டீரே?

**ப.கமலவேணி,**
**ஓட்டுசுட்டான்.**

கேள்வி: சந்தியில் கூடி நின்று பாதையில் போகும் எமக்கு உபத்திரவம் தரும் நாய்களை என்ன செய்யலாம்?

பதில்: நான்கு கால் நாய்கள் என்றால் கல்லைக் கையில் எடும். இரண்டு கால் நாய் என்றால் காற்செருப்பைக் கையில் எடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்





## சுடலைகள் நகரத்தொடங்கும் வெளி

மிச்சமாயிருந்த மரணமும்
நேர்த்தியாக நடந்து முடிந்தது

திறந்த கபாலங்கள்
வெளித் தள்ளிய குடல்கள்
சிதைக்கப்பட்ட யோனிகள்
எல்லாமே நிலைக்குத்தாக
திறந்தபடி இருக்கும் விழிகளால்
அடையாளங் காட்டுகின்றன
செந்நிறச் சால்வைகளை!

இன்னமும் காயாதிருக்கின்ற
குருதித் துளிகளின் மேலே
மிதந்துகொண்டிருக்கிறது
பூதம் உமிழ்ந்துவிட்ட வெளி.

ஒவ்வொரு மண் துகள்களும்
உடைகையில் ஊற்றெடுக்கிறது
காலாவதியான தாய்ப்பால்

எங்கும் எதிரொலித்தபடி
அலைந்து திரிகிறது
தாகம் தீராமலே இறந்துவிட்ட
சிசுவொன்றின் கேவல் ஒலி.

பிணங்களை மட்டுமே
தின்று தின்று
புழுக்களுக்கும் இலையான்களுக்கும்
நாக்கு செத்துப்போயிருந்தது
பிணம் விழ இனி நிலமில்லை.

கைவிடப்பட்ட ஒப்பாரிகளுடன்
மேலெழுகிறது காற்று

பிரபஞ்சத்தின் எல்லாச் சுடலைகளும்
நகரத் தொடங்கியிருந்தன
அந்த வெளியை நோக்கி...!

- தபின்.

## பதினோராம் நாளின் பசி

முதல் நாள் பசித்தது
இரண்டாம் நாளும் பசி
ஒவ்வொரு நாளும்
பட்டினியுடனேதான்
பதினோராம்நாளின்
பசியால்
ஒரு துண்டு பாணை
திருடிய கணம்
அவன் பிடிபட்டான்
கும்பலாக கூடிய
கைகள்
மெலிந்த அவன்
தேகத்தை
பங்குபோட்டுப்
பதம் பார்த்தன
அவன்
பதினாறாம் நாள்
பசி வந்தபோது
செத்தேபோனான்
இன்னமும் அவர்கள்
அவனது பதினோராம்
நாள் திருட்டைப்
பற்றியே பேசிக்
கொண்டிருக்கிறார்கள்.

- கோகுல்.

## முட்கம்பியில் சுற்றப்பட்ட வாழ்வு

கணங்கள் கரைந்து போகையில்
வலியேறிக்கொள்கிறது
இதயத்தில்
மனிதம் மரணத்துக்கு
மண்டியிட்ட நினைவுகளில்
தொலைகிறது வாழ்வு

உயிர்களைத் தின்று
ஏப்பமிட்டவர்களின்
வெறி இன்னமும் அடங்கவில்லை
முட்கம்பிகளால் சுற்றப்பட்ட
வாழ்வு இன்னமும்
நீள்கிறது.

மே பதினெட்டோடு
முடிந்துவிடவில்லை
முள்ளிவாய்க்கால் அவலம்
நிலமிழந்து
அகதியாய்
இன்னும் அலைகையில்
தினமும் எங்களுக்கு
முள்ளிவாய்க்கால்தான்.

- அபிமானன்.

## எங்கே புதைப்பாய்?



துண்டு துண்டாகக்
சிதைவுகளாகும் உடலை
எத்தனை தடவைகள்
புதைத்த இடத்திலேயே
புதைக்க முடியும்?

துண்டு துண்டாக
பல தடவைகள்
புதைத்த இடத்தினை
எத்தனை தடவைகள்
மறைக்க முடியும்?

துண்டு துண்டாக
ஐ.நாவின் அறிக்கை
இந்த நிலத்தில்
எங்கே கொண்டுபோய்ப்
புதைப்பாய்?

- துன்னாலைச் செல்வம்.



## விடிவு எப்போ?

குந்தியிருந்த குடில்கள் விடுத்து
குருதி பதிந்த தெருக்கள் பதிந்து
அந்திப் பகலாய் அனுதினம் விழித்து
அழுது நடந்த நாட்களோ கொடுமை

பூவும் பொட்டும் பிஞ்சும் காயும்
புழுதியில் உதிரக் கிழமும் கலங்கும்
சாவின் கொடுங் கை விலக்கத் துடிக்கும்
சார்ந்த உறவைக் காக்கத் தவிக்கும்

கணத்தில் உயிரைப் பறிக்கும் கயமை
கருத்தால் பகைமை அடங்காப் புலமை
பிணத்தின் குவியல் கதறும் மனிதம்
பித்தாய் அலைந்து பிதற்றும் பயங்கள்

விடுதலை பலவழி வேண்டிக் குலைந்து
விரக்தியில் வீழ்ந்து கலங்கித் தயங்கி
விடுதலை உரிமை இரங்கும் கரங்கள்
விரிந்தது விளைநிலம் விடிவது எப்போது?

– மாவுரையூரான்,

## என் வேதனை



உரிமை கேட்டோம்
ஊமையாகிப் போனோம்
விடுதலை கேட்டோம்
வீடிழந்து நிற்கின்றோம்
பாசமாய் வளர்த்த பிள்ளை
படுத்துறங்கிவிட்டான்
துள்ளிக் குதித்த சிட்டு
'ஷெல்" பட்டுத் செத்துக்கிடக்கிறது
பல்லாங்குழி ஆடிய முற்றம்
பல்குழல் பட்டு வாய்ப்பிழந்து கிடக்கின்றது
ஆயிரம் சிறுவர் அநாதையாய் நிற்கின்றனர்
அரவணைக்க எம்மில் எவருக்கு மனமுண்டு?

நாம் பட்ட வேதனையைச்
சொல்லுகிறான் வெள்ளைக்காரன்
வீணைக்காரர்களின் விரல் அசைவுகளில்
மூடி மறைகிறது குற்றம்
பட்ட துன்பத்தை மறக்கலாமா?
அதை மறந்துதான் இருக்கலாமா?
தந்தவனுக்குத் திருப்பிக் கொடுக்கும்
எம் தமிழினம்
விழும் சிங்களத்துக்கு அடி
வலியில் அவள் துடிக்கையில்
கைகொட்டிச் சிரிப்பேன்
அப்போதாவது ஆறுமா
என் வேதனை?

- உசிலமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 16

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | 29 | 18 | 16 | 17 |
| 30 | 11 | 12 | 10 | 24 |
| 7 | 13 | 19 | 25 | 31 |
| 14 | 28 | 26 | 27 | 8 |
| 21 | 22 | 20 | 9 | 15 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 90 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 15 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | 40 | 54 | 8 | 22 |
| 24 | 28 | 42 | 46 | 10 |
| 12 | 16 | 30 | 44 | 48 |
| 50 | 14 | 18 | 32 | 36 |
| 38 | 52 | 6 | 20 | 34 |

## அறிந்து கொள்ளுங்கள்




இந்திய விஞ்ஞானியான சி.வி.ராமன் 12 வயது வரை பாடசாலைக்குப் போகவில்லை. தந்தைக்குப் பெரும் கவலை.

ஒரு நாள் அவனை அழைத்து, ''நீ உன் மனதை வீணே அலையவிடுகிறாய். மனதை ஒருவழிப் படுத்து. நன்றாக வாழுவாய்'' என்று கூறி ஒரு பரி சோதனையைச் செய்து காட்டினார்.

சூரியனிலிருந்து வரும் ஒளிக்கற்றைகளை ஒரு பூதக் கண்ணாடியின் மூலம் ஒருவழிப்படுத்தி, அதன் மூலம் பஞ்சினைத் தீப்பற்றி எரியச் செய்தார். தந்தையின் புத்திமதியைக் கேட்ட மைந்தன் தனது புத்தியை ஒருவழிப்படுத்தினான். பிற்காலத்தில் உலகத்திலேயே ஒரு பெரிய விஞ்ஞானி ஆனார்.

க.சுப்பிரமணியம்

## செய்து பாருங்கள்





இரு சதுரக் காகிதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். படங்களில் காட்டியபடி புள்ளிக் கோடிட்ட இடங்கள் மடிப்புற ஓரங்களை இணையுங்கள். அம்புக்குறிகளை அவதானித்து மடிப்புக்களை மேற்கொள்ளுங்கள். ஒரு காகிதத்தில் பூனையின் தலையையும் மறுகாகிதத்தில் பூனையின் உடம்பையும் செய்து கொள்ளுங்கள். இரண்டையும் இணைத்து படம் 6 இல் காட்டப்பட்டுள்ள கத்தும் காகம் வடிவம் வரும்வரை முயற்சியுங்கள்.




## நீராம்பல் பூ

செல்வனும் செல்வியும் ஒருநாள் குளத்திற்குச் சென்றார்கள். குளத்தில் ஆம்பல்பூ பூத்திருந்தத. தண்ணீரின் இடையில் அது தலைதூக்கி நின்ற காட்சி அவர்கள் மனதைத் தொட்டது.



அப்போது வெயில் காலம். குளத்தின் நீர் நாளுக்கு நாள் வற்றிச் சுருங்கிக் கொண்டிருந்தது. பத்து நாட்கழித்து அவர்கள் குளத்தின் பக்கம் சென்ற போதும் அந்த நீராம்பல் தண்ணீரில் தலைதூக்கி நின்றது.

''செல்வி அதோ பார்த்தாயா! பத்து நாளைக்கு முன் தண்ணீர் உயரத்தில் நின்ற போது இந்த நீராம்பல் பூவும் உயரத்தில் நின்றது. இப்போது தண்ணீர் இறங்கிய பின் அதுவும் இறங்கிவிட்டது'' என்றான் செல்வன்.

''செல்வா அது மெல்லிய பூங்கொடி தானே! அதனால் எப்படி நிமிர்ந்து நிற்க முடியும். அதனால் தான் தண்ணீரோடு இறங்கி விட்டது' என்றாள் செல்வி.

குளத்தில் நாளுக்கு நாள் தண்ணீர் வற்றிக் கொண்டே வந்தது. செல்வனும் செல்வியும் வரும் போதெல்லாம் அந்த நீராம்பல் பூவைப் பார்க்காமல் போகமாட்டார்கள். அதுவும் தண்ணீர் இறங்க இறங்கத் தானும் இறங்கிக் கொண்டே வந்தது.

கடைசியில் குளம் மிகமிக வற்றிச் சேறும் சகதியுமாகி விட்டது. அப்போதும் அந்த ஆம்பல் பூ அந்தச் சகதிக் குழம்பின் மேல்தான் நின்றது. உயரமாக நீட்டிக் கொண்டு நிற்கவில்லை.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் மழை பெய்யாவிட்டால் குளம் வறண்டு போகும் என்று பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள். குளம் வறண்டு போனால், ஆம்பலும் கருகிப் போகும் என்று செல்வனும் செல்வியும் வருந்தினார்கள்.

அன்று ஒருநாள் இரவு மழையடித்து ஊற்றியது. அந்த மழையில் குளம் நிரம்பிவிட்டது. ஐயோ பாவம்! குளத்தில் இருந்த பூ தண்ணீருக்குள் அமுங்கி அழுகிப் போயிருக்கும் என்று குழந்தைகள் பேசிக்கொண்டார்கள். அவர்கள் மறுநாள் காலையில் குளக்கரைக்கு வந்து பார்த்த போது ஆம்பல் பூ தண்ணீருக்கு மேலே தலை நீட்டிச் சிரித்துக் கொண்டு நின்றது.

''பூ அழுகவில்லை!'' என்று மகிழ்ச்சியோடு கூவிக் குதித்தார்கள் குழந்தைகள். ❋

எஸ்.நிலாணி.

## விண்ணிலே வியக்க வைத்த U.F.O

**U.F.O** என்றால் என்ன அவைதான் விஞ்ஞானிகளையே வியப்பில் ஆழ்த்திய U.F.O என்பது Unideni Filed Flying Object இதுவரை அடையாளம் காணப்படாத பொருள் எனக் கருதப்படுகிறது. பறக்கும் தட்டுகளை ஜேர்மன் மொழியில் பிளி ஜென்டி அன்ரர் டாசன் எனவும் பிரெஞ்சில் சௌ கௌ பென் வொலனிடிஸ் எனவும் செக் கோஸ்செலவகியா எனும் இடத்தில் விடாஜி சீராலீர் என்றும் பலவாறாக அழைக்கிறார்கள். இவை வெவ்வேறு வகையான வடிவமுடையவை. இவற்றுக் கென ஒரு திட்டமான வடிவ மில்லை.



ஆனால் இதுவரை கண்டவர்களது கருத்துக்களும் புகைப்படங்களும் நவீன ராடர் கருவிகளும் அவை தட்டின் வடிவம் எனவும் சைக்கிள் மணி உருவானவையும் எனவும் நீருபிக்கின்றன.


பறக்கும் தட்டுகள் வேறு உயிர் வாழும் கிரகங்களில் இருந்து அனுப்பப்பட்டிருக்கலாம். வேறு சிலரோ வேற்று நாடுகளை வேவு பார்க்க அனுப்பப்பட்டவை எனச் சாதிக்கின்றனர். எச்.சீ.வேல்ஸ் என்பவர் பறக்கும் தட்டுக்கள் பற்றிய தனது நாவல்களில் 1995இல் ரஷ்யரும் 1978 இல் இலங்கையில் கெந்தலையில் பலரும் சீனாவில் சங்காய் நகரில் 1987 இலும் பிரான்ஸ்சில் 1962 இல் மீனவர்களும் அமெரிக்க விமான ஒட்டி ஒருவரது கண்ணில் 1942 இலும் பறக்கும் தட்டுக்கள் தென்பட்டதாக விபரித்துள்ளார்.

1959 இன் பின்பலமுறை தொற்றுநோய் ஏற்படுத்தக் கூடிய கிருமிகளை இவை தூவிச் சென்றன. அத்தோடு இவை விமானங்கள் செய்மதிகளின் கட்டுப்பாடுகள் என்பவற்றை சீர்குலைக்கவும் செய்துள்ளன. பறக்கும் தட்டுக்கள் பொய்யானவை என மறுத்த பலரையும் கலிபோர்ணியாவைச் சேர்ந்த பிறைன்ஸ் கொட் என்பவர் நம்ப வைத்துள்ளார்.

இவர் நான்கு முறை பறக்கும் தட்டுக்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். 1947 இல் அமெரிக்காவில் ஒன்பது பறக்கும் தட்டுக்கள் ஒன்றாகத் தென்பட்டு பல இடங்களிலும் அழிவு வேலைகளைச் செய்துள்ளன. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்தின் பின்னரான மனநிலைக் குழப்பம்



கேள்வி:- எனது தங்கைக்கு அவளது 24 வயதில் திருமணம் செய்து வைத்தோம். கடந்த ஆண்டில் தனது 26 ஆவது வயதில் தனது முதலாவது குழந்தையை அவள் பெற்றெடுத்தாள்.

அதுவரை சுகதேகியாக இருந்த அவள் பிரசவத்தின் பின்னர் திடீரென மனக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளாள். எல்லோரிடமும் எரிந்து விழுவதுடன் இயல்புக்கு மாறாக சில சமயங்களில் நடந்து கொள்கிறாள். பிரசவத்தின் பின்னரான அவளது இந்த நிலைக்குக் காரணமென்ன? டாக்டர்களின் வைத்தியத்திலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதாக கொள்ள முடியவில்லை. தங்களது ஆலோசனை பெற விரும்புகின்றேன்.

பதில்:- இத்தகைய நிலை ஆயிரத்தில் ஒருவருக்கு என்ற அளவில் (1 in 1000) ஏற்படுகிறது. இதனை POSTPARTUM PSYCHOSIS அல்லது PUERPERAL PSYCHOSIS என மருத்துவத்தில் அழைப்போம். அதற்கு முன்னர் மனரீதியாக சுகதேகியாக வாழ்ந்த பெண்மணிகள் குழந்தை பிறந்த பிற்பாடு மனநிலை குழம்பிப் போய்விடுவார்கள். உங்கள் தங்கைக்கும் இவ்வாறுதான் ஏற்பட்டுள்ளது. பொதுவாக முதற் குழந்தைப் பேற்றிற்கு பின்பே இத்தகைய பிரச்சினைகள் தோன்றுகின்றன. MARCE (1962) எனும் மருத்துவவியலாளர் POTPARTUM PSYCHOSIS ற்கும் மாதவிலக்கின்போது சில பெண்களில் காணப்படும் MENSTRUAL PSYCHOSIS ற்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கண்டறிந்துள்ளார். மேலும் இந் நோய்க்கும் பரம்ப ரைக்கும் இடையில் தொடர்பிருப்பது அல்லது நோய்க்கும் நிறமூர்த்தத்திற்கும் இடையில் தொடர்பிருப்பதும் அறியப்பட்டுள்ளது.

MENSTRUAL PSYCHOSIS என்பது சில பெண்களில் ஏற்படுகிறது. அவர்கள் மாதவிலக்கு நேரங்களில் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவார்கள். இது சில வேளை குடும்பத்தவர்களால் மறைக்கப்பட்டு விடுகிறது அல்லது பெரிது படுத்தாமல் விட்டுவிடுகிறார்கள்.

இப்படியானவர்கள் முதற் பிரசவத்தின் பின் மிகக் கவனமாக பராமரிக்கப்படவேண்டியர்கள் ஆவர். POSTPARTUM PSYCHOSIS ன் ஒரு வகையான PUERPERAL MANIA குறித்து 1797 இலேயே ஜேர்மன் மகப்பேற்று நிபுணர் OSIANDER விளக்கியுள்ளார்.

பிரசவத்தின் பின் சடுதியாக நோய்க்குரிய குணங்குறிகள் தோன்ற ஆரம்பிக்கும் . தோன்றும் நோய்க்குறிகளும் விரைவாகவே உச்சத்தை அடைந்து விடும். MANIC அல்லது ACUTE POLYMORPHIC FORM பொதுவாக பிரசவித்த 14 நாட்களுக்குள் தோன்றலாம். ஆனால் DEPRE SSIVE PSYCHOSIS சிறிது தாமதமாகத் தோன் றலாம்.

சில நோயாளிகள் MANIA வுக்குரிய குணங்குறிகளைக் காட்டுவார்கள். நித்திரைக்குறைவு எதிலும் அதீத சிரத்தை கூடிய செயற்பாடுகள், ஒரு விடயத்திலிருந்து இன்னொரு விடயத்திற்கு அடிக்கடி தாவுதல், எரிச்சலடைதல் சிலவேளைகளில் வன்முறை என்பன இவர்களிடம் காணப்படும். POSTPARTUM PSYCHOSIS ன் போது சாதாரண MANIA நோயாளர்களை விட இவர்களில் குணங்குறிகள் ஆழமாகவும் அதிகமாகவும் காணப்படும். DELUSIONS ஏற்படும் போது பொதுவாகவே அது சமயம் சார்ந்ததாகக் காணப்படும். இந்நிலை சிலவேளைகளில் குடும்பத்தவர்களால் தெய்வீகத் தன்மையாக கருதப்பட்டு நோய் பற்றிய சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு விடும். சிலரில் அளவுக்கதிகமான மன உடைவும் விரக்தியான சிந்தனையும் காணப்படும்.

இவர்கள் முன்னையவர்களுக்கு எதிர்மாறானவர்களாக, எதுவும் பேசாது முடங்கி இருப்பார்கள். இல்லாத ஒரு புலன்தூண்டல் இருப்பதாகக் கூறுவார்கள். தற்கொலைக்கான எண்ணம் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படும். ஆயினும் கூடிய கவனம் தேவை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.
>
> **இலவச மருத்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
> 361,கஸ்தூரியார் வீதி,
> யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி,
> 85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
> கொழும்பு-14.

முன்னைய காலங்களில் இந்நோய் வந்தால் மாறாத ஒரு நிலை இருந்ததென்னமோ உண்மை தான். ஆனால் மருத்துவம் வளர்ச்சியடைந்த தற்காலத்தில் இது ஒரு பிரச்சினையே அல்ல. உரியமுறையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்தால் இலகுவில் குணமாக்கி விடலாம்.

மிகச் சிறு தொகையினருக்கு மீண்டும் நோய் ஏற்படலாம். (RELAPSE) இதை விட வேறு சிக்கல்கள் ஏது மின்றி குணமாக்கிவிட முடியும். ஆனால் குடும்பத்தினரின் சரியான புரிந்துணர்வு, ஆதரவு என்பன மிகமிக முக்கியமானது.

வைத்தியர்களிடம் காட்டி சரியான பலன் கிடைக்கவில்லை என நீங்கள் குறிப்பிட்டதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முதலில் இது ஒரு நோய். அது எனது தங்கைக்கும் ஏற்பட்டுள்ளது என்பதை தீர்மானித்துக் கொண்டு மனநல மருத்துவர் ஒருவரின் ஆலோசனையை காலந்தாழ்த்தாமல் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் தங்கை குணமடைந்து சமுதாயத்தில் ஒரு சாதாரண பெண்ணாக தனது மகிழ்ச்சியான வாழ்வைத் தொடர வழிபிறக்கும். ✱

## அறிந்து கொள்ளுங்கள்....

சிவப்பு ஒயினும், அடர் நிறத்தில் உள்ள சொக்லேட்டும் மூளைக்கு நல்லது. இரண்டையும் சேர்த்துச் சாப்பிடுவது மிக நல்லது என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சொக்லேட்டிலும், சிவப்பு ஒயினிலும் தாவர ரசாயனப் பொருளான பாலி பீனால் மிக அபரீதமாக உள்ளது. இந்த பாலி பீனால் ரத்தக் குழாய்களை நன்கு விரிவடையச் செய்கின் றது.

இதன் மூலம் மூளைக்குச் செல்லும் ரத்தம் விரைவு படுத்தப்படுகிறது. இதனால் மூளைக்கு கிடைக்கும் ஒக்ஸிஜன் சிறப்பாக உள்ளது.



சிவப்பு ஒயினையும் அடர் நிற சொக்லேட்டையும் தனித் தனியாக சாப்பிடுவதன் மூலம் கிடைக்கும் திறனைக் காட்டிலும் இரண்டையும் சேர்த்து சாப்பிடுவதால் மூளை மிக சிறப்பாக செயல்படுகிறது என ஆய்வாளர்கள் கூறுகி றார்கள்.

மூளையில் பாலி பீனால் ரசாயனம் ஏற்படுத்தும் மாற்றம் குறித்து நார்த்தம் பிரியா பல்கலைகழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது மேற்கண்ட உண்மைகள் தெரியவந்தன.

கிளாக்சோவில் உளவியல் சமூக ஆண்டு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் போது அடர் சொக்லேட் மற்றும் சிவப்பு ஒயினை சாப்பிட்டவர்களை ஸ்கேன் செய்த போது அவர்களுக்கு ரத்த ஓட்ட வேகம் அதிகரித்து இருப்பது தெரியவந்தது. வயதான காலத்தில் மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் குறையும். ஆனால் இந்த ஆய்வில் ரத்த ஓட்டம் அதிகரித்து இருப்பது தெரிகிறது என ஆய்வாளர் எம்மா வைட்மென் கூறினார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் துரத்தும் வாழ்வு



**2011.03.22** மாலை நேரம். முல்லைத்தீவின் கள்ளப்பாட்டுக் கிராமத்தைத் திடீரெனத் தொற்றிக் கொள்கிறது பரபரப்பு. ஒரு இளைஞனின் மரணம் பற்றிய சம்பாஷணைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது சனக்கூட்டம் .

'தடுப்பில இருந்த நடேசன் செத்துப்போனானாம்'

சில வருடங்களுக்கு முன்னர் சின்னப்பெடியனாக ஓடித்திரிந்த நடேசன் இறந்து போய்விட்டான். அதுவும் முன்னாள் போராளிகளை அடைத்து வைத்திருக்கும் முகாமில் அவனது மரணம் நடந்திருந்தது.

கந்தசாமி-சரஸ்வதி இவர்கள் தான் நடேசனைப் பெற்றெடுத்தவர்கள்.அவனுக்கு- நடேசலிங்கத்துக்கு- ஒரு தங்கை மட்டும்தான்.பெயர் ரேகா.முல்லைத்தீவின் கள்ளப்பாட்டுக் கரையோரக் கிராமத்தில் எளிமையான ஒரு வீட்டில் வாழ்ந்த அழகிய குடும்பம் அது. நேசங்களால் பிணைக்கப்பட்ட பல மனிதர்களின் வாழ்வை நம்தேசத்தில் யுத்தமும் இயற்கையும் போட்டி போட்டுக் கொண்டு பிரித்திருக்கின்றன.

2004 மார்கழி 26 . அழுகைகளைத் தந்துவிட்டுப் போன ஆழிப்பேரலை ஆவேசத்துடன் நடேசனின் வீட்டை விழுங்கியது. நடேசனின் கண்முன்னாலேயே அவனின் தாயையும், கூடித் திரிந்த தங்கையையும் உயிரற்ற உடலங்களாகத் துப்பியது பேரலை. அந்தக் கோரத்தை அவனால் தாங்கவே முடியவில்லை. மூளையின் செயற்பாட்டில் ஒரு மாற்றம். இழப்பின் அதிர்வலைகள் மூளையை நடுங்கப் பண்ணியதன் விளைவாக , அன்றுமுதல் வலிப்பு நோய் அவனுடன் ஒட்டிக் கொண்டது. அதன் பிறகு அவனுக்கு அடிக்கடி வலிப்பு வரத்தொடங்கியது. முகம் அஷ்டகோண லாகி, வாயெல்லாம் நுரை கக்கி அவன் படும் பாட் டைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கும். தனக்கான வர்களுக்கான பிரிவின் நினைவுகள் எழும் போதெல் லாம் வலிப்பு நோய் அதிகமாக அவனைத் தாக்கும்

2008ல் யுத்தம் உச்சமடைந்தது . குண்டுகளின் சத்தங்கள் மனிதர்களை மட்டுமல்ல விலங்குகளை யும் திகில் கொள்ள வைத்திருந்தன. மனிதர்களைப் போலவே அவையும் இடம்பெயர்ந்து அலைந்தன. 2008 ஆடி மாதத்தின் ஒருநாளில் காட்டுக்குள் இருந்து ஊருக்குள் நுழைந்தது ஒரு யானை. தன்னந்தனியனாக அது முல்லைத்தீவின் கடற்கரை வழியே நள்ளிரவில் திரிந்தது. அப்போது கடலில் தொழிலுக்கு செல்வதற்காய் வீட்டிலிருந்து வெளியில் வந்த நடேசனின் தந்தை தங்களின் வீட்டைக்கடந்து அந்த யானை செல்வதைக் கண்டுவிட்டார். அதிர்ச்சியில் சில நிமிடங்கள் உறைந்து போன அவர் யானையைத் தான் கண்டதாக சக தொழிலாளியிடம் கூறினார். ஆனாலும் சக தொழிலாளி அதனை நம்பவில்லை. தான் சொன்னதை நிரூபிப்பதற்காக யானை சென்ற பாதைவழியே தன் சக தொழிலாளியை அழைத்துக்கொண்டு சென்றார் அவர். எங்கும் போர்த்தியிருந்த இருள் யானையை மறைத்தது. கிட்டச் சென்ற பின்னரே தாம் யானையின் அருகில் வந்துவிட்டதை அவர்கள் உணர்ந்தனர். அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது. யானையின் பார்வை கோபத்தோடு இவர்கள் பக்கம் திரும்பியது. நடேசனின் தந்தையும் அவரின் நண்பரும் ஓட எத்தனிக்கையில் ஓங்கியுயர்ந்தது யானையின் துதிக்கை. ஒரே அடி.

**கீ.பீ.நிதுன்**
**முல்லைத்தீவு**

இரத்த வெள்ளத்தில் நடேசனின் தந்தை பிணமாகிக் கிடந்தார்.அவனுக்கு எஞ்சியிருந்த ஒரேயொரு உறவையும் அன்றோடு நடேசன் இழந்து போனான். அதுமுதல் பெரியப்பா வீடுதான் அவனுக்கு அடைக் கலமானது.

வன்னியில் யுத்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது 2009 பங்குனி மாதத்தில் மீண்டும் இன்னொரு வாழ்வு அவனுக்குள் திணிக்கப்பட்டது. அவசரமான பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒரு திடீர் போராளியாக்கப்பட்டிருந்தான். கொத்துக்குண்டுகளும், துப்பாக்கி ரவைகளும் மனிதர்களைத் தின்று முடிக்கத் தொடங்கின. யுத்தம் நடேசனுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. ஓரிரு நாட்களில் மீண்டும் தன் பெரியப்பாவின் வீட்டிற்கு வந்தான்.

யுத்தம் முடிந்து போன கணங்களில் முன்னாள் போராளி எனும் முத்திரை குத்தப்பட்டு, வெலிக்கந்தையிலுள்ள திருகோணமடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தான் நடேசன். தனிமையும், தடுப்பும், உறவுகளின் இழப்பும் நினைவில் வந்து அவனைப் பய முறுத்தின. அந்த உணர்வுகள் அவனுக்கு உரித்தான வலிப்பு நோயை உச்ச அளவுக்குக் கொண்டு சென்றது. நாளாந்தம் மருந்துகளை உண்ணும் மனிதனாக்கப்பட்டான்.

**22.03.2011.**

தடுப்புமுகாமில் இருந்த நடேசனுக்கு வழமையை விடவும் வலிப்பு நோய் அதிகமாகியது.வலியின் ஆவேசத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் தன்னிடமிருந்த கொப்பிகள், புத்தகங்கள் என்பனவற்றை கிழித்து எறிந்தான். கொஞ்ச நேரத்தில் வலிப்பு நோய் தன் தீவிரத்தில் இருந்து பின்வாங்கிக் கொண்டது. அதன் பின் தடுப்பிலுள்ள தன் நண்பர்களுடன் சேர்ந்து உணவருந்தி விட்டு கண்மூடித் தூங்கிய நடேசன் விடிந்த பின்னும் கண் திறக்கவேயில்லை. புனர்வாழ்வு பெறச் சென்றவன் பூதவுடலாகிப் போனான். இனி அவன் குடும்பத்தில் மரணம் துரத்த எந்தவொரு ஜீவனும் மிச்சமில்லை. ✱

# உழைப்பைக் கசக்கிப் பிழிகிறார்கள்

**நெ**ல்லிக்காய் மூடைபோன்றுள்ள மலையக தொழிற் சங்கங்களின் பலவீனத்தை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிகின்றனர் தோட்ட முதலாளிகள்.

மலையகத் தோட்டங்களில் மிகக் குறைவான சம்பளம் வழங்கப்படுவதால் பலரும் வேறு வேலைகளை நாடிச் செல்கின்றனர். இதனால் கம்பனித் தோட்டங்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் இல்லாததினால் தோட்டங்களைப் பகுதி பகுதியாக மூடிவரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை சப்பிரமுவ மாகாணத்தில் குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

### வழங்கும் வசதிகளில் பாகுபாடு

இவற்றுள் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பது அப்புஸ்கத்தனை பிளான்டேசன் கம்பனி தோட்டங்களே. தேயிலைத் கொழுந்தை மட்டும் பறிக்கும் தோட்ட நிர்வாகம் தேயிலைச் செடிகளுக்குத் தேவையான உரத்தை வழங்குவது இல்லை. தேயிலைச் செடிகளுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாத அளவுக்கு பராமரிப்பின்றி அவை காடு போலாகியுள்ளன. இதனால் அவை மூடப்படும் நிலை உருவாகியுள்ளது.

இப்படிக் கம்பனித் தோட்டங்கள் பகுதி பகுதியாக மூடப்படும் அதேவேளை தனியார் தோட்டங்களும், தொழிற்சாலைகளும் புதிது புதிதாகத் திறக்கப்படுகின்றன.

தனியார் தோட்ட வாகனங்கள், தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கே வந்து தொழிலாளர்களை அழைத்துக் செல்கின்றன. அதே போன்று வேலை முடித்த பின் வீட்டிற்கே கொண்டு வந்து விடுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக காலை தேநீர், பகல் உணவு, மாலை தேநீர், இரவுச் சாப்பாடு என்பனவும் வழங்கப்படுகின்றன.

நிரந்தரமாக அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் குடும்பத்தில் இறப்பு அல்லது திருமணம் போன்ற காரியங்கள் இடம்பெற்றால், சக தொழிலாளர்கள் இருவர் பிணை நின்று கையெழுத்திட்டால், ஒரு லட்ச ரூபா வரை வட்டி இல்லாக்கடன் வழங்குகின்றன.

### வருமானத்தைச் சூறையாடும் தோட்டக் கம்பனிகள்

கம்பனித் தோட்டங்களில் தோட்டத்துரைமார் மற்றும் சின்னதுரைமார், தோட்ட உத்தியோகத்தர்கள், ஆளணி முகாமையாளர்கள் என ஒரு பெரும் கூட்டத்தினருக்கு சம்பளம்,பங்களா,கார், வேலையாட்கள், மின்சாரம், தொலைபேசி வசதிகள் அத்தனையும் இலவசமாகவே கிடைக்கின்றன. இதற்காக மாதாந்தம் பல கோடி ரூபாய்கள் செலவிடப் படுகின்றன. தோட்டங்களில் கிடைக்கும் வருமா னத்தில் பெரும்பகுதி நிர்வாகச் செலவாகக் காட்டப்படுகின்றது. தோட்டங்களில் வேலை நடந்தாலும் நடக்காவிட்டாலும் இவர்களுக்கான கொடுப்பனவுகள் கிடைத்தே தீரும்.

மலைகளில் வேலை பார்க்கும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அதாவது கணக்கப்பிள்ளை, சுப்பவைசர் என்று கூறப்படுபவர்கள், மலைகளில் வேலை செய்யும் கங்காணிமார்களைக் கைக்குள் வைத்துக் கொண்டு கள்ளமாகப் பேர் பதிந்து மாதக் கடைசியில் வசூல் செய்து கொள்கின்றனர்.

அதேபோன்று தொழிற் சாலைகளில் டீமேக்கர்கள் எனக் கூறப்படும் தொழிற்சாலை அதிகாரி களும் தத்தமது வசதிக்கேற்ப சில கைக் கூலிகளை வைத்து தேயிலை கடத்துகின்றனர்.

**இரா.புத்திரசிகாமணி**

தோட்டங்களில் நட்டம் ஏற்படுவதாகக் கூறி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியாது என்று அடம்பிடிக்கின்றனர் கம்பனி முதலாளிமார்.

### தொழிற்சங்கங்கள் மத்தியில் பிளவு ஏற்படுத்தும் உத்தி.

மலையகத் தொழிற் சங்கங்களை இரண்டாகப் பிரித்து வைத்து வேடிக்கை காட்டுகின்றனர் கம்பனி முதலாளிமார்.

சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும் சங்கங்கள், கையெழுத்துப் போடாத சங்கங்கள் என தொழிற் சங்கங்களை இரண்டாக வகைப்படுத்தி உள்ளனர்.முதலாளிமாருக்கு ஆதரவான கோஷ்டி என்றும், தொழிலாளர்களுக்கு ஆதரவான கோஷ்டி என்றும் இவை அமைகின்றன.

தொழிலாளர்களுக்கு ஆதரவான குழுவினர் சம்பள உயர்வு தொடர்பான கூட்டுப் பேரம் பேசப்படுவதற்கு முன் எல்லாத் தொழிற் சங்கங்களையும் கூட்டி உருப்படியான ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொண்டு முதலாளிமார் சம்மேளனத்துடன் பேசுங்கள் என காட்டுக் கத்தல் கத்துகின்றனர்

ஆனால் கம்பனிக்காரர்களுக்கு ஆதரவாக ஒப்பந்தத்தில் ஒப்பம் போடுபவர்கள் இதனை அலட்சியம் செய்கின்றனர். இதனால் ஏனைய தொழிற் சங்கங்கள் ஒன்றாகக் கூடி 500 ரூபா அடிப்படைச் சம்பளம் உட்பட பல கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திடம் கையளித்துள்ளனர்.

மூன்று கட்டங்களாகப் பேச்சுகள் இடம்பெற்றுள்ள நிலையில் பேச்சுவார்த்தைக்கு வந்த முதலாளிமார் சங்கப் பிரதிநிதிகள் தமது சம்பளத் திட்டத்தை கொண்டு வரத்தவறி விட்டனர். அதனால் தான் பேச்சுகள் பின்போடப்பட்டன என்று கூறுகின்றனர்.

உண்மை என்னவென்றால் மலையகத் தொழிற்சங்கங்கள் இப்படி இரண்டுபட்டிருப்பதால் சங்கங்களின் பலவீனத்தை நாடி பிடித்துப் பார்க்கின்றனர் முதலாளிமார். இதனால் பேச்சுக்களை இழுத்தடிக்கின்றனர். கட்டியெழுப்பும் களத்தடுப்பு தொடரும் வரை இவர்களை நம்புகின்ற தொழிலாளர்கள் பாடு அதோ கதிதான். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிந்து கிடக்கும் நாக்குகள்



**1990** களுக்குப்பின் ஈழவிடுதலைப் போராட்ட முயற்சிகளுக்கு துணை நின்றதில் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு இருந்த இடம் தனித்தன்மையானது. குறித்த வருடங்களோடு தமிழீழ விடுதலைப்புலிகளைத் தலைமையாகக் கொண்டு கூர்மை பெற்று வளர்ந்த தமிழர் விடுதலை ஆயுதப் போராட்டத்துக்குப் பெருமள விலான உதவிகளை அள்ளி வழங்கியதில் புலம்பெயர்ந்த வர்களின் பங்கு பெரும்பான் மையானது. இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது ஒவ்வொரு மாவீரர்தின உரையிலும் நன்றிநவிலலாகத் தெரிவித்தே வந்துள்ளார். 2008 ஆம் ஆண்டில் அவர் இறுதியாக நிகழ்த்திய உரையிலும் கூட ஈழவிடுதலைப் போராட்டத்தின் வெற்றியை தீர்மானிப்பதில் முதல்நிலைச் சக்தியாகப் புலம் பெயர் சமூகம் இருந்து வருவதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

தமிழ் மக்களது ஆயுத ரீதியிலான போராட்ட முனைப்புக்களுக்கு ஆளணிகளை ஈழத்தின் பலபகுதிகளில் இருந்து திரட்ட முடிந்த போதிலும் ஆயுத, பண, இராஜதந்திர பலத்தையும், ஆதரவையும் அளித்தவர்கள் ஈழத்தைக் கடந்து விடுதலையுணர்வோடு வாழ்ந்தவர்கள் தான்.

அவர்களது ஆதரவும், பலமும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவோடு, சுயாதீனமான விடுதலைச் செயற்பாடுகளாக அமையாமல் நெம்புகோல் களின் விசையுடன் பொங்கியெழுந்தவை களாகவே மாறிவிட்டன. இந்த விசையூட்டத்தை செலுத்தியதில் புலிகள் கொண்டிருந்த அதீத நம்பிக்கையான ''ஆயுதத்தைக் கொண்டு எதனையும் சாதித்து விடலாம்'' என்ற போக்கு பிரதான காரணம். பாலசிங்கம் என்ற இராஜ தந்திர வெற்றி ஒளி மங்கத் தொடங்கியதும் புலிகளுக்கு எழுந்த புலம் பெயர் அரசியல் சிக்கலை உடனடியாகத் தீர்க்கத் தேவைப்பட்டவர்கள் தான் கே.பத்மநாதனும், நெடியோனும் உள்ளிட்ட பல குழுவினர். புலிகளின் புலனாய்வு வலு என்ன தான் இறுக்கமானதாக இருந்த போதிலும் இந்தப் பினாமிகளின் உள்நோக்கங்களை எந்தப் புலனாய்வுப் போராளி யினாலும் இலகுவாக வேவு பார்க்கமுடியவில்லை.

> **எந்தத் தெரிவையும் சந்தேகத்தோடு தொடும் பிரபாகரனால் கூட புதிதாக தெரிவு செய்யப்பட்ட புலிகளின் புலம்பெயர் நெறிப்படுத்துனர்களை அவ்வளவு இலகுவாகக் கணிப்பிட முடியவில்லை.**

எந்தத் தெரிவையும் சந்தேகத்தோடு தொடும் பிரபாகரனால் கூட புதிதாகத் தெரிவு செய்யப் பட்ட புலிகளின் புலம்பெயர் நெறிப்படுத்துனர் களை இலகுவாகக் கணிப்பிட முடியவில்லை.

அன்ரன் பாலசிங்கத்தை தமது நம்பிக்கை நட்சத்திரமாகப் புலிகள் வைத்திருந்த காலத்தில் புறமொதுக்கப்பட்ட புதிய தலைவர்கள் அக் காலத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். எந்த வகையிலாவது ஈழப்போராட்டத்தை விற்றுக் காசாக்குமளவுக்கு பெரிய வர்த்தகர்களாக மாறியிருந்தனர்.

2005க்குப் பின் இந்தப் பெரும் பணமுதலாளிகளிடம் சிக்கிய புலம்பெயர் சமூக விடுதலை அரசியல் அவர்களுக்குப் பணம் கறக் கும் பால் மாடாகியது. ஆயுத, பண ஆசை யும், தேவையும் புலிகளின் கண்ணை மூடிவிட்டது.

இச்சந்தர்ப்பத்தை இலங்கைப் படையின் புலனாய்வுத்துறையினரும், இந்தியாவும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. வலை யில் சிக்கினர் புதிய புலம்பெயர் தலைவர்கள்

ஈழக்களத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டு வந்த தொடர்ச்சியான தோல்விகளும், பின்வாங்கல்களும், இயக்கத்தின் உட்கட்டமைப்பில் நிலவிய அதிகாரப் போட்டிகளும் தமக்கெதிரான எந்தச் சதியையும் முறியடிக்க முடியாத நிலைக்கு அவர்களைத் தள்ளியது. விடுதலையை நிமிர்த்தும் முதுகெலும்பாகினர் வெளிநாட்டுத் தலைவர்கள்.

புலம்பெயர் சமூக உழைப்பை விடுதலைப் பிச்சை காட்டிப் பிடுங்கிய கே.பியினரின் ஆயுதக் கொள்வனவு புலிகளுக்கு அத்தியாவசியமானது. ஆனால் எத்தியோப்பியாவில் இருந்தும் ஆர்ஜென்ரீனாவில் இருந்தும் நிரப்பி அனுப்பப்படும் ''டம்மி ஆயுதக் கப்பல்கள்'' இந்து மா சமுத்திரத்தில் இலங்கைக் கடத்தல் படையால் தகர்க்கப்பட்டு விடும். தொடர்ச்சியாகப் புலிகளின் 9க்கு மேற்பட்ட கப்பல்கள் கடலில் சமாதியான போதும் அவர் மீது புலிகள் துளி அளவும் சந்தேகிக்கவில்லை. சி.ஐ.ஏயையும், றோவையும் சந்தேகித்தனரே தவிர கப்பலில் ஆயுதக் கூடுகளை ஏற்றிவிட்டு, உடனடியாகப் புலிகளின் எதிரிக்குத் தகவலளிக்கும் கே.பி என்ற சிறிலங்காவின் புலனாய்வுக் கைகூலியைச் சந்தேகிக்கவில்லை.

இந்த வகையான வெளிநாட்டுப் புலிகளின் சதிவலைகளை அறிந்திராத புலம்பெயர் சமூகம் அவர்களை விடுதலைத் தேவதூதர்களாக நம்பியது. பொங்கு தமிழ், ஊர்வலம், அடையாள உண்ணாவிரதம், கடையடைப்பு, தீக்குளிப்பு எனப் பல விதமாக புலம்பெயர் மக்களின் நம்பிக்கையும், உணர்வும் வெளிப்பட்டது. அந்தவகையான ஜனநாயக வழிப்போராட்டங்கள் உண்மையானவையாக இருந்தபோதிலும் வழிநடத்தலாளர்களின் ஈனத்தனமும், துரோகமும் எல்லாவற்றையும் பொய்யாக்கிப் போனது.

அனைத்துச் சக்திகளினதும் கூட்டுவேலைத் திட்டத்தில் முடிவெய்திய முள்ளிவாய்க்கால் கோரத் தோடு துரோகங்கள் மீதான வெளிச்சம் பரவத் தொடங்கியது. வெளிவந்த உண்மைகள் ''விடு தலையே வேண்டாம்'' எனப் பதிவு செய்யுமளவிற்கு புலம்பெயர் உணர்வாளர்களைப் பாதித்தது.

ஈழத்தில் ஆயுதரீதியான போராட்டம் தோற்று புலம் பெயர் சமூகங்களின் கைக்கு மாற வேண்டிய தருணத்தில் இந்த அவலம் நிகழ்ந்தது. ஜெனிவா வீதியில் ஓங்கிய குரல்கள் ஒளிந்து கொண்டன. மயூரன்களின் விடுதலைப் பயணப் பாதைகள் இடையிலேயே முறிந்துவிட்டன. பிரபாகரன் தமிழ் மக்களிடம் கடைசியாய் விட்டுப்போன வெளிநாட்டு அரசியல் என்ற நம்பிக்கையும் பிரகாசம் இழக்கத் தொடங்கியது.

இந்த அரசியல் பேரனர்த்தத்தை விசாலப் படுத்தியதில் வெளிநாட்டுத் தலைவர்களின் உடைவு மேலும் தாக்கியது. கே.பியின் துரோகத்தனத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அணியும், அதிலிருந்து உடைந்த நெடியவன் அணியும், உருத்திரகுமாரின் நாடுகடந்த தமிழீழ அரசுக்கான அணியும் என நாளுக்கு நாள் வரும் புதிய பிரபாகரன்களின் வரவு தெளிவற்ற அல்லது தடுமாற்ற அரசியல் மாயைக்குள் புலம்பெயர் உணர்வாளர்களைத் தள்ளியிருக்கிறது. இது விடுதலை மீதான விரக்தியாகவும் வெளிப்பட்டு வருகிறது. இதனையே அண்மைய ஐ.நா.அறிக்கை வெளிவரவின் பின்னரான புலம்பெயர் சூழமைவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட துவம்சம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் புலம்பெயர் நாடுகளில் ஏற்பட்ட இலங்கையரசுக்கெதிரான கொந்தளிப்பு, இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற ஆவண வெளிவரவின் பின் ஏற்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்பட்டபோதிலும் அவை ஆக்கபூர்வமானவைகளாக, வீரியம் மிக்கவைகளாக அமையவில்லை. மாறாக தோற்றுப்போன இராஜதந்திரத்தின் இறுதி முனகல்களாகவே வெளிப்பட்டன.

காலம் காலமாக ஐ.நா.எனும் மேற்குலக அதிகாரக் கைக்கூலிகளை இலங்கை அரசாங்கம் எதையாவது விற்று தன் வசப்படுத்தியே வந்திருக்கிறது. ஆனால் இம்முறை உண்மையின் பக்கம் அது சார்ந்திருப்பதானது, நாம் செலவிட்ட வலிகளுக்கான விலையாகும். இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் இலங்கை அரசை சர்வதேசக் குற்றவாளியாக நிரூபிக்க முடியும். அதற்கு மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டம் மிக வலுவான ஓர் ஆயுதம். இதனைக் கையிலெடுக்க ஈழத்தில் வாழும் தமிழர்களால் முடியாது. ஈழத்துச் சந்தியில் நான்கு தமிழர்கள் எதேச்சயாகக் கூட்டம் கூடினாலே அதற்குள் ஒரு இராணுவப் புலனாய்வாளனோ அல்லது அரசோடு இயங்கும் ஆயுதக் குழுவினனோ உள்நுழைந்து வேவு பார்ப்பான். ஏற்கனவே நொந்து நூலாகியவர்களால் இனியொரு அவலத்தை ஒருபோதும் ஜீரணிக்க முடியாது. இந்நிலையில் ஐ.நா அறிக்கைக்கு உயிரளிக்க வேண்டிய முழுப்பொறுப்பும் புலத்தில் இருப்பவர்களிடமே சென்று சேர்கிறது. ஆனால் புலிகள் வெளிச்சத்தில் இருந்த காலத்தில் நியமித்த வெளிநாட்டுத் தலைவர்களின் ஆதிக்கம் இன்னமும் நிலவுவதால் அதனை அவ்வளவு இலகுவாக முன்னெடுக்க முடியாது. இதையெல்லாம் தகத்தெறிந்து உண்மை யான விடுதலையுணர்வோடு போராடக் கூடிய, எந்த பின்பற்றல்களையும் தழுவாத புதிய இளைய அணியொன்று புலம்பெயர் தளத்தில் உருவாதல் வேண்டும். அதற்கான சமிக்ஞைகள் ஐரோப்பிய தமிழ் அரசியல் புலத்தில் ஏற்பட்டு வருகிறது. இதன் வெளிப்பாடே கனேடிய பாராளுமன்றத்தில் முதன் முதலாக பங்கேற்கும் ராதிகா சிற்சபேசன் வரவு. அவர் மட்டுப்படுத்த அரசியல் வெளிக்குள் இயங்காமல் கடல்கடந்து ஈழத்தமிழர்களுக்காகவும் குரலெழுப்புவாரானால் ஒளிந்து கிடக்கும் நாக்குகள் வெளிப்படும் நிலை ஏற்படலாம்.✱

தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழுவேற்றப்பட்ட வாழ்வு

பிரமன்

**கா**லம் எவ்வளவு வேகமாகப் பறந்தோடி விடுகிறது. முள்ளிவாய்க்காலில் கடற்கரைவெளியில் மூச்சுவிடக்கூட இடமில்லாத நிலத்தில் அடைபட்டிருந்த லட்சக்கணக்கான தமிழ்மக்களின் வாழ்வு கழுவேற்றப்பட்ட கடைசிக் கணங்கள் நிகழ்ந்தது நேற்றுப் போலிருக்கிறது. இன்னமும் அந்த இரத்த வெக்கை ஆறவில்லை. அதற்குள் இரண்டு வருடங்களாகிவிட்டது.

கந்தகப்புகை எங்கும் படர்ந்திருந்த இருளின் காலத்தில் ஒவ்வொருவரும் தத்தம் உயிர்களைக் காவிக்கொண்டு தப்பிவிடுவதிலேயே குறியாக இருந்தனர். ஓடிவருகையில் காலில் இடறும் பிணக்குவியல்களையும், தம்மையும் காப்பாற்றும்படி கதறுகின்ற காயம்பட்ட குரல்களையும், நிர்வாணமாக்கப்பட்டு கட்டப்பட்ட கண்களோடு ஆயுதமுனையில் இழுத்துச்செல்லப்படுகின்றவர்களின் மரணம் தோய்ந்த முகங்களையும், கைபேசிகளில் பதிவு செய்தபடி பிணங்களைப் பார்த்து எழுகின்ற எக்காளத் தொனிகளையும் கவனிக்க எவருக்கும் அவகாசமிருக்கவில்லை. எல்லோருக்கும் அந்தக் கொலைக்களத்திலிருந்து எப்படியாவது வெளியேறிவிடுவது மாத்திரமே ஒரேயொரு குறியாக இருந்தது.அந்தளவுக்கு சாவின் கடைசிமுனையில் அவர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தனர். அந்த வெளி-முள்ளிவாய்க்கால்-அவர்களுக்கு நரகத்தின் இன்னொரு பிரதி போலவே இருந்தது. பலருக்கு முள்ளிவாய்க்காலை விடவும் நரகம் எவ்வளவோ மேலானதாக மாறியிருந்தது

ஆறாக ஓடிக்கொண்டிருந்த குருதிவெள்ளத்தையும் தாண்டியபடி குழந்தை குட்டிகளோடு அந்த நரக வெளியை அவர்கள் தாண்டிவந்தார்கள். கையில் ஐந்து சதம் கூட இல்லை. வேலைஇல்லை.உடுக்கத் துணி இல்லை. 'அப்பாடா' என்று சாய்ந்து கொள்வதற்கு இடிந்துபோன வீடு கூட இல்லை. நிலமில்லை. தேடி வைத்திருந்த சொத்துக்களும் இல்லை. பசித்த வயிற் றோடும், வலிகளைச் சுமக்கின்ற கனத்த இதயத் தோடும்,'இல்லை' என்ற சொல்லை மாத்திரம் அவர்கள் தம்மோடு எடுத்து வந்திருந்தார்கள். கைகளில் பட்டிருந்த இரத்தக் கறைகளை அவசரமாகக் கழுவிய படியே, செயற்கைப் புன்னகையோடு சீருடைகள் அந்த மக்களை தம் முட்கம்பி வேலிக்குள் கொண்டு வந்தன. சீருடைகளின்'கண்ணைக் குத்தும் தோற்றம் கொண்ட ஆண்களும், ஆயுதம் ஏந்திப் போராடியவர்களும் பிரித்தெடுக்கப்பட்டார்கள். கண்காணாச் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டார்கள். (அவர்களில் சிலரது உடலங்கள் யுத்தத்தின் போது கொல்லப்பட்ட பின் வந்த நாட்களில் அரச ஊடகங்களில் காட்சிப் படுத்தப்பட்டன)

எஞ்சியவர்களுக்கு நீண்ட நாள்களுக்குப்பிறகு நல்ல சாப்பாடும் தண்ணீரும் கிடைத்தது. கூடவே அவர்கள் இன்னொரு கூண்டுக்குள் அவசர அவசரமாக அடைக்கப்பட்டார்கள். நலன்புரி நிலை யங்கள் என்ற அடைமொழியைத் தாங்கியிருந்த அந்தக் கூண்டுகளுக்குள் எப்போது விடுதலை யாவோம் என்பதே தெரியாமல், காத்திருத்தல் வாழ்வுக்குள் புகுந்தார்கள். காலம் பூராகவும் அந்த முகாம்களுக்குள்ளேயே முடங்கவேண்டி வந்துவிடுமோ என்ற அச்சமும் துளிர்விடத் தொடங்கியிருந்தது.

ஏதோ நல்ல காலத்துக்கு சர்வதேசமும் அயல் நாடுகளும் அடைக்கப்பட்ட மக்களின் வாழ்வுபற்றி அக்கறை எடுத்து அங்கலாய்த்தன. அதிகாரத்தின் காதுகளை துளைத்தெடுத்த இந்த அக்கறை வார்த்தைகள் மெல்லமெல்ல கூண்டுகளின் கதவுகளைத் திறப்பதற்கு உதவின. அதற்கும் ஆயிரத்தெட்டு இழுபாடுகள்; சாட்டுகள்; நிபந்தனைகள். எல்லாவற்றுக்கும் சம்மதிப்பதாய் தலையாட்டிவிட்டு வெளியே வரத் தொடங்கினார்கள்.

வெளியே வந்தவர்களை சூனியமான வாழ்வுதான் வரவேற்றது. எதுவுமே அற்றவர்களாக தமது வாழ்வை பூச்சியப்புள்ளியிலிருந்து தொடங்கவேண்டியிருந்தது. பெரும்பாலானோரின் பொருளாதார அடித்தளங்களை யுத்தம் அழித்திருந்ததால் அவர்களெல்லாம் தமக்குப் பரிச்சயமில்லாத புதிய தொழில்களுக்குத் தங்களைப் பழக்கப்படுத்த வேண்டியிருந்தது. மீள் குடியேற்றம் என்ற பெயரில் தங்களுக்கு வழங்கப்பட்ட நாலைந்து தகரங்களை மட்டுமே வைத்துக் கொண்டு ஒரு மறைப்பு மட்டுமே போடமுடிந்தது. இதனால் அக்கம் பக்கங்களில் உள்ள காவலரண்களில் வாயில் வீநீர் வழிய சீருடைகள் பார்த்திருக்க திறந்த வெளியிலேயே பெண்கள் குளிப்பதோ அல்லது உடை மாற்றுவதோ நிகழ்ந்தது.

இதைவிட கொடுமை என்னவெனில் பெரும்பாலான பெண்களின் துணைவர்களை அல்லது அவர்களின் புதல்வர்களை யுத்தம் தனக்காக பலியெடுத்திருந்தது. தப்பிப்பிழைத்த ஆண்மக்களும் தடுப்பில். குடும்பத்தைக் கொண்டு நடத்தவேண்டிய பொறுப்பு பெண்களின் தலையில் வீழ்ந்தது. இதுவே அதிகளவான கருக்கலைப்புகளும், சிசுக் கொலைகளும் வன்னியில் நிகழுவதற்கான பாலியல் குற்றங்களுக்கு ஏதுவானது.

தடுப்பில் இருப்பவர்களும் தொடர்ந்தும் தனிமையின் வலியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில நாட்கள் இருந்த சித்திரவதை இப்போது இல்லைத்தான். ஆனாலும் அவர்களைக் குடும்பத்திலிருந்து பிரித்து, தனிமைச் சிறைக்குள் வீழ்த்தியிருக்கும் தடுப்பு வாழ்வு அவர்களை மரணம் வரை கொண்டு சென்றிருக்கிறது. அண்மைக் காலங்களில் தடுப்பு முகாம் தற்கொலைகள் அடுத்தடுத்து நடைபெற்றுள்ளன.

தடுப்பிலுள்ளவர்களை அவர்களது உறவுகள் சென்று பார்ப்பதற்கும் பல கட்டுப்பாடுகள். அதையும் தாண்டி அவர்களைப் பார்க்கச் செல்வதற்கும் கையில் காசு இல்லை. எங்காவது கடன்பட்டு, நீண்ட தொலைவு பயணப்பட்டு, தடுப்பில் இறங்கினால் அங்கும் தம் பாலியல் நாக்குகளோடுதான் சீருடைகள் அணுகுகின்றன. இதனால் தடுப்பிற்குச் செல்வதை பெரும்பாலான பெண்கள் தவிர்த்துவிடுகிறார்கள். நீண்ட நாட்களாக தமது உறவுகளைக் காணாத ஏக்கத்தில் தடுப்பில் உள்ளவர்களின் மனோநிலையும் மெல்ல மெல்ல சிதையத் தொடங்கு கின்றது. இந்தச் சிதைவுகளின் நீட்சியே அவர்களைக் கிணற்றுக்குள் விழவோ அல்லது சுருக்குக் கயிற்றில் தொங்கவோ உந்தித் தள்ளிவிடுகிறது.

மீளக்குடியமர்ந்த பெரும்பாலான தாய்மாரின் நிரந்தரத் தொழிலாக காணாமல்போன தமது பிள்ளைகளைத் தேடி அலைதலாக மாறிவிட்டது. புன்னகைத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் புகைப் படங்களோடு இன்னமும் அவர்கள் ஒவ்வொரு இராணுவ முகாமாக ஏறி இறங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

''என்ர பிள்ளை எங்கையாவது உயிரோட இருப்பான்'' என்பது மட்டும் தான் இவர்களின் நம்பிக்கை. தம் பிள்ளை எங்காவது உயிரோடு இருக்கும் செய்தி ஒன்று கிடைக்காதா? என்று தினமும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் இந்தத் தாய்மார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் போருக்கான 'ஆள் பிடிப்பிலிருந்து' தப்பித்துக் கொள்வதற்காக பல இளவயதுத் திருமணங்கள் வன்னியில் எல்லாத் திசைகளிலும் நடந்தன. ஏற்கனவே திருமணமானவர்கள் தமது மனைவியரைக் கர்ப்பிணிகள் ஆக்கினர். இவையெல்லாம் அவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் போருக்குள் வீழ்வதை விட இப்படிச் செய்தால் தப்பித்துவிடலாம் என எண்ணினர். ஆனால் பார்வைகளற்ற எறிகணைகளும், கொத்துக் குண்டுகளும், துப்பாக்கி ரவைகளும் போரில் ஈடுபடாதவர்கள் மீதும் கருணை காட்டவில்லை. எல்லோருமே பலி வாங்கப்பட்டார்கள். வன்னியில் தவழ்கின்ற பெரும்பாலான குழந்தைகளுக்கு தம் தந்தையரின் முகம் தெரியப் போவதில்லை. மாலை யிட்ட புகைப்படங்களிலுள்ள தந்தையோடுதான் அந்த மழலைகள் கொஞ்சி விளையாட முடியும்.

தமது மக்களின் விடுதலைக்காக போராடப்புறப்பட்டு பின்னர் போரின் திசை திரும்புதலால் தடுப்பிற்குப் போன 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். மிக நீண்டகாலமாக போரிலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து, புதிய தொழிற்பயிற்சிகள் கொடுத்தே விடுதலை செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனாலும் இந்த 'முன்னாள் போராளிகள்' வேண்டப்படாத ஒரு சமூகமாகவே மாறிவிட்டனர். அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க எவரும் தயாராக இல்லை. அவ்வாறு முன்னாள் போராளிகளை அரவணைத்தால் அதிகார தரப்பின் கோபத்திற்கோ அல்லது அவர்களின் கண்காணிப்பு வளையத்துக்குள்ளோ சிக்கிவிடும் அபாயம் இருப்பதாக பலரும் எண்ணுகின்றனர். அதைவிட போராட்டத்தில் ஈடுபட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் பெண் போராளிகள் பலருக்கும் திருமணம் செய்து வைக்க பெற்றோர் திண்டாடுகின்றனர்.

சந்தையில் விலை போகாப் பண்டங்களாகவே இந்தப் பெண் போராளிகளை சமூகம் மாற்றத் தொடங்கிவிட்டது.

ஏட்டிக்குப் போட்டியாக முளைத்துவரும் இணைய ஊடகங்கள் முள்ளிவாய்க்கால் படுகொலைகளை 'போர்க்குற்ற புதிய ஆதாரம்' என்ற விளம்பரப் படுத்தலோடு புகைப்படங்களூடாக அடிக்கடி ஞாபகப்படுத்துகின்றன. சாம்பர் பூத்திருந்த நெருப்பு நினைவுகளை இவை கிளறி வேடிக்கை பார்க்கின்றன. சரணடைந்தால் தப்பித்துக் கொள்ளலாம் என்ற கருதுகோளில் செயற்பட்ட பலரும் கோரமாக கொலை செய்யப்பட்ட காட்சிகள் தினமும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இந்தக் காட்சிகள் முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய பேரவலத்தின் மிகச் சிறிய துகள்கள் மாத்திரமே. இச் சிறிய துகள்களே பல நாள் தூக்கத்தை இல்லாமல் செய்யும் அளவிற்கு அதிர்வுகளை உண்டாக்கும் போது அங்கு நிகழ்ந்த கோரத்தின் மொத்த வடிவத்தை எவராலுமே விவரிக்க இயலாது.

கோரங்களோடும், எண்ணற்ற உயிர்ப் பலிகளோடும் அடைந்த வெற்றியை நீண்டகாலம் அதிகார வர்க்கத்தால் ருசிக்க முடியவில்லை. போரை முன்னின்று நடத்திய இராணுவத் தளபதி இப்போது சிறைக் கம்பிகளுக்குப் பின்னால். புலம்பெயர் தமிழர் ஆர்ப்பாட்டம், சர்வதேச அழுத்தம் என்பன ஜனாதிபதியின் நிம்மதிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டன.

போதாக்குறைக்கு உலகின் கண்முன்னே நடந்து முடிந்த படுகொலைகளுக்கு இரண்டு வருடங்கள் கழித்தே ஒரு விசாரணை அறிக்கையை ஐ.நா. நிபுணர்குழு விடுத்துள்ளது. எழுத்து ரீதியான ஆவணமாக வெளிவந்துள்ள முள்ளிவாய்க்கால் படுகொலைகள் உலகுக்கு அரசின் கோரப்பற்களை அடையாளம் காட்டியுள்ளன.

இந்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு எல்லாவற்றையுமே இழந்து போனவர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதே உலக நாடுகள் பலவற்றின் குரலாக இருக்கின்றது. அந்தக் குரலை அடக்க தன் முழுப்பலத்தையும் பிரயோகிக்கிறது அரசு.

அதையெல்லாம் தாண்டி வலிகளின் வடுக்களை ஏந்திநிற்கும் மக்களுக்கு நியாயம் கிடைக்குமா?

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டாலை போக விடுங்கோ!



இந்த வான் பஸ்ஸுகளிலை பயணம் பண்ணிறதெண்டால் பாருங்கோ பெரும் பாடாய்க் கிடக்கு. இந்த நாட்டிலை பாலம் போடுறம், பாதை போடுறமெண்டும், மாலை மரியாதையோட அதைத் துறந்து வைக்கிறமெண்டும் ஒரே விழாத்தான் கண்டியளோ. எல்லாம் இந்த ரவுணுக்குள்ள மாத்திரம்தான் பாருங்கோ இந்த எடுப்பெல்லாம். இந்தக் கிராமத்து ஊர்முழுக்க றோட் எண்டு சொல்ல ஒண்டுமில்லை. புழுதியும் கல்லும் முள்ளும் தான். சில இடத்திலை பாத்தியளெண்டா பாத்தி போடுற அளவுக்குக் குட்டையும் குளமும்தான். என்னத்தைச் சொல்ல. இந்த றோட்டுப் போடுறதைத்தான் அபிவிருத்தியெண்டும் நாங்க பாக்கிறம்தானே. அதோட முடிஞ்சாப் போதுமே? சனத்தின்ற வாற போற வசதியளையும் கொஞ்சம் கவ னிச்சா நல்லதெல்லோ. ரவுணைத் தவிர எங்கட ஊருக்கை ஓடிற பஸ், வானைக் கொஞ்சம் பார்த்தா நல்லது. ஒரு காலத்தில நிக்கிற ஆட்கள் எட்டுப் பேரெண்டும் ஆசனத்தில இருக்கிறதுக்கு நாப்பது பேரெண்டும் பஸ்ஸுக்குள்ளை ஒரு பக்கத்திலை எழுதி இருந்ததா ஞாபகம். அதொண்டையும் இப்ப காணேல்லை. ஆனா நிக்கிறவங்களும் சரி, இருக்கிறவங்களும் சரி அளவு கணக்கில்லாம ஏத்திறாங்கள். பெண் புரசுகள் எண்டும் பார்க்கிறதில்லை. கிழடு கட்டை எண்டும் பாக்கிறதில்லை. சனம் ஒண்டோட ஒண்டு முட்டிமோதி, நெருக்கியடிச்சு, தொங்கி விழுந்து கொண்டெல்லோ பயணம் பண்ணுதுகள். இதெல்லாத்தையும் விட உந்த வான் இருக்குதெல்லோ. அவங்கட வரவேற்பும் வசதி ஏற்பாடும் சனத்தை ஏத்தி, அது ஓடத்துவங்கின உடனை என்னமாதிரி மாறுது கண்டியளே? முன்னாலை போ, பின்னாலை வா, தள்ளிநில், மேலைபிடி, தள்ளிப் பிடி எண்டு ஒரே 'ட்றில்' பயிற்சிதான். இதைப் பாக்கேக்க பயணம் வேணாமெண்டெல்லோ சொல்ல வைக்குது.




இருந்தாலும் ஒரு கோயில் குளத்துக்குப் போறதெண்டா என்ன, ஒரு கலியாணம், சாமத்தியம் எண்டா என்ன பயணம் போகத்தானே வேண்டிக்கிடக்கு. இந்த றோட்டில வான் காரர் ஓடுற 'ரேஸ்' ஓட்டம் பாதையிலை நடந்து போறவைக்கும் எல்லோ வில்லங்கமாய்க்கிடக்கு. போற வாற வழியெல்லாம் ஒரே வாகனம் பாருங்கோ. நடந்துபோற சனம் எங்களைப் போல ஒரு வழியும் இல்லாத கிழடு கட்டையள்தான். ஆட்டோ என்று சொல்லுற மூண்டுசில்லு வண்டி இருக்குதெல்லோ அது நெழிஞ்சு நெலிஞ்சு ஓடுற ஓட்டம் சும்மா சொல்லப்படாது. இந்த லைசன்ஸக் கடையிலதான் வாங்கினாங்களோ தெரியேல்ல. ஏதோ ஒரு தொழில் வேணும்தான். அதுக்காக சும்மா ஆட்டோவை வாங்கிப்போட்டுக் கண்டபடி ஓடுறதோ? என்ன தொழில் செய்தாலும், அதை ஒழுங்காத் தெரிஞ்சுகொண்டு செய்யவேணும். நாலு பேர் மதிக்கிற மனுசரா வாழவேணும். இந்த மோட்டார் சைக்கிள் காரங்கள் இந்த இளம் பெடியள், பெட்டையள் ஓடுற ஓட்டத்தைப் பாக்கேக்க பயமாய் எல்லோ கிடக்கு. எங்களையும் அடிச்சுப் போட்டு, தானும் செத்துப்போறன் என்ற மாதிரியெல்லோ ஓடுதுகள். போன வருசத்திலை மூன்றுலட்சம் வாகனம் விலைப் பட்டிருக்காம். மாசம் மாசம் பத்துப்பேர் கார் அடிச்சும், பஸ் அடிச்சும், மோட்டார் சைக்கிள் விபத்திலையும் சாகிறாங் கள். அதோட காலுடைஞ்சு கையுடைஞ்சு, காயப்பட்டு ஆசுப்பத்திரியிலை கிடக்கிட சனம் அதிகம் எண்டும் சொல்லுறாங்கள்.

இந்தப் புதுப்பழக்க ஓட்டக்காரராலதான் பாருங்கோ எல்லா ஆபத்தும் வருகுது. தம்பிமாரே, கவனமா வாகனத்தை ஓட்டுங்கோ. தங்கச்சிமாரும்தான். கடையிலை லைசன்ஸ் வாங்கினமாதிரி ஓட்டாதேங்கோ. உங்களுக்கு அவசரம் இருக்குத்தான். அதுக்காக எங்களப்போல கிழடு கட்டையளையும் கவனியுங்கோ. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதெண்டு நான் சொல்ல வரேல்ல. கொஞ்சமெண்டாலும் ஞாபகப் படுத்துவம் எண்டு நினைச்சன். எதுக்கும் கவனம் பாருங்கோ.✱

**மடத்தடி மாரிமுத்தர்**

# ரகசியங்களைக் காப்பாற்றுங்கள்

காதலர்களாக இருந்தாலும் சரி, நண்பர்களாக இருந்தாலும்சரி, ஒரு சில விடயங்களைத் தவிர்ப்பது மிகவும் அவசியம். இது எதிர்மறையான சிந்தனையாக இருந்தாலும், நேர்மறையாக மட்டுமே எல்லாமும், எல்லாரும் நடப்பதில்லை என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

எந்த அத்துமீறல்களும் நடக்காமல் பார்த்துக் கொள்வதும், யாரிடமும் சொல்லக் கூடாத சில ரகசியங்களை ஒரு போதும் எவரிடமும் சொல்லாமல் இருப்பதும்தான் முதல் எச்சரிக்கையாகும்.

அதாவது காதலர்களாக இருக்கும் பட்சத்தில், திருமணம் செய்து கொள்வது என்று இருவரும் மன்பூர்வமாக ஒப்புக் கொண்டாலும், எந்தத் தவறான காரியத்திலும் ஈடுபடாமல் இருப்பது இருவரது வாழ்க்கைக்கும் நல்லது. சிலவேளை ஏதோ ஒரு காரணத்தால் திருமணம் செய்து கொள்ள இயலாமல் போகக்கூடும்

பெண்ணை - ஆண் மிரட்டுவதும், ஆண் கெட்டவன் என்று தெரிந்தாலும், தவறு செய்து விட்ட ஒரே காரணத்திற்காக அவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலையும் ஏற்படலாம். நண்பர்களாக இருப்பினும், காதலர்களாக இருப்பினும், தன்னைப் பற்றிய ஒரு ரகசியத்தை, யாரிடமும் சொல்லக் கூடாத ஒரு ரகசியத்தைத் தயவு செய்து சொல்ல வேண்டாம். உங்களுக்கு மட்டுமே தெரிந்தால் தான் அது ரகசியம். இன் னும் ஒருவருக்கு அது தெரிவிக்கப்பட்டால் அது செய்திதான். எனவே, நீங்கள் ரக்சியமாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்பும் ஒரு விடயத்தை நீங்கள் ரகசியமாகவே வைத்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமையாகிறது.✱



# அன்பைக் காட்டும் வித்தியாசமான வழிகள்

பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள், விலங்குகளுடன் ஒன்றோடு ஒன்றாய் இணைந்தே வாழ்ந்து வருகின்றனர். ஒரு சிலர் தாங்கள் வளர்க்கும் வீட்டுப் பிராணிகள் மீது அளவு கடந்த அன்பைப் பொழிவார்கள். இதில் ஒரு சில சமயங்களில் ஒரு சில மனிதர்கள் தங்கள் வளர்ப்புப் பிராணிகள் மீது கொண்ட அன்பினால், வித்தியாசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அது எல்லோரையும் கவரும் விதத்தில் அமைந்து விடுகிறது.

நாயும், பூனையும் ஒன்றுக்கொன்று விரோத போக்குக் கொண்ட விலங்குகள் என்றுதான் நாம் அறிவோம். ஆனால் ஒரு நாய் தனது குட்டிக்குச் சமமாக ஒரு பூனையையும் வளர்த்தது என்று சொன்னால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும்.

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் வசித்து வந்த ஒரு குடும்பத்தால் பில்லு என்ற நாய் வளர்க்கப்பட்டு வந்தது. அதற்கு ஒரு குட்டியும் உண்டு. ஒரு நாள் அந்த வீட்டின் அருகே பில்லுவின் முகச் சாயலைக் கொண்ட பூனைக் குட்டியைப் பார்த்த வீட்டின் எஜமானர் அதனை வீட்டிற்குக் கொண்டு வந்தார். பூனைக்கு நான்சி என்று பெயரிட்டனர்.



ஆனால், இந்த பூனையைப் பிடிக்காமல் பில்லு ஒரு வேளை பூனையைக் கொன்று விடுமோ என்று கூடப் பயந்தார்.

ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக பில்லு தனது பப்பிக்கு அடுத்தபடியாக நான்சியிடம் அதிக பிரியமாக இருந்தது.

அவ்வளவு ஏன் பில்லு, நான்சிக்கும் பால் கொடுத்தது என்பதுதான் மிகுந்த ஆச்சரியமே. நாயின் பாலை பூனை குடிப்பதால் பூனைக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமா என்பது பற்றி வீட்டின் எஜமானர் கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை செய்தார்.

ஆனால் இந்த பாசப்பிணைப்பு வெகு நாட்களுக்கு நீடிக்கவில்லை. 10 மாதத்திலேயே அந்தப் பூனை இறந்துவிட்டது. குடும்பமே சோகத்தில் மூழ்கியது. அப்போதுதான் ஒரு புதிய நாடகம் தொடங்கியது.

இறந்த பூனைக்கு மனிதர்களைப் போல இறுதிச் சடங்கு நடத்துவது என்று அந்தக் குடும்பம் முடிவு செய்தது.

இறுதிச் சடங்கு என்றால் சாதாரணமான ஒன்றல்ல. பாண்ட் வாத்தியங்கள் முழங்க பூனையின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது.✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராசி-பலன்

**15. 05. 2011 - 21 . 05. 2011**



**அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மரக்கிளைகளைத் தெரிந்த பலருக்கு அதைத் தாங்கிப் பிடிக்கும் வேரின் அருமை புரியாது. அது போலத் தான் நீங்களும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். எதிர்பார்த்த வகையில் உதவி கிடைக்கும். இழுபறியான வேலைகளெல்லாம் முழுமை டையும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவதால் மனநிம்மதி பிறக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப் புகளைச் சரி செய்வீர்கள். ஆன்மீகத்தில் மனம் லயிக் கும். பழைய பிரச்சனைகள் கல்யாண முயற்சிகள் பலி தமாகும். மறைமுக எதிர்ப்புகளை வெல்வீர்கள். தன்னம்பிக்கை யால் சாதிக்கும் வாரமிது.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

மரத்தைத் தேடி வரும் பறவைகளுக்கு மரம் கனி தருவதைப் போல, உங்களை நாடி வருபவர்களுக்கு உதவுவீர்கள். பணவரவு திருப்தி தரும். உங்கள் வார்த்தைகளை குடும்பத்தினர் மதிப் பார் கள். நீண்ட நாள் வாங்க வேண்டும் என்று நினைத் திருந்த பொருட்களை வாங்குவீர்கள். பிள்ளைகள் உங் களைப் புரிந்துக் கொள்வார்கள். சிறுசிறு விபத்துகள், இனந் தெரியாத கவலைகள் வரக் கூடும். வியாபாரத்தில் வந்தது வரட்டும் என அலட்சியமாக முதலீடு செய்ய வேண் டாம். இருப்பதை வைத்து லாபம் தேடுவது நல்லது. எதிர்ப்புகளையும் தாண்டி வெற்றி பெறும் வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திரு வா திரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மரத்தடியில் புத்தருக்கு ஞானம் கிடைத் தது என்பதை அறிந்த நீங்கள், எப்போதும் மரத்தடி நிழலிலேயே ஓய்வெடுக்க ஆசைபடுபவர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கை, கால் வலி நீங்கும். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர் கள். சகாக்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். தந்தை யின் உடல் நலம் சீராகும். சில காரியங்களைப் போராடி முடிக்க வேண்டி வரும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவதால் மனநிம்மதி பிறக்கும். வியாபாரத்தில் ஏற் பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். வேலைச்சுமையையும் தரும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

மரத்தின் நிழல் பத்துப்பேர் ஓய்வெடுக்க உதவுவதைப் போல, நீங்களும் சுற்றியி ருப்பவர்களை அரவணைத்துச் செல்வதில் வல்லவர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. கேட்ட இடத் தில் பணம் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன் யோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் மற்றத் திறமைகளை கண்டறிவீர்கள். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். கைமாற்றாகக் கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். அரசு காரியங்கள் சாதகமாக முடியும். வீட்டை விரிவுப் படுத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் தன்னிலை மாறாது சாதிக்கும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

மரத்தின் பழுத்த கிளையும், மக்களின் வாழ்க்கையும் ஒன்று தான் என்பதை அறிவு பூர்வமாக உணர்ந்தவர்கள் எதிலும் வெற்றி கிட்டும். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத் தில் உங்கள் கை ஓங்கும். அரசால் அனுகூலம் உண்டு. புதுச் சொத்து வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வரும். வீண் செலவுகள், அலைச்சல் வரும். ஆன்மீ கத்தில் மனம் லயிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் பற் றாக்குறை நீடிக்கும். அண்டை வீட்டாருடன் அளவாக இருங்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். தன் பலம் பலவீனத்தை உணரும் வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ் தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

மரங்களில் பசுந்தன்மை என்றும் மாறா ததைப் போல, உங்கள் நெஞ்சில் கொண்ட குணமும் ஒருபோதும் மாறாது. பணப்புழக் கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். பிள்ளை களால் பெருமையடைவீர்கள். குடும்பத்தில் கலகலப் பான சூழல் ஏற்படும். மகளுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உடன்பிறந்தோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மேலதி காரிகள் ஆதரிப்பர். கடின உழைப்பால் கரையேறும் வார மிது.



**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

மரத்திற்கு வந்து செல்லும் பறவைகள் போலில்லாமல் அதனுடன் இணைந்து வாழும் கிளைகளை போல் பாசமானவர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளை களால் மதிப்புக் கூடும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்கு வீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். குழந்தைப் பாக்யம் உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் திறமையைக் கண்டு வியப்பார். சம்பளநிலுவை கைக்கு வரும். பாதை மாறாது பயணிக்கும் வாரமிது.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மரங்கள் பலவகையானாலும் அதன் நிழல் ஒன்று தான், என்பதை அறிந்த நீங்கள் மனிதர்களின் நல்ல மனதை மட்டும் பார்ப் பவர்கள். வேற்று மதத்தவரால் நன்மை பிறக்கும். உடன் பிறந்தவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண் டாம். மனைவியின் உடல் நிலை பாதிப்புறும். அண்டை வீட் டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வீர்கள். ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர் கள். வேலைச்சுமை அதிகரித்தாலும் மனநிறைவு கிட் டும். போராட்டங்களைக் கடந்து சாதிக்கும் வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

மரத்தின் இலைகள் பழுத்து உதிர்ந் தாலும் மீண்டும் துளிர்ப்பதை போல, நீங் கள் தோல்வியால் வீழ்ந்தாலும் மறுபடியும் எழுவீர்கள். வீட்டில் கல்யாணம் ஏற்பாடாகும். குடும்பத் தாருடன் மனம் விட்டுப் பேசிச் சிரிப்பீர்கள். பிள்ளை களின் பாசம் அதிகரிக்கும். சொத்து வாங்குவது, விற்ப தில் இருந்து வந்த வில்லங்கம் விலகும். எதிர்பாராத பயணங்களால் அலைச்சல், செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தி யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பிள்ளை கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். தைரியமான முடிவுகளை எடுக்கும் வாரமிது.



**உத்ராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திரு வோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

மரம், வைப்பவனுக்கு கனியையும், வெட் டுபவனுக்கு நிழலையும் தருவதைப் போல, நீங்கள் எதிரிக்கும் நல்லதையே நினைக்கும் பரந்த மனசுக்காரர்கள். தடைபட்ட காரியங்களில் வெற் றியுண்டு. குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். சிந்தித் துச் செயற்படப்பாருங்கள். பிள்ளைகளுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் லாபத்தைப் பெருக்குவீர்கள். வேலையாட்களை விட்டுப் பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் பதவி உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் வாரமிது.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

மரத்தடி நிழலில் படித்ததையும், மண் வாச னையையும் மறவாத நீங்கள் ஒரு போதும், சொகுசு வாழ்வில் சுகமடையாதவர்கள். திட்ட மிட்ட காரியங்கள் கைக்கூடும். பணப் பற்றாக் குறையும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பணத்தை சேமிக்க முடியாத அளவிற்கு செலவுகள் வரும். பிள்ளை களின் வருங்காலம் குறித்த கவலைகள் வரும். வெளியூர் பயணங்களால் மனநிம்மதி கிட்டும். வாடிக்கையாளர்களு டன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு உண்டு. சக ஊழியர்களைப் பற்றிக் குறைக் கூற வேண்டாம். தட்டித் தடுமாறிக் கரையேறும் வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மரத்தடியில் இளைப்பாறுவதைவிட மரக் கன்றுகளை நட்டு பராமரிக்கும் தொலை நோக்குச் சிந்தனையாளர்கள் நீங்கள் தான். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். பிரபலங்கள் நண்பர்களா வார்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வெளிநா டிலிருப்பவர்களால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர் களுடன் மனவருத்தம் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். பங்குதாரர்கள், வாடிக்கையா ளர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோ கத்தில் வேலை இரட்டிப்பாகும். சின்ன சின்ன வாய்ப்புகள் வரும். வளைந்துக் கொடுத்துப் போக வேண்டிய வாரமிது.



## மூக்குத்தியின் ரகசியம்

ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக் காற்றுக்குச் சக்தி அதிகம்.

இதனால் பெண்கள் மத்தியில் நிற்பவர்களுக்கு அசௌ கரியமாக இருக்கும் இதனால் பெண்கள் மூக்குக் குத்தி கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்குக் குத்துவதினாலும், காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளி யேறுகின்றன.

உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந் தத் துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தைக் கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும்.

அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். சிறுமியர் மூக்குத்தி அணி வதில்லை. பருவப் பெண்களே அணிகிறார்கள்.

ஏனெனில் பருவ வயதை அடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப் படுகிறது.

மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலைவலி, மூக்குச் சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள், மனத் தடுமாற்றம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் பேரைக் கொன்ற அரை வைத்தியன்

"ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்பது தான் "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்று ஆகிவிட்டது.

முற்காலத்தில் நம் நாட்டில் சித்த வைத்தியம் சிறப்பாகவும், சீராகவும் இருந்து வந்தது. அதை அடிப் படை யாகவும், வைத்தியர்களை மன தில் வைத்தும் சொல்லப்பட்டது தான் இந்தப் பழமொழி.

வைத்தியன் என்பவர் குறைந்த பட்சம் 50,000 வேர், செடி, கொடி களை எடுத்து இலைகளைப் பறித்து ஆய்வு செய்திருக்க வேண்டும். அது போல, குறைந்தபட்சம் ஆயிரம் வேரையாவது கொன்றிருந்தால் தான் அரை வைத்தியனாகவாவது ஆகி யிருக்க முடியும் என்ற அடிப்படை யில் எழுந்ததுதான் இந்தப் பழமொழி. *

# பாதுகாப்பு வலயம்



காலமை வெள்ளனையே நியூஸ் வலு வேகமாகப் பரவத் தொடங்கிற்றுது. அரைத்தூக்கம் கால்த்தூக்கத்திலயிருந்த சனமெல்லாத்தையும் இந்த நியூஸ் தான் அடிச்செழுப்பிச்சுது. நீக்கிலாப்பிள்ளையையும் இந்த நியூஸ் தான் அடிச்செழுப்பிச்சுது. நித்திரை முழுதாக முறியாத மயக்கம் ஒரு பக்கம். எதையுமே கொன்போர்ம் பண்ணமுடியாத நாட்டு சிற்றிவேசன் ஒரு பக்கமெண்டு போட்டு ஆளைக் குழப்புது. தலையை உதறிப் போட்டு மனிசியைக் கேட்டார். "என்ன உனக்கு வடிவாத் தெரியுமே..." அது மனிசி சீறத் தொடங்கீற்றுது. "உங்களுக்குத்தான் ஒரு பூராயம்! வெளியால வந்து பாருங்கோவன். ரெண்றுக்கயே படுத்திருந்தால் தெரியுமே..."

இரவு ஒரு சத்தம் கேட்டதுதான். பிள்ளை அதைக் கனவு எண்ட மாதிரி நினைச்சுக் கொண்டார். இப்ப பார்த்தால் அது கனவில்லை. உண்மையிலயே கெலிகொப்டர்தான் போல. ரெண்றை விட்டு வெளியில வந்தார்.

றோட்டில இப்ப கொஞ்ச நாளாக சனம் திருவிழா மாதிரி. அப்பிடி இப்பிடி அசைய ஏலாது. உந்த மன்னார், முழங்காவில், பூநகரி, கிளிநொச்சி, மாங்குளம் ஈறாக இருந்த சனமெல்லாம் இப்ப இந்த ஏரியாவிலதான். விசுவமடுவுக்கும் புதுக்குடி யிருப்புக்கும் இடையில. சந்திக்குப் போனால் எல்லாம் தெரியும் என பிள்ளை சந்தியை நோக்கி நடக்கத் தொடங்கினார்.. பின்னால இரண்டு பெட்டையள் "ஓமாமடி... இரவு போட்டதாம். நான் பார்க்கயில்ல.. அண்ணதான் சொன்னதடி.. அப்பிடி இருக்கிறது நல்லது தானேயடி.. நாங்கள் பின்னேரம் போறம்... நீங்கள் வரேல்லயே...?"பிள்ளை நின்றார். "என்னவா மடி பிள்ளையள்.. கெலி நோட்டீஸ் போட்டது உண்மையே.."

அதுகள் ஒரு சாங்கமாகப் பிள்ளையைப் பார்த்தன. ஒருத்தி "ஓமோம் அங்கிள்" என்று விட்டு வாயைப் பொத்தியபடி மற்றவளின் சட்டையைப் பிடிக்க இருவரும் சிரித்துக் கொண்டு ஓடிச்சுதுகள். பிள்ளைக்கு பெரிய புதினமாக இருந்தது. இப்ப என்ன நடந்தது என்று இதுகள் இப்பிடி வெட்கப்பட்டுக் கொண்டு ஓடுதுகள். லவ் பண்ணப் போறன் எண்டு சொன்னாலும் சரி, ரேப் பண்ணப் போறன் என்று சொன்னாலும் சரி, எல்லாத்துக் கும் சிரிக்குங்கள் போல என யோசித்துக் கொண்டு லண்டன் ஹோட்டலுக்குள்ள உள்ளட்டார்.

கவுண்டரில இருந்த [illegible] ஹோட்டல் ஓணர் அமாவாசை, பெரிய சத்தமாக பு[illegible]களின் குரலை விட்டு விட்டு ரேடியோவுக்குப் பக்கத்தில காதை வைச்சிருந்தார். அதில புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுப்பினம் என்ற பாட்டு போய்க் கொண்டிருந்தது. மேசையில் தட்டி சத்தத்தைக் குறைக்குமாறு சைகை செய்தார். சத்தத்தைக் குறைத்தபடி "புதிசா பாதுகாப்பு வலயம் அறிவிச்சிருக்கிறான். இரவு ஹெலி நோட்டீஸ் போட்டதெல்லே.. இந்தா இதிலை கிடந்தது. இப்பதான் மகன் கொண்டு போறான்" என்றார்.

பிள்ளைக்கு எல்லாம் கிளியறாகீட்டுது. இரவு கேட்ட சத்தம் கனவில்லை. உண்மையிலேயே ஹெலிதான் வந்து போயிருக்கிறது. போனது மல்லாமல் நோட்டீஸ் வேற போட்டிருக்குது. உடையார் கட்டுச் சந்திக்கு அங்காலை கைவேலி வரைக்கும் இடது பக்கம் பாதுகாப்பு வலயமாம். பிள்ளைக்கு பெரிய யோசனை. பாதுகாப்பு வலயத்துக்குப் போறது சரி. அது பெரிய வேலையில்லை. இரண்டு தடியை நட்டு தறப்பாளை இழுத்துக்கட்டுறதுதானே. செல், கிபீர் பிரச்சினை இருக்காதா எண்டதுதான் டவுட்டாக இருந்தது. எதுக்கும் வீட்டுக்குப் போவம். மனிசிக்காரியோட டிஸ்கஸ் பண்ணிப் பார்த்தால் தெரியும் என வீட்டுக்குப் போனார்.

பிள்ளை வீட்டுக்குப் போக, அங்க எல்லாம் ரெடி சகலத்தையும் மூட்டை கட்டி ரென்ரையும் கழட்டியாச்சு, நேரத்துக்கே போனால் தான் பாதுகாப்பு வலயத்துக்க நல்லதொரு இடம் பிடிக்கலாம் எண்டது மனிசிக்காரியின்ர நிலைப் பாடு. மகனும் அதைத்தான் சொன்னான். மகள் தான் பின்னடிச்சாள். அவளின்ர நடவடிக்கையை பிள்ளையும் கவனிச்சுக் கொண்டுதான் வாறார். பக்கத்தில ரென்ற் அடிச்சிருக்கிற உருத்திர புரக்கறனின்ர பொடியனுக்கும் இவளுக்கும் றூட் ஓடறதை, காலம் கெட்டுக்கிடக்குது. நாடோடியள் மாதிரி கூட்டமாக இருந்தால் பிரச்சனை வரும்தான். இந்தச் சிற்றிவேசனில எங்களாலையும் ஒண்டும் செய்யேலாது. பெட்டை வயிற்றில வாயில வாங்கிக் கொண்டு வந்து நிக்காமல் விட்டால் சரி எண்டதுதான் பிள்ளையின்ர பொலிசி. கொஞ்சநேரம் அங்கே இங்க போக்குக் காட்டி பின் பக்கம் போய் அவனோடு கதைச்சுப் போட்டுத்தான் வெளிக்கிட்டாள். ஆளுக்கொரு சைக்கிளில சாமானுகளை வைச்சுத் தள்ளிக்கொண்டு பிள்ளை தலைமையில குடும்பம் வெளிக்கிட்டது.

மழை நேரத்தில ரோட்டால வெள்ளம் ஓடுமாப் போல யும் சின்னச்சின்ன ரோட்டுகளால வாற கிளை வெள்ளங் கள் அதில வந்து சேருறது மாதிரியும் ரோட்டில சனமிருந் தது. வரிசையில உள்ளட்டால் சரி. முன்னுக்குப் பின்னுக்கு அரக்கேலாது.

புதுக்குடியிருப்பின் பக்கம் மூண்டு கிலோ மீற்றர் போயிருப்பினம். பின்னேரம் ஆச்சுது. பிள்ளைக்கு சீ எண்டு போச்சுது. இதென்ன கேவலங்கெட்ட வாழ்க்கை எண்டு யோசித்தார். மகள் அழத்தொடங்கீட்டாள். தாய் தான் சமாளித்துக் கொண்டு வந்தாள். உடையார் கட்டு சேர்ச் கழிய வாற ஒழுங்கைக்குள்ள பிள்ளை திரும்பினார்.

ஒரு காணியிலயும் இடமில்லை. தாயும் மகளும் றோட்டுக்கரையில இருக்க பிள்ளையும் மகனும் இடம் தேடிப்பாத்தினம். வாழ்க்கை வெறுத்தது தான் மிச்சம். ஒரு 12க்கு 12 அடி இடமில்லை. கக்கூசோ கிணறோ வேண்டாம். ரென்ரடிக்க 12க்கு 12 அடி இடம் கிடைச்சால் போதுமெண்டு சனம் நிக்குது. பொழுதுபடுகுது. பிள்ளையாலும் ஏலாமல் போயிட்டுது. அன்றிரவு றோட்டுக்கரையிலயே படுத்தினம். இதுகள் மாதிரி இன்னும் ஏராளம் சனம் படுத்திருக்குது. கொஞ்சம் தள்ளியிருந்த பொடியன் ஒருத்தன் பிள்ளையின்ர பெட்டையையே பாத்துக் கொண்டி ருந்தான். அன்றிரவு பிள்ளைக்கு நித்திரையே இல்லை.

அடுத்த நாளும் பிள்ளை இடம் தேடிப்பார்த்தார். ஒண்டும் சரிவரேல்லை. கெதியா தறப்பாள் அடிச்சு முடியுங்கோ. பெட்டைக்கு இண்டைக்கு சுகமில்லையெண்டு மனிசி வேற நச்சரிக்குது. பிள்ளை பார்த்தார் இனிச்சரிவராது எண்டு உடையார்கட்டு குளத்தின்ர தண்ணீர் ஓடுகிற வாய்க்கால் அணையில நின்ற மரத்துக்குக் கீழே ரென்ரடிச்சார். நாலு தென்னோலை கொண்டு வந்து சுற்றிக்கட்டினார். வீடு ரெடி.

வீடு சரிக்கட்டி பிள்ளை மூண்டு நாள்தான் ரெஸ்ட்டாக இருந்தார். மூன்றாம் நாள் பிள்ளையின்ர மனிசின்ர அன்ரியிட்ட குடுத்து அவன் பிள்ளையின்ர மனிசின்ர அன்ரியிட்டக் குடுத்து அவ தன்ர மச்சானிட்ட குடுத்து அவன் பிள்ளையின்ர சினேகிதன் ஒருதனிட்ட குடுத்து எழுதப்பட்ட கடிதம் இது. அதில பிள்ளையின்ர மூத்த பெடியன் காயப்பட்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில இருக்கிறான் என்ற தகவல் வந்தது. மகன் காயப்பட்டிட்டான் என்று மனிசிக்காரி ஒப்பாரி வைக்குது. அண்ணன்காரன் காயப்பட்டு பதினொரு நாள் எப்பிடி தவிச்சிருப்பானோ என்று தங்கச்சிக்காரியும் தம்பிக்காரனும் குழறுதுகள். பிள்ளை புதுக்குடியிருப்புக்கு வெளிக்கிட்டார்.

பிள்ளையின்ர மூத்தபொடியன் கனகாலமாக இயக்கத்தில இருக்கிறான். ஏதோவொரு அடிபாட்டுக் குறூப். நெடுகலும் லீவிலையும் வரமாட்டான்.

பதினொரு நாள் எண்டால் இப்பவும் அங்கை தான் இருக்கிறானோ, இடம் மாற்றியிட்டாங்களோ தெரியாது என்ற கலக்கம் பிள்ளைக்கு. இப்ப கடும் அடிபாடு நடக்கிறதால நிறையக் காயக்காரர் வருகினம். அதால கனநாள் வைச்சிருக்க மாட்டினம் எண்டு சனம் கதைச்சுதுகள்.

குழந்தை யேசுவை நினைத்துக் கொண்டு ஆசுப்பத்திரிக்க உள்ளட்டார். இயக்கவாட் முழுக்க சல்லடை போட்டார். இல்லை. காயம்பட்ட சனம் இருக்கிற இடத்தில பார்த்தார். இல்லை. பக்கத்து இடம், அதுக்குப் பக்கத்து இடம் எண்டு, பிரசவவாட் மட்டும் தேடினார். ஆளில்லை. கண்ணில அம்பிடுற எல்லாரையும் விசாரித்தபடி வந்தார். கடைசியாகத்தான் ஒருத்தன் சொன்னான் அவன் காயம் மாறி வேற இடம் போயிட்டான் எண்டு. அந்த வேறிடம் அவனுக்கும் தெரியாது.

பிள்ளை ஆஸ்பத்திரிக்கு வெளியால வர தூரத்தில் ஷெல்லடி கேட்டது. ஒன்று இரண்டு சத்தமல்ல. விடாமல் கேட்டுக் கொண்டிருக்குது. சத்தம் வாற பக்கத்தைப் பார்த்தால் உடையார் கட்டுப்பக்கம் போல இருந்தது. பிள்ளைக்கு சின்னக்கலக்கம் பிடிச்சது. வேகமாக சைக்கிளை உழக்கிக் கொண்டு வந்து புதுக்குடியிருப்பு சந்திகடக்க உடையார் கட்டில் பயங்கர ஷெல்லடியாம் எண்டு சனம் கதைச்சுக்கொண்டு போகுது பிள்ளை செபம் சொல்லிக் கொண்டு சைக்கிளை மிதித்தார்.

கைவேலி காளிகோயில் கடக்க நடுறோட்டில ட்றைக்டர் ஒன்று ஷெல் விழுந்து எரிஞ்சு கொண்டிருக்குது. சனம் சாமான் ஏத்திக் கொண்டு வந்திருக்குதுகள். நாலைஞ்சுபேர் ட்றைக்டரைச் சுத்தி செத்துக் கிடக்குதுகள். பிள்ளை இன்னும் வேகமாக மிதிக்கிறார்.

சுதந்திரபுரம் கடக்க பிள்ளை ஷெல்லடி றேஞ்சுக்க உள்ளட்டிட்டார். அதையேன் கேட்பான். றோட்டு நெடுகலும் சனம் செத்துக்கிடக்குது. ஒரு ட்றைக்டரின்ர றைவ்விங் சீற்றில ஷெல் விழுந்திருக்குது. றைவர் என்ன ஆனான் தெரியாது எண்டு நினைக்க, ஷெல் கூவிக் கொண்டு வந்தது. அப்படியே விழுந்து படுத்தார். றோட்டில ஒருசனம் இல்லை. இருக்கிற சனம் எண்டால் செத்ததுகளும் குறையுயிர்காரரும் தான். இப்பிடியே விழுந்து படுக்கிறது, எழுப்பி ஓடுறதுமாக வீட்டடிக்கு போனார்.

அந்த ஏரியாவையே மல்ரிபரல் துடைச்சு எடுத்திருந்தது. எல்லா இடமும் புகையும் இரத்த நெடிலும். பிள்ளைக்கு தலை சுற்றியது. சமாளித்துக் கொண்டு வீட்டிற்குப் போக தறப்பாள் இல்லை. தறப் பாளுக்கு மேல விழுந்திருக்குது. பிள்ளை குழறிக் கொண்டு ஓட கொஞ்சத் தூரம் தள்ளி மனிசி கிடக்குது. தலையில பாதியில்லை. பிள்ளைக்கு உலகம் சுற்றிச்சுது. சமாளித்துக் கொண்டு நாலு ஸ்ரெப் எடுத்து வைத்தார். பெட்டை ஒரு மரத்துக்குக் கீழே குறையுயிராக அனுங்கிக் கொண்டிருக்குது. பொடியனைக் காணவில்லை. ஓடிஓடித்தேடினார். ஒரு இடமும் இல்லை. கண்ணுக்கு முன்னால துடிக்கிற மகளைக் காப்பாத்துவம் எண்டு அவளைத் தூக்கிக் கொண்டு உடையார்கட்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார். இடையில் இரண்டு மூண்டுதரம் ஷெல் விழ விழுந்தெழும்பிப் போனார்.

ஆசுப்பத்திரி காயக்காரராலை நிரம்பி வழியுது காயம்பட்டவையின்ர கத்தல், சொந்தங்களின்ர கத்தல் எண்டு சகிக்க முடியாமல் இருந்தது. காயம்பட்ட சனத்துக்கு ரி.ஆர்.ஓ காரரும் முதலுதவி செய்து கொண்டிருந்தினம். அதில கொண்டுபோய் மகளை ஒப்படைத்தார்.

மகளை ஆசுப்பத்திரியில சேர்த்தாச்சு என்ற நிம்மதி வர, மகனின்ர நினைவு வந்தது. திரும்பி ஓடிவந்தார். இப்ப கொஞ்சம் ஷெல்லடி குறைஞ்சிட்டுது. ஆசுப்பத்திரி வாசலில வெளியால வர ஊரில பிள்ளையின்ர பக்கத்து வீட்டுக்காரர் குடும்பத்தோட ஓடிப்போய்க் கொண்டிருந்தார். பிள்ளையைக் கண்டதும் 'என்னடாப்பா இதில. புதிசா முள்ளிவாய்க்காலில பாதுகாப்பு வலயம் அறிவிச்சிருக்கிறானாம். எல்லாரையும் கூட்டிக் கொண்டு கெதியாப்போ' என்று சொல்லி விட்டுப்போனார். ✱

சிறுகதை

யோ.கர்ணனின் "தேவதைகளின் தீட்டுத் துணி" சிறுகதைத் தொகுதியிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சுடர்






## வழிப்போக்கனும் புலியும்



வேட்டை யாடி உணவைத் தேட முடியாத நிலையில் வயது முதிர்ந்த புலி ஒன்று பசியுடன் இருந்தது.



புலி ஒரு மாலையை வைத்துக்கொண்டு ஞானி போல் மந்திரம் சொன்னது. அப்பொழுது அவ் வழியால் வந்த ஒரு வழிப்போக்கனை கூவி அழைத்து மாலையைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டது.



புலியைப் பார்த்து அருகே செல்லப் பயந்த வழிப்போக்கன் உன்னை எப்படி நம்புவது என்று கேட்டான். இப்போது உயிர்களைக் கொன்று தின்பதை விட்டு விட்டேன். நான் செய்த பாவங்களுக்காக உதவி செய்யப் போகிறேன் என்றது.



புலியின் பேச்சை நம்பி அருகிலே சென்ற வழிப்போக்கனைப் புலி பாய்ந்து கொன்று தின்றது.
பகைவர்களின் பேச்சை நம்பக்கூடாது.

## புத்தகம்



புத்தகம் தமிழ்ப் புத்தகம் - கல்வி
புகட்டும் வண்ணப் புத்தகம்
நித்தமும் தமிழ் கற்றிட - பொருள்
நீதி வழங்கும் புத்தகம்

படங்கள் பார்க்க புத்தகம் - நல்ல
பாடம் படிக்கப் புத்தகம்
இடங்கள் மக்கள் வாழ்ந்திடும் - கதை
எழுதி வடித்த புத்தகம்

கவிதை நல்ல நாடகம் - சிறு
கட்டுரை பெரும் காவியம்
புவியின் அழகு சொல்லிடும் - வாழும்
புத்தகம் தமிழ்ப் புத்தகம்.

- உமாபாரதி.





க.சங்கீத்,
யா/மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.



க.ரூபன்,
வடுவைத்தத புலோலி தெற்கு, புலோலி.

## குறும்புக்காரன் குட்டீஸ்



## புத்திசாலி ஓணான்





பாலியாற்றுக்கு அருகே ஒரு பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டிலே ஒரு சிறிய மரத்தில் சிலந்தி ஒன்று கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அது இரையைத் தேடும் பொருட்டு, கூட்டின் அருகே வலை ஒன்றையும் அமைத்து இருந்தது. அவ் வலையின் பக்கமாக வரும் சில பூச்சி, புழுக்கள் வலையின் மேல் சிக்கிக் கொள்ளும். சிக்கிய இரையைச் சிலந்தி இலகுவாகப் பிடித்துத் தின்றது.

இதை அம் மரத்தில் இருந்த ஓணான் வியப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தது. ''இப்படி ஒரு சிலந்தி வலை என்னிடம் இருந்தால் நானும் இலகுவாக இரை தேடிக் கொள்ளலாம்'' என நினைத்தது. பின் சிலந்தியைப் பார்த்து நண்பரே! இந்தச் சிலந்தி வலையை எனக்குத் தருவாயா? என்று ஓணான் அன்பாகக் கேட்டது. சிலந்தி மகிழ்வோடு ''வலையை எடுத்துக் கொள்ளும்'' என்றது. உடனே ஓணான் சிலந்தியின் உதவிக்கு நன்றி கூறியது.

பின் ஓணான் தனது வாலை வட்டமாக வளைத்து, அந்த வட்டத்திற்குள்ளேயே சிலந்தி வலையைச் சிதையாமல் எடுத்துக் கொண்டது. மரத்தில் இருந்து மெதுவாகக் கீழே இறங்கி வந்தது. அதே மரத்தடியில், ஓணான் ஆடாமல், அசையாமல் படுத்துக் கொண்டது. அந்தப் பக்கமாக வந்த சில பூச்சி, புழுக்கள் ஓணானின் வாலில் இருந்த சிலந்தி வலையில் அகப்பட்டுக் கொண்டன. அதைக் கண்ட ஓணானுக்கு அளவிலா மகிழ்ச்சி உண்டானது. பின் அது தனது கழுத்தை வளைத்து, இரையை வாரி, வாரித் தின்றது. ஓணானின் பசியும் நீங்கியது. ✱

- இரா.செல்லத்துரை பேரம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# அம்மா! நான் உன்னைச் சாக விடமாட்டேன்



**கடும் மழை; புயல் அபாய அறிவிப்பு வேறு. தனது பத்து வயது மகன் டோனியின் பள்ளிக்கூட விளையாட்டு நிகழ்வுக்காக மகன் டோனியை அழைத்துச் சென்ற தாய் ஹெலன் மகனுடன் வீடு திரும்பியபோது வழியில் அவர்கள் மழை வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.வெள்ளத்தில் அள்ளுண்டு சென்ற அவர்கள் ஒருவாறு தம்மைத் தற்காத்துக் கொண்டாலும் எதிர்பாராத வகையில் தாய் ஹெலன் நீர் நிரம்பிய பெரும் பள்ளமொன்றினுள் வீழ்ந்து விடுகிறாள்.**

ஹெலனின் தீனக்குரலையும் நீரின் சளக் சளக் என்ற சப்தத்தையும் இலக்காக வைத்துக் கொண்டு குட்டையை நோக்கித் தாவினான் டோனி. இதற்குள் சக்தியெல்லாம் இழந்து நாலைந்து முறை நீரில் மூழ்கி எழுந்ததோடு சேறு கலந்த தண்ணீரும் ஹெல னின் வயிற்றுக்குள் போய்விட்டது. திடீரென ஒருமெல்லிய கை தன் தலையைத் தாங்குவதை அவள் உணர்ந்தாள். யாரென்றே தெரியவில்லை.

குட்டை யில் பாய்ந்த டோனிக்கு ஆண்டவன் உத விக்கரம் நீட்டினார். அவனது பாசத்துக்கும், அம்மா வைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறிக்கும் ஆண் டவன் இறங்கி வந்ததாகத்தான் கொள்ள வேண்டும். டோனி யின் கையில் அம்மாவின் தலை சிக்கியது. நீச்சல் பழ கும் போது பல முறை காலை உதைத்து உதைத்து மிதந் ததை நினைவுக்குக் கொண்டு வந்தான். அசுர வெறி யோடு அம்மாவின் குட்டையான தலை மயிரையும் அவள் அணிந்திருந்த மேல் சட்டையிலிருந்த பெல்ட் டையும் தடவிப் பற்றிப் பிடித்துக் கொண்டு அந்த இருளிலும் காலை உதைத்து உதைத்து நீந்தத் தொடங்கினான்.

இலக்கு என்ன என்றும் தெரியவில்லை. எங்கே போய்ச் சேரப்போகிறோம் என்பதும் தெரியவில்லை. அவனது நீச்சல் பயிற்சியின் அரங்கேற்றம் அங்கே அந்தச் சூழ்நிலையில் நடந்தேறியது. நீந்தினான்! நீந்தினான். ஒரு கையில் தாயின் தலைமயிர். இன்னொரு கையும் காலும் நீந்தி முன்னேற உதவின. கற்பனையை விட அதிசயம். பெரிய நீச்சல் வீராங்கனைகளாலேயே முடியாத காரியம். எப்படி இந்தப் பத்து வயதுச் சிறுவனால் முடிந்தது? இதை யாரால் விளக்க முடியும்? தண்ணீர் குடித்திருந்தும் சோர்வடைந்தும், காயமடைந்தும் இருந்த ஹெலனின் உணர்விழந்த உடலை இழுத்துச் செல்வது மிகமிகக் கடினம். இது கூட கடவுள் அருள்தானே? எவ்வளவு நேரம் அப்படி நீந்தினேனோ தெரியவில்லை. ஒரு மணி அல்ல. இரண்டு மணி அல்ல. கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் வரை இருக்கலாம்.

கடைசியில் விடிந்து கொண்டு வரும் நேரமாக இருந்தது. நீரின் ஓட்டமும் உதவி செய்ததால் அந்த நேரம் அவர்கள் மிகவும் சேறாக இருந்த, ஆனால் ஒரு அடி கூடத் தண்ணீர் இல்லாத பகுதிக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் காரை விட்டிருந்த இடத்திலிருந்து இது ஏறத்தாழ இரண்டு மைல் தூரமிருக்கும்.

சேறும் சகதியுமாகத் தண்ணீரும் நிறைந்த அந்தச் சதுப்பு நிலத்திலே அப்படியே கிடந்தார்கள், எங்கே போவது, என்ன செய்வது என்று தெரியவில்லை. விடிந்து கொண்டு வந்தது. நேரம் அதிகாலை 5.30 ஆக இருக்கலாம் என்று ஹெலன் நினைத்தாள். இருவரும் இவ்வளவையும் தாங்கிக் கொண்டு மயக்கமடையாமல் இருந்த நிலைக்கு யார் காரணம்? அவனன்றி அணுவும் அசையாதல்லவா?

மெல்லிய வெளிச்சம் பரவியதுமே டோனி சுற்று முற்றும் பார்த்தான். அவன் கண்கள் விரிந்தன. சில யார் தூரத்துக்கப்பால் ஒரு வீடு தெரிந்தது. எப்படியும் அந்த வீட்டுக்குப் போனால் உதவி கிடைக்கலாம். தாயை உலுக்கி அவளையும் அணைத்தபடி மிகுந்த சிரமத்துடன் மெதுமெதுவாக நடந்து அந்த வீட்டை அடைந்தார்கள்.

ஆனால் வீட்டில் ஒருவருமே இல்லை. முன் பக்கம் பூட்டிக் கிடந்தது. மழை இப்போது முழுமையாக நின்று விட்டிருந்தது. தாயை முன்வராந்தாவில் கிடத்தி விட்டு வீட்டின் பின்புறம் போன டோனி ஒரு வைக்கோல் போர் அங்கிருந்ததைக் கண்டான். அதிலிருந்து வைக்கோலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் எடுத்து வந்து முன்வராந்தாவில் பரவி ஒருமெத்தையைப் போல் செய்து ஹெலனை மெதுவாக அதில் படுக்கவிட்டான். மேலும் கொஞ்ச வைக்கோலைப் பிரித்து அவளின் உடல் மேல் போட்டான்.

''அம்மா இது உங்களை உஷ்ணமாக வைத்திருக்கும் அமைதியாக இருங்களம்மா?'' விம்மலுடன் கூறிய அவனை அப்படியே கட்டிப்பிடித்துக் கொஞ்ச வேண்டும் போலிருந்தது ஹெலனுக்கு. ஆனால் அவளால் முடியவில்லை. என்ன தவம் செய்தேன் இப்படியொரு மைந்தனைப் பெற? அப்போது டோனி வெளிச்சத்தில் அம்மாவைப் பார்த்தான். அவளது இடது கையில் தசை கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. உடலெங்கும் திட்டுத் திட்டாக இரத்தம், கைகள் வீங்கி உப்பிப் போயிருந்தன. வலது கையிலும் காயம். அவளது முகம், உடல் எல்லாம் வெளிறிப் போயிருந்தன. கண்களில் அரை மயக்கம் தெரிந்தது.

''அம்மா நாங்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போயே ஆக வேண்டும். எங்களைத் தேடி வருபவர்கள் கண்ணில் நாங்கள் படவேண்டும். எப்படியாவது பொறுத்துக் கொண்டு வீதிப்பக்கம் போவோம் அம்மா. வாருங்கள்''.

வார்த்தைகளால் விபரிக்க முடியாத வலியாலும் வேதனையாலும் ஹெலனால் உடலை அசைக்க முடியவில்லை. டோனி தொடும் போது வலியால் உயிர் போயிற்று. எப்படியோ வலது கையை ஊன்றி டோனியின் உதவியுடன் தத்தித் தத்தி நடந்து மெதுவாக இருவரும் வீதிக்கு வந்தார்கள்.

அதற்குள் அவர்களைத் தேடிப் புறப்பட்ட நாலைந்து பேர் டிக் ராட்ஜனின் வழிகாட்டலில் அந்தப் பகுதிக்கு அதிஷ்டவசமாக வரவே இவர்களைத் தேடிவந்தோர் கண்ணில் இருவரும் பட்டார்கள். உடனடியாகவே தாயும் மகனும் அம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச் செல்லப்பட்டார்கள். இந்த ஆபத்து நேரிட்டு 8 மணி நேரத்துக்குப் பிறகே அவர்கள் மீட்கப்பட்டார்கள்.

ஆஸ்பத்திரியில் தாயின் நிலை தெரியாமல், அவள் அபாய கட்டத்தைத் தாண்டியதைத் தெரிந்து கொள்ளாமல், எந்தச் சிகிச்சைக்கும் உட்பட டோனி பிடிவாதமாக மறுத்துவிட்டாள். தாய்க்கான உடனடி அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவளுக்கு அபாயம் இல்லை என்று டாக்டர் சொன்ன பிறகு தான் அப்படியே ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்து நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்து மெதுவாக மயக்க நிலைக்கும் போனான். அவனது மனோதிடமும் தாயைக் காப்பாற்ற வேண்டுமென்ற வெறியும், ஆண்டவனின் கருணையும் தான் அவனை வியக்கத்தக்க இந்த சாதனையைப் புரியவைத்தது.

இது நடந்து ஏறத்தாழ எட்டு மாதங்களின் பின்னர் டெக்ஸாஸ் நகரிலே நடந்த ஒரு மிகப் பெரிய விழாவில் வீரப் பதக்கம் அணிவித்து டோனி கௌரவிக்கப்பட்டான். சாரணர் இயக்கத்தில் அவன் இருந்தபடியால் சாரணர்களுக்கே ஒரு கௌரவம் என்று அவன் போற்றப்பட்டான். 90 வருடச் சரித்திரத்தைக் கொண்ட சாரணர் இயக்கத்தில் இப்படியான வீரப்பதக்கங்களைப் பெற்றது டோனியோடு சேர்ந்து ஆக நான்கே பேர்தான் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. எத்தனையோ முக்கிய புள்ளிகள் , ஏறத்தாழ இருநூறு பேருக்கு மேல் குழுமியிருந்த அந்த விழாவில் அணிவிக்கப்பட்ட பதக்கத்தோடு தலை நிமிர்ந்து நின்ற அவனைக் கண்ட அவனது பெற்றோரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

டோனியின் தகப்பன் மெதுவாகக் குனிந்து அவன் காதில் கண்ணீருடன் கூறினார். ''நீ தான் எங்கள் வீட்டின் தலைவன்!''. ✱ ✱ ✱

பேபி

## நிறத்தீர்மானம்

*சராசரியாக நம் தோலின் பரப்பளவு 21 சதர மீற்றர். நிறை ஒன்பது றாத்தல். அதில் இருக்கிற இரத்தக் குழாய்களின் நீளம் மட்டும் 11 மைல். உலக அளவில் நம் இறந்த மேல் தோலில் இருந்து விழுகிற செதிள்களின் அளவு எவ்வளவு தெரியுமா? நம்ப மாட்டீர்கள். அது பில்லியன் தொன். ஒரு நிமிடத்துக்கு நமது தோல் 50, 000 கலங்களை உதிர்க்கிறது. 50,000 வருடங்களுக்கு முன் யாருக்குமே வெள்ளைத் தோல் கிடையாது. கறுப்பானவர்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று மிகக் குளிரான இடத்தில் வாழத் தொடங்கிய பிறகு அத னால் அவர்களின் சந்ததிகள் மெல்ல மெல்ல 'மெலனின்' என்ற நிறமியை இழந்து வெள்ளைத் தோலுக்கு மாறிவிட்டார்கள்.*

*ஒரு நாளைக்கு 150 விதமான இரசாயனங்கள் நமது தோலில் படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவற்றை நம்முடைய தோல் கிரகித்துக் கொள்கிறது. உடல் நிறையில் 16 சதவிகிதத்தை தோல்தான் கொடுக்கிறது.* ★

## குண்டானால் கருச்சிதைவு ஏற்படும்

**மாறி வரும் உணவுப் பழக்க வழக்கத்தினால் உடல் பருமன் பிரச்சினை என்பது தற்போது அதிகரித்து வருகிறது. ஆண், பெண் வித்தியாசம் இன்றி அனைவருக்கும் இருக்கும் இந்த உடல் பருமன் பிரச்சினை ஒபசிடி என்று அழைக்கப்படுகிறது.**

**இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பெண்களுக்கு உடல் பருமனால் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

**அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பிரிவு விஞ்ஞானி வைத்தியர் இன்னா லாண்டர்ஸ் தலைமையில் நடத்தப்பட்ட ஆய்வில், உடம்பு குண்டாக இருக்கும் பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பது தெரிய வந்தது.**

**கர்ப்ப காலத்தில் பெண்களின் உடல் எடை அதிகரிப்பது வழக்கம்தான். ஆனால் கர்ப்பம் தரிக்கும் முன்பே பெண்களின் உடல் எடை அதிகமாக இருந்தால் அது கருவுக்கு ஆபத்தைத் தரும். அதிக உடல் எடை காரணமாக ஏற்படும் உடலியல் மாற்றங்கள் கருச்சிதைவுக்கு வழி வகுக்கின்றன. இதை உடல் குண்டான பெண்களின் டி.என்.ஏ. பரிசோதனைகள் மூலம் உறுதி செய்துள்ளோம் என்கிறார் மருத்துவர் இன்னா.** ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய அப்பிள்



நீங்கள் படத்தில் பார்ப்பதுதான் உலகிலேயே மிகப்பெரிய - அதிக நிறை கொண்ட அப்பிள்.

ஜப்பானில் ஹிரோ சகி நகரத்தைச் சேர்ந்த சிசாட்டோ இவாஸ்கி என்பவரின் தோட்டத்தில் காய்த்த இந்த அப்பிளின் நிறை 1.849 கிலோகிராம்.

வழமையாகவே இந்தளவு நிறை கொண்ட அப்பிளைப் பார்த்திராததால் இவாஸ்கியின் தோட்டத்துக்கு தினமும் ஏராளமானோர் சென்று இந்தப் பருத்த அப்பிளைப் பார்வையிடுகின்றனர்.



# அசத்தும் விமான நிலையம்

உலகின் மிகப் பெரிய மாதிரி விமான நிலையம் ஜேர்மனியில் ஹம்பேர்க் நகரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்விமான நிலையத்தை கட்டி முடிக்க ஆறு வருடங்கள் எடுத்து உள்ளன. 3.5 மில்லியன் யூரோ வரை செலவாகி உள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான விமானங்களை நிறுத்தி வைக்கும் வசதியும், தேவையேற்படின் அவற்றை பழுது பார்க்கும் அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# அழியவில்லை ரோம்



2011 ஆம் ஆண்டு மே மாதம் 11 திகதி பாரிய பூமி அதிர்வு ஏற்பட்டு ரோம் நகரம் முற்றாக அழிந்துவிடும் என வானியல் நிபுணரும் விஞ்ஞானியுமான ரபலி பெண்டன்டி எதிர்வு கூறியிருந்தார். இவரின் எதிர்வுகூறல்கள் பலவும் பலித்திருந்ததால், ரோம் அழிவது நிச்சயம் என ரோம் நகர மக்கள் பலர் அஞ்சினர்.

1979 ஆம் ஆண்டு ரபலி இறந்து போனாலும் ரோமைப் பற்றி அவர் சொன்ன எதிர்வு கூறல் பலித்துவிடுமோ என்ற கருத்து எல்லோரிடமும் ஏற்பட்டிருந்தது. ஆனால் நல்ல வேளையாக ரபலி சொன்னபடி பூகம்பத்தால் அன்றைய தினம் ரோம் நகரம் அழியவே இல்லை.


**மை வெளிச்சம்**

குடும்பப்பிரச்சினை,வெளிநாட்டு பிரயாணம், விவாக விவகாரம் தீர்த்து வைக்கப்படும். பிறந்த திகதி,மாதம்,வருடம் கொண்டு வரவும். நேரம் 9 - 5 வரை.

**ஈஸ்வரி**
Dr.P. Thiyagaraja (J.P.Hons)
21-1/1,ஜம்பட்டா வீதி, கொழும்பு -13
தொலைபேசி:2440606 Fax: 0094-1-2440606
www.eswari.com

வெளிநாட்டில் உள்ளவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். வேலதிக கட்டணமின்றி நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.






வ த் த ளை








**வசதியாக வாழ்ந்திடுங்கள்**

இச்சிறந்த படைப்பானது நகரின் சகல வசதிகளையும் உள்ளடக்கிய மத்திய நகர பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகர எல்லைக்கு, சர்வதேச பாடசாலைகளுக்கு (LYCEUM, OKI மற்றும் பல...) மற்றும் கடற்கரைக்கு 5 நிமிடத்தில் செல்லக்கூடிய வகையில் **வத்தளை நகரில்** அமைந்துள்ளது.

அனைத்து வசதிகளையும், பாதுகாப்பினையும், மனதினை கவரும் அழகிய வேலைப்பாடுகளையும் கொண்ட இவ்வழகிய 07 வீடுகளும் நவ நாகரீகத்துக்கும், சொகுசு வாழ்க்கைக்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை 11.9 மில்லியன் ரூபாவிலிருந்து.

இறைவழிபாடு தளங்கள் | பாடசாலைகள் | வைத்திய சாலைகள் | வங்கிகள் | ஷொபிங் | உணவு விடுதி | விடுதிகள் | கடற்கரை | சுபர் மார்கட






KELSEY HOMES

25 வருட வீடு கட்டுமான துறையில் சிறந்தோர்

75, அர்னல்ட் ரத்னாயக்க மாவத்தை, கொழும்பு 10.
மின்னஞ்சல்: sales@kelsey.lk இணையம்: www.kelsey.lk






**Möbel Ferrari**

**HINWIL**

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

**0.0%** Direkt Finanzierung


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, மே 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.